வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily







## வலி.வடக்கில் வீடுகள் இடிப்பு: நிறுத்துமாறு ஜனாதிபதி பணிப்பு

### சம்பந்தனிடம் லலித் வீரதுங்க தெரிவிப்பு

கொழும்பு, நவ.2
வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள தமிழ்மக்களின்வீடுகள் இடித் தழிக்கப்பட்டு வருவதை உடன் நிறுத்துமாறு யாழ். மாவட்ட இராணுவக் கட்ட ளைத் தளபதி மேஜர் ஜென ரல் மஹிந்த ஹத்துருசிங்க வுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள் ளார் என்று தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் தலை வரும் நாடாளுமன்ற உறுப்பின ரும் இரா. சம்பந்தன் நேற்று மாலை 'உதயனி'டம் தெரி வித்தார்.

தனக்கும் ஜனாதிபதிக்கும் வியாழனன்று தொலைபேசி ஊடாக நடைபெற்ற பேச்சை யடுத்தே ஜனாதிபதி மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள் ளார் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் கூறி னார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:
வலிகாமம் வடக்கில் தமிழ் மக்களின் வீடுகள் கடந்த ஒரு வாரமாக இடித் தழிக்கப்பட்டுவரு வது தொடர்பில்

21

## நினைப்பதை சாதிப்பதற்கு ஜனாதிபதியால் முடியாது

### வடக்கு முதல்வர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.2
"பாதிக்கப்பட்ட மக்கள் சார் பாக நாங்கள் முன்வைக் கும் கோரிக்கைகளை ஏற் றுக்கொண்டு நடைமுறைப் படுத்துவது ஜனாதிபதியின் கடமை. அதை விடுத்து தான் நினைத்ததைத்தான் செய் வேன் என்று அவர் சொல் லக் கூடாது" -

இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதல மைச்சர் க.வி.விக்னேஸ் வரன். யாழ்.நகரிலுள்ள அவ ரது உத்தியோகபூர்வ இல் லத்தில் சந்தித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

வடக்கு ஆளுநரை மாற்று மாறும்,படைக் குறைப்பைச் செய்யு

21

# இசைப்பிரியா உயிருடன் பிடிக்கப்பட்டே படுகொலை

## இராணுவத்தின் இன்னொரு போர்க்குற்றம் புதிய காணொலியை வெளியிட்டது சனல் 4



லண்டன், நவம்பர் 2
தமிழீழ தேசியத் தொலைக் காட்சியின் செய்தி வாசிப்பாள ரான இசைப்பிரியா, போரின் இறுதிக் கட்டத்தில் இராணுவத் தினரால் உயிருடன் பிடிபட்டுக் கோரமாகக் கொலை செய்யப் பட்டுள்ளமை தொடர்பான புதிய போர்க் குற்ற ஆதாரத்தை 'சனல் 4' தொலைக் காட்சி நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளியிட்டுப் பரபரப்பை ஏற் படுத்தியுள்ளது.

இறுதிக் கட்டப் போரின்போது போர்க்குற்றங்கள் இழைத்த தாக இலங்கை அர சின் மீது குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட் டுள்ள நிலையில் இலங் கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்தக்

21

## இராணுவம் மறுப்பு

கொழும்பு, நவ.2
உயிருடன் பிடித்தே இசைப்பிரி யாவை இலங்கைப் படையி னர் இறுதிப்போரில் படுகொலை செய்துள்ளனர் எனக்கூறி சனல் - 4 தொலைக்காட்சி நிறுவனம் வெளியிட்டுள்ள புதியதொரு போர்க் குற்ற ஆதாரத்தையும் இலங்கை இராணுவம் மறுத்துள்ளது.

21




## வடக்கு முதல்வரின் அழைப்பை ஏற்றார் இந்தியப் பிரதமர்

கொழும்பு, நவ.2
வடக்கு மாகாணத்துக்கு வருகை தருமாறு முதலமைச் சர் க.வி.விக்னேஸ்வரன் விடுத்த அழைப்பை இந்தி யப் பிரதமர் மன்மோகன் சிங் ஏற்றுக்கொண்டுள்ளார்.

பொதுநலவாய மாநாட்டுக்கு தான் வருகை தந்தால் வடக்கு மாகாணத்துக்கும் பயணம் மேற்கொள்வேன் என்று பிரத மர் மன்மோகன் சிங் தெரி வித்துள்ளார் என்று 'த எக் கணமிக் ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கு மாகாண முதலமைச் சர் க.வி.விக்னேஸ்வரன் இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடந்த மாதம் கடி தம் ஒன்றை அனுப்பியிருந் தார்.

அதில், வடக்குத் தேர்தலை நடத்த உதவிய இந்தியாவுக்கு நன்றி தெரிவித்திருந்த அதே வேளை வடக்கு மாகாணத் துக்கு வருகை தருமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்தக் கடிதம் கிடைக்கப் பெற்றதாக பிரதமர் அலுவ லக ஊடகப்பேச்சாளர் உறுதிப் படுத்தியிருந்தார்.

வடக்குக்கு வருமாறு முதல மைச்சர் விக்னேஸ்வரன் விடுத்த அழைப்பை இந்தியப் பிரதமர் ஏற்றுக்கொண்

21

## பெண் கொலை: சந்தேகத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், நவ.2
நாச்சிமார் கோயிலடியில் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்ட நிலையில் அவரது கொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் ஒருவர் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரது இரத்த மாதிரி எடுக்கப்பட்டு மர பணு பரிசோதனைக்கா அனுப்பி வைக் கப்பட்டுள்ளதாக காங்சேன்துறைப் பிரிவு றை பொலிஸ் அத்தியட்சகர் தய மந்த விஜயசிறி தெரிவித்தார் நேற்று வெள்ளிக்கிழமை நடந்த

21

## ஜனாதிபதியின் தீபாவளி வாழ்த்து

கொழும்பு, நவ. 2
தீபத்திருநாளாம் தீபாவளி, தீயவற்றை நீக்கி நன்மையையும், அறியாமையை நீக்கி அறிவுடைமையையும், இருளை நீக்கி ஒளியையும் வெற்றி கொள்வதை

21

## வடக்கு மக்கள் வாழ்வில் ஒளி பிறக்கட்டும்

யாழ்ப்பாணம், நவ.2
வடக்கு மக்களின் வாழ்வில் ஒளி பிரகாசிக்க இறைவன் அருள்புரிய வேண்டு மென்று, வடக்கு மாகாண முதலமைச் சர் க.வி.விக்னேஸ்வரன் விடுத்துள்ள தீபா வளி வாழ்த்துச் செய் தியில் தெரிவித்துள்

21

## வடக்கு மாகாண முதல்வருக்கு ஐரோப்பிய நாடுகளும் அழைப்பு

### நேரில் விடுத்தார் ஒன்றியத் தூதுவர்

யாழ்ப்பாணம், நவ.2
ஐரோப்பிய நாடுகளுக்கு வருகை தருமாறு வடக்கு மாகாண முதலமைச்சரிடம் நேரில் அழைப்பு விடுத்தார், ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டேவிட் டெலி.

இலங்கை மற்றும் மாலை தீவுக்கான ஐரோப்பிய ஒன் றியத்தின் புதிய தூதுவராகக் கடந்த மாதம் பொறுப்பேற்றுக் கொண்ட டேவிட் டெலி, யாழ்ப் பாணத்துக்கு முதற்தடவை யாக நேற்று வெள்ளிக் [illegible]

வடக்கு மாகாண முதலமைச் சர் க.வி.விக்னேஸ்வரனை, யாழ்ப்பாணத்திலுள்ள அவ ரது உத்தியோகபூர்வ இல் லத்தில் நேற்றுமாலை இரண்டுமணிநேரம் சந்தித்துக் கலந்துரை யாடினார் ஐரோப்

21

## புத்தூர் யுவதி கொலை; தொடர்கிறது விசாரணை

யாழ்ப்பாணம், நவ.2
புத்தூர் கிழக்கில் கிணற்றிலி ருந்து யுவதி ஒருவர் சடல மாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தொடர்ந்து விசா ரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் அறிவுறுத்தியுள் ளது. அது தொடர்பான விசா ரணை தொடர்வதாக காங் கேசன்துறை பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் தமயந்த விஜய சிறி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் புத்தூர் கிழக்கைச் சேர்ந்த அமிர்தலிங்கம் மைதிலி (வயது 26) என்பவரே சடல மாக மீட்கப்பட்டார்.

அவரது இறப்புத் தொடர்பில் மர்மம்

21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்களிப்பு முறை குறித்து அறிவூட்டுதல் அவசியமானது

## தேர்தலைக் கண்காணிக்கும் மத்திய நிலையம் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், நவ.2
தேர்தலின் போதான வாக்களிப்பு முறை குறித்து வாக்காளர்களுக்கு அறிவூட்டும் நடவடிக்கைகள் தேர்தல் திணைக்களத்தினால் வழங்கப்பட வேண்டும் என்று தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் மத்திய நிலையமும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து அந்த நிலையம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நடைபெற்று முடிந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலில் மொத்த வாக்களிப்பில் 7.5 சதவீத வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இது மிகவும் உயர்வான எண்ணிக்கையானது.

வாக்காளர்களை அறிவூட்டல் மற்றும் வாக்களிக்கும் முறை தொடர்பான அறிவூட்டல் என்பவற்றில் தேர்தல் திணைக்களம் மற்றும் ஏனைய தேர்தல் கண்காணிப்புநிறுவனங்கள் என்வற்றால் மேற்கொள்ளப்பட்ட பணிகளை தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் மத்திய நிலையம் அங்கீரிக்கின்றது.

எதிர்காலத் தேர்தல்களில், தேர்தல் பரப்புரைகளை ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே அதிகாரிகளினாலும் அரசியல் கட்சிகளாலும் இந்த விடயம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் - என்றுள்ளது.

இதேவேளை வடக்கு மாகாண சபைத் தேர்தலை கண்காணிக்க வருகை தந்த தெற்காசியத் தேர்தல் கண்காணிப்புக் குழுவும் தனது பரிந்துரைகளில் வாக்காளர்களுக்கான அறிவூட்டல் அவசியம் எனக் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# தமிழருக்கும், சிங்களவருக்கும் எப்போதும் ஒரே கலாசாரம் தான்

## காங்கேசன்துறைப் பொலிஸ் அத்தியட்சகர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், நவ.2
இலங்கையில் தமிழர், சிங்களவர்கள் அனைவருக்கும் ஒரே கலாசாரம் தான். தமிழரைப் போன்றே சிங்களவர்களும் வெற்றிலை, சோறு சாப்பிடுகிறார்கள். அவ்வாறிருக்கையில் வடக்கு மாகாண முதலமைச்சர் இங்குள்ள சிங்களப் பொலிஸாருக்குத் தமிழ்க் கலாசாரம் தெரியாது என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அதனை நான் எதிர்க்கிறேன்.

இவ்வாறு தெரிவித்தார் காங்கேசன்துறைப் பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் தமயந்த விஜய ஶ்ரீ.

நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்குள்ள சிங்களப் பொலிஸாருக்குத் தமிழர் கலாசாரம் தெரியாது என்பது உட்பட பல விடயங்களை வடக்கு மாகாண முதல்வர் க.வி.விக்னேஸ்வரன் மாகாண சபையின் கன்னி அமர்வு உரையில் தெரிவித் திருந்தார்.

**"தமிழரைப் போன்றே சிங்களவர்களும் வெற்றிலையும், சோறுமே சாப்பிடுகிறார்கள்.**

இது தொடர்பில் செய்தியாளர்களால் பொலிஸ் அத்தியட்சகரிடம் கேள்வியெழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்கள் சிங்களவர்கள் அனைவருக்கும் கலாசாரம் ஒன்றுதான். நாம் அதை வேறுபடுத்திப் பார்க்கவில்லை. தமிழருக்கோ அல்லது சிங்களவருக்கோ ஒரு பிரச்சினை ஏற்பட்டால் இருவருக்கும் நாம் உதவுவோம்.

ஐரோப்பியர்கள் இலங்கைக்கு வந்த பின்னர் தான் தமிழர்கள், சிங்களவர் பலர் கிறிஸ்தவ மதத்துக்கு மாறியிருந்தனர். பொலநறுவை, அனுராதபுரம் மட்டுமன்றி கதிர்காமத்திலும் கூட பௌத்த விகாரைகளை அண்மித்து இந்துக்கோயில்கள் அமைக்கப்பட்டிருப் பதை காணலாம். தமிழர் களை விடச் சிங்களவர் முருகனை அதிகமாக வழி படுகிறார்கள்.

அவ்வாறு தமிழர், சிங்களவர்கள் அனைவருக்கும் ஒரே கலாசாரமாக இருக்கும் போது சிங்களப் பொலிஸாருக்கு தமிழர் கலாசாரம் தெரியாது என்று முதலமைச்சர் கூறுவதை ஏற்க முடியாது என்றார். (த-4)

# தமிழரின் துன்பங்கள் நீங்கட்டும்

தமிழர் தம் வாழ்வில் துன்பங்கள் நீங்கிப் புது வாழ்வு பிறக்க இன்றைய தீபத் திருநாள் வழி சமைக்கட்டும் என்று வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து கிராமிய அபிவிருத்தி வர்த்தக மற்றும் வாணிப அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் "இன்றைய தினம் தீபஒளித் திருநாளைக் கொண்டாடும் அனைத்து சகோதர, சகோதரிகளுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அசுரன் அழிந்ததைக் கொண்டாடும் நாம் எமது மண்ணில் அக்கிரமங்கள் அழியவும் இந்த நாளில் வேண்டிக் கொள்வோம். தமிழர்கள் தமது வாழ்வில் துன்பங்கள் நீங்கி சந்தோசமாக வாழ பிரார்த்திக்கின்றேன்.

# அம்பனில் மணல் அகழ்வை உடன் தடுத்து நிறுத்துங்கள்

## வடக்கு விவசாய அமைச்சிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம் நவ.02
வடமராட்சி கிழக்கின் அம்பன் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மணல் அகழ்வைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ள மக்கள், இதனைத் தடுத்து நிறுத்துமாறு முன்னைய காலங்களில் தாம் கோரியபோது ஆயுத முனையில் மிரட்டப்பட்டதாகவும் சுற்றுச் சூழல் அமைச்சர் பொ. ஐங்கரநேசனிடம் முறையிட்டுள்ளனர்.

அம்பன் பகுதிக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை சென்ற அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அந்தப்பகுதி மக்களை அம்பன் பொது நோக்கு மண்டபத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கடல்கோள் வடமராட்சி கிழக்குப் பகுதியைத் தாக்கிய போது கரையிலிருந்து ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரத்துக்கு தமது கிராமத்துக் குள் கடல் நீர் உள்ளே வந்ததாகக் குறிப்பிட்ட மக்கள், கடற்கரையை அண்டிய பகுதிகளில் கடல் மட்டத்தைவிட ஆழமாக மண் அகழப்பட்டுக் கொண்டிருப்பதால் தாங்கள் இந்தப் பகுதிகளில் வாழ்வதே எதிர்காலத்தில் சாத்தியமில்லாமல் போய்விடும் என்ற அச்சத்தையும் வெளிப்படுத்தினர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் காலத்திலும் மண் அகழ்வு மேற்கொள்ளப்பட்டதுதான். எனினும் அவர்கள் சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சங்கத்தை நிறுவி இயற்கைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவு மண்ணையே ஏற்ற அனுமதித்தார்கள்.

அத்துடன் அதன் மூலம் கிடைத்த பணத்தில் கணிசமானதை வடமராட்சி கிழக்கு மக்களின் கல்வி, சுகாதார மேம்பாட்டுக்குப் பயன்படுத்தினார்கள் என்பதையும் மக்கள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினர்.

ஆனால் தற்போது தங்கள் கிராமத்தின் பாதுகாப்புக் கருதி கடற்கரையை அண்மித்த பகுதிகளில் மணல் அகழ்வை நிறுத்தக் கோரிய போதெல்லாம், மணல் ஏற்றும் தரப்பினரால் தாம் அச்சுறுத்தப்பட்டதாகவும், பல தடவைகள் ஆயுத முனையில் மிரட்டப் பட்ட தாகவும் அமைச்சிடம் கூறினர்.



தமிழ் தேசியக் கூட்டமைப்பு மாகாணசபை யின் கட்சிப் பொறுப்பை ஏற் றிருக்கும் இந்த வேளையி லாவது மணல் அகழ்வை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

இதற்குப் பதிலளித்து உரையாற்றிய அமைச்சர் பொ. ஐங்கரநேசன், வடமராட்சி கிழக்கில் மட்டுமல்ல வடக்கு மாகாணம் முழுவதுமே எந்தவிதத் தொலை நோக்கும் இல்லாது பணம் சம்பாதிப்பதை மட்டும் குறியாகக் கொண்டு மணல் அகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

மணல் அபிவிருத்திக்குத் தேவை என்பதை யாரும் மறுக்கமுடியாது. அதே சமயம் அந்த மணல் அகழ்வால் மக்கள் வாழ்ந்து வந்த இயற்கைச் சூழல் மோசமாகப் பாதிக்கப்பட்டு மக்கள் வாழ முடியாத சூழல் உருவாகுவதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. இதிலும் குறிப்பாக யாழ் குடாநாட்டின் நிலத்தடிநீர் உவராகும் அபாயத்தில் இருக்கும் நிலையில் கடல் நீரை வலிந்து வரவழைக்கும் விதத்தில் கரையோர மணல் திட்டுக்களை அகற்றுவதற்கு எவருக்கும் இடமளிக்க முடியாது என்றார்.

இதன் பின்னர் அமைச்சர் மற்றும் சக மாகாணசபை உறுப்பினர்களான க.சயந்தன், ச.சுகிர்தன் மற்றும் பிரதேச சபைத் தலைவர் யூ.சஞ்சீவன் ஆகியோர் மணல் அகழப்படும் இடங்களையும் சென்று பார்வையிட்டனர். (த-5)

# றோலர் தொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் மாட்டினர்

நாச்சிக்குடா கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட றோலர் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த குருநகரைச் சேர்ந்த மீனவர்கள் நாச்சிக் குடா மீனவர்களிடம் வகை யாக மாட்டிக்கொண்டனர்.

மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஐந்து வள்ளங்களைச் சுற்றி வளைத்த நாச்சிக்குடா மீனவர்கள் மூன்று வள்ளங்களையும் அதிலிருந்த 14 மீன வர்களையும் மடக்கிப் பிடித்து நாச்சிக்குடா பொலிஸாரி டம் ஒப்படைத்தனர்.

இவர்களைத் தலா 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்லுமாறு உத்தரவிட்ட கிளிநொச்சி மாவட்ட நீதிவான் வழக்கு விசாரணையை ஒத்வைத்துள்ளார்.

குருநகரைச் சேர்ந்த கடற்றொழிலாளர் ஐந்து மீன்பிடி வள்ளங்களில் சென்று நாச்சிக்குடா கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட றோலர் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தமையை அவதானித்த நாச்சிக்குடா மீனவர்கள் ஐந்து வள்ளங்களையும் சுற்றி வளைத்து மடக் கிப் பிடிக்க முற்பட்ட போது மூன்று வள்ளங்கள் மட்டும் அகப்பட்டன. ஏனைய இரு வள்ளங்களும் தப்பியோடி விட்டன. கடலுணவுகளுடன் கைப்பற்றப் பட்ட வள்ளங்களையும் அவற்றிருலிருந்து 14 மீனவர்களையும் நாச்சிக் குடா மீனவர் பொலிஸாரிடம் ஒப்படத்தனர்.

இது குறித்து விசாரணையில் ஈடுபட்ட நாச்சிக்குடா பொலிஸார் 14 பேரையும் கிளிநொச்சி நீதிவானிடம் முன்னிலைப்படுத்தினர்.

இவர்களைத் தலா 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்லுமாறு உத்தரவிட்ட நீதிவான் வழக்கு விசாரணையை ஒத்திவைத்துள்ளதுடன் பழுதடைந்த நிலையிலுள்ள மீன்களை அழித்துவிடுமாறும் மீன்பிடி வள்ளங்களை வழக்கு முடியும் வரை கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்குமாறும் மீன்பிடி வலைகளைக் கடற்றொழில் திணைக்களத்தில் ஒப்படைத்து மறுதவணைக்குச் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார். (த-115)

# கோப்பாய் விளையாட்டுவிழா

கோப்பாய் கண்ணகை அம்மன் சனசமூக நிலையமும் ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை இடம் பெறவுள்ளது. காலை நிகழ்வாக மரதன் ஓட்டப் போட்டியும் மாலை நிகழ்வாக மைதான விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

# காணாமற்போனோர் தொடர்பில் இம்மாதம் 30 வரை முறையிடலாம்

யாழ்ப்பாணம், நவ.2
காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு முறைப்பாடுகள் அனுப்பும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் இந்த மாதம் 30 ஆம் திகதி வரை முறைப்பாடுகள் செய்யமுடியுமென்று ஆணைக்குழு அறிவித்துள்ளது.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதியிலிருந்து 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி வரையில் வடக்கு - கிழக்கு இரு மாகாணங்களிலும் காணாமற்போனவர்கள் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி ஆணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணைக்குழுவுக்கு தமது முறைப்பாடுகளை நேரடியாகவோ அல்லது தபாலிலோ அல்லது மின் அஞ்சல் ஊடாகவோ அனுப்பி வைக்க முடியும்.

கடந்த ஒக்ரோபர் 31 ஆம் திகதிக்கு முன்னர் முறைப்பாடுகள் அனுப்பி வைக்கப் பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தாலும் தற்போது இந்த மாதம் 30 ஆம் திகதி வரையில் குறித்த காலம் நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

செயலாளர், காணாமற்போனவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு, இல.9/8, சுரனிமல இடம், கொழும்பு - 06.


மின்னஞ்சல் pcicmp@sltnet.lk என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறரைக் காயப்படுத்திய

# குற்றச்சாட்டில் 33 பேர் கைது

யாழ்ப்பாணம், நவ .2



பிறரை அடித்துக் காயப் படுத்தினர் என்ற குற்றச் சாட்டில் யாழ். மாவட்டத் தில் கடந்த வாரம் 33 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று காங்கேசன் துறைப் பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் தமயந்த விஜயசிறி தெரி வித்தார்.

நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வீடுகளுக்குத் தீ வைத்து நட்டம் ஏற்படுத்தியமை தொடர்பில் 7 பேரும், பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் ஒருவரும், திருட்டுக் குற்றச்சாட்டில் 7 பேரும், கத்தியால் வெட்டிக்காயப் படுத்தியமை தொடர்பில் ஒருவரும், மதுபோதை யில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 9 பேரும், சட்ட விரோதமாக மது விற்பனை செய்த குற் றச் சாட்டில்5பேரும், மது போதையில் கலகம் விளை வித்த குற்றச்சாட்டில் 3 பேரும், பொது இடத்தில் மது அருந்திய குற்றச்சாட்டில் 5 பேரும், சட்ட விரோ தமாக மின்சாரம் பெற்ற குற்றச் சாட்டில் 13 பேரும், சந்தேகத்தின் பேரில் 15 பேரும், விபத்து ஏற்படுத்திய குற்றச்சாட்டில் 2 பேரும், அத்துமீறி வீடு புகுந்த குற்றச்சாட்டில் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ள னர்.

அவரவரது குற்றச்சாட்டுகளுக்கு ஏற்ப நீதிமன்றினால் அபராதம் விதிக்கப்பட்டும் பிணையில் விடுவித்தும் விளக்கமறியலிலும் வைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (4)

கட்டைக்காடு, நித்தியவெட்டை கிராம மக்களுக்கு


# வீட்டுத் திட்டத்தை பெறுவதற்கு அரச காணிகளை வழங்குக

## வடக்கு முதலமைச்சருக்கு கோரிக்கை

வடமராட்சி, நவ.2

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள முள்ளியான் கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த கட்டைக் காடு, நித்தியவெட்டை கிராமங்களில் வசிக்கும் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் தமக்கு வீட்டுத் திட்டத்தைப் பெற்றுக்கொள்ள அரச காணிகளைத் தந்துதவுமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கட்டைக்காடு சென். மேரிஸ் கிராம அபிவிருத்திச் சங்கம் இது குறித்து விடுத்துள்ள கோரிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:-



வடமராட்சி கிழக்கில் மீள் குடியேறிய இக்கிராம மக்களுக்கு வீடற்றோருக்கு வீடுகள் அமைக்கும் வேலைத் திட்டத்தையும், சேதமுற்ற வீடுகளை புனரமைப்பதற்கான வேலைத்திட்டமும் சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தால் முன்னெடுக்கப் படவுள்ளன.

இந்த நிலையில் சொந்தக் காணியற்ற குடும்பங்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் வீட்டுத்திட்டம் வழங்கப்படமாட்டாது என அந்த நிறுவனம் அறிவித்துள்ளது. இதனால் இவ்விரு கிராமங்களையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் காணியற்ற நிலையில் வீடமைப்புத் திட்டத்தை இழக்கவேண்டிய பரிதாபமான நிலை ஏற்பட்டுள்ளது.

கட்டைக்காடு நித்திய வெட்டை கிராமங்களில் போதிய அரச காணிகள் உள்ளன. குறித்த கிராமத்தில் சுனாமித் திட்டத்தில் பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகளைவிட அதன் அருகில் எஞ்சிய காணிகள் உள்ளன.

கடந்தகால போர், சுனாமி போன்றவற்றால் பாதிக்கப்பட்டு மீளக்குடியமர்ந்த மக்கள் வாழ்வாதாரத்தைப் பெற்றுக்கொள்ள ஏதுவாக அரச காணிகளைப் பகிர்ந்தளித்து உரிய காலத்தில் வீட்டுத்திட்டத்தைப் பெறுவதற்கு ஆவன செய்யுமாறு வேண்டுகின்றோம்-எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கோரிக்கை வட மாகாணசபை உறுப்பினர் ச.சுகிர்தன் மூலமாக வடமாகாண முதலமைச்சருக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. (வ-8)





வேலணை மத்திய கல்லூரி தினநிகழ்வும், பரிசளிப்பு விழாவும் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், மாகாண கல்வி அமைச்சர் ரி.குருகுலராசா ஆகியோர் கல்லூரியின் பெயர்வளைவைத் திறந்து வைப்பதையும், கல்லூரி அதிபர் சி.கிருபாகரன், கல்வி அமைச்சர் ரி.குருகுலராசா ஆகியோர் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒருபகுதியினரையும், கல்லூரியில் நீண்டகாலம் ஆசிரிய சேவையாற்றி ஓய்வு பெற்ற திருமதி அரசரட்ணத்துக்கு முதலமைச்சர் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதையும் காணலாம் (ஒ-7)

# கோலாகலமாக நடைபெற்ற வேலணை ம.கல்லூரியின் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ .2

வேலணை மத்திய கல்லூரித் தினமும் பரிசளிப்பு விழாவும் நேற்று வெள்ளிக்கிழமை கல்லூரி அதிபர் எஸ்.கிருபாகரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் ரி.குருகுலராசா, தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.ஜோண்குயின்ரஸ், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், வேலணை பிரதேச சபைத் தலைவர் எஸ்.சிவராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

முன்னதாக முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன்குயின்ரஸ் பொன்னாடை போர்திதுக் கௌரவித்தார். மாகாணக் கல்வி அமைச்சர் குருகுலராசாவுக்கு அதிபர் கிருபாகரன் பொன்னாடை போர்திதுக் கௌரவித்தார். அதைத் தொடர்ந்து மாணவர்களின் பான்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு முதலமைச்சரும் கல்வியமைச்சரும் புதிய நுழைவாயிலைத் திறந்து வைத்து சரஸ்வதி உருவச் சிலையைத் திரைநீக்கம் செய்து மலர்மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து மாணவர்களின் பொய்க்கால் குதிரையாட்டம், கரகம், கோலாட்டம், நடனம் ஆகிய நிகழ்வுகளுடன் விருந்தினர்கள் விழா மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டனர். பாடசாலையில் உள்ள சிவன் கோயிலில் விசேட பூசைகள் இடம்பெற்றன.

முதலமைச்சர் மங்கல விளக்கேற்றி நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார். முதலமைச்சரையும் விருந்தினர்களை யும் வரவேற்று மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. விருந்தினர்களின் உரைகளைத் தொடர்ந்து புலமைப் பரிசில் பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. முதலமைச்சர், கல்வி அமைச்சர்களுக்கான நினைவுப் பரிசில்களை கல்லூரி அதிபர் வழங்கிக் கௌரவித்தார்.

மாணவர்களின் கல்விக்கான உதவி நிதியங்களையும் முதல்வர் ஆரம்பித்து வைத்தார். கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (வ-7)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ரயில்பாதை புனரமைப்பில்

# மூடப்பட்ட பாலம் மீண்டும் அமைக்கும் பணி



கொடிகாமம், நவ.2
கொடிகாமம் ரயில்பாதை புனரமைப்பின் போது மூடப்பட்ட பழைமை வாய்ந்த பாலம் மீண்டும் அமைக்கப் பட உள்ளது. இராமாவில் கந்தசாமி கோயிலுக்கு தென் பகுதியில் அமைந்திருந்த ரயில்பாதைப் பாலமே மீண்டும் அதே இடத்தில் அமைக்கப்படவுள்ளது.

கொடிகாமம் சாவகச்சேரி வரையான ரயில் பாதை புனரமைக்கப்பட்டவேளை, குறித்த பாலத்தின் கட்டுமானங்கள் உடைக்கப்பட்டு அகழ்ந்து எடுக்கப்பட்ட பின்பு அந்தப் பகுதியில் கிரவல் மண் போட்டு மூடப்பட்டது. இதேவேளை அந்தப் பகுதியிலுள்ள கந்தசுவாமி கோயிலின் முன்பாக அமைந்துள்ள வெள்ளம் பாய்ந்தோடும் வாய்க்கால் மூலம் பாயும் வெள்ளநீர் குறிப்பிட்ட ரயில்பாதையின் குறுக்காக அமைக்கப்பட்டிருந்த பாலம் ஊடாகவே பாய்ந்து வெளியேற வேண்டிய நிலையில் பாலம் மூடப்பட்டதை அடுத்து குறிப்பிட்ட கோயிலுக்கு முன்பாக உள்ள வாய்க்காலில் வெள்ளம் தேங்கி நிற்கும் நிலை ஏற்பட்டது. இவ்விடயம் பிரதேச மக்களால் உரிய தரப்பினருக்குச் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து மீண்டும் பாலப் பகுதியில் போட்டு மூடப்பட்ட மண் இயந்திரம் மூலம் அகழ்ப்பட்டு வெளியில் எடுக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (வ-122)

### தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனையின்

# கதிரியக்க இயந்திரம் பழுதடைந்த நிலையில்

வலி.வடக்கு, நவ.2
கடந்த செவ்வாய்க்கிழமை நண்பகல் ஏற்பட்ட மழையுடன் கூடிய இடி முழக்கத்தால் தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவ மனையின் கதிர்இயக்க இயந்திரம் பழுதடைந்துள்ளது. இதனால் புற்று நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.


குறித்த கதிர் இயக்க இயந்திரத்தின் மூலமே புற்றுநோயாளர்களுக்கான கதிர் இயக்க சிகிச்சைகள் வழங்கப்பட்டு வந்தது. தற்போது அந்த இயந்திரம் பழுதடைந்துள்ளமையால் புற்று நோயாளர்களுக்கு கதிர் இயக்க சிகிச்சை வழங்குவதில் பெரியளவிலான நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

எனவே பழுதடைந்த கதிர் இயக்கஇயந்திரத்தைத் திருத்துவதற்கு வைத்திய சாலை நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்ட போதிலும் அது வெற்றியளிக்காத நிலைமையே காணப்படுகின்றது. இதனால் 4 தினங்களாக கதிர் இயக்க சிகிச்சைகள் வழங்க முடியாத நிலைஏற்பட்டுள்ளது.தற்போது கதிர் இயக்க இயந் திரத்தை திருத்துவதற்கு கொழும்பில் இருந்து திருத்துநர்களை வரவழைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (வ-86)

### உரிமைப் போராட்டத்துடன்

# அபிவிருத்தியையும் முன்னெடுப்போம்

### தெரிவிக்கிறார் மாகாணசபை உறுப்பினர் ரவிகரன்



உரிமைப் போராட்டத்தை நாம் தொடர்ந்து முன்னெடுக்கும் அதேவேளை, மக்களுக்குத் தேவையான அபிவிருத்தித் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு முன்னின்று உழைப் போம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முல்லைத் தீவு மாவட்ட மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள் ளார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வெற்றியீட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களை வரவேற்கும் நிகழ்வு முல்லைத்தீவு உடையார்கட்டு குரவில் அ.த.க.பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், வீ.கனகசுந்தரசுவாமி, திருமதி மேரிகமலா குணசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாடசாலை அதிபர் சி.மேகநாதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், மக்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், அபி விருத்தி மாயைகளை நிரா கரித்து தாயக உணர்வுடன், உரிமைகளை வென்றெடுக்க, தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு மாகாணம் தழுவிய ரீதியில் வாக்களித்தமைக்கு நன்றி கள். உரிமைப் போராட் டத்தை முன்னெடுக்கும் அதே வேளை, உங்களுக்குத் தேவையான அபிவிருத்தித் தேவை களையும் பூர்த்தி செய்ய முன்னின்று உழைப் போம்- என்றார். இதன் பின்பு ஏனைய உறுப் பினர்களது உரைக ளும் இடம்பெற்றன. (சு-5)

## குளத்தைப்புனரமைக்குமாறு கோரிக்கை

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள தட்டையர் மலைப் பகுதியில் உள்ள சிவலோக நாதன் குளத்தைப் புனரமைக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். குறிப்பிட்ட குளம் சுமார் 200 ஆண்டுகளாக அணைகள் ஏதுமின்றி முறிகுளமாகவே காணப்படுகின்றது. இதனால் அங்குள்ள மக்களின் விவசாய நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளன. மேலும் இந்தக் குளத்தின் கீழ் காணிகள் இருந்தும் குளம் புனரமைக்கப்படாததால் அவை தரிசு நிலங்களாக மாறிக்காட்சிய ளிக்கின்றன. இந்தக் குளம் புனரமைக்கப்படுமாயின் இங்குள்ள வேறொரு குளத் தின் மூலமும் நீரைப் பெற முடியும். இதனால் இங் குள்ள மக்கள் அதிக பய னைப் பெறுவர். ஆகவே இந்தக் குளத்தை உடனடி யாகப் புனரமைத்து வழங்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)

# கச்சாய் பொது நூலகத்தில்வாசிப்பு மாத நிகழ்வுகள்

தென்மராட்சி, நவ.2
கச்சாய் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளின் இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 9 மணிக்கு நூலக முன்றலில் நடைபெறவுள்ளன.

சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சி.துரைராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.ஜெகூவும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி , பிரதேசசபை செயலாளர் செல்வி இ.தர்சினி, கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.பீ.எதிரிசிங்க ஆகியோரும் கலந்து கொள்வர். இதன்போது கொடிகாமம் கச்சாய் வீதியைச் சேர்ந்த ஐயம்பிள்ளை சின்னையா என்பவர் நூலகத்துக்கு கணினியொன்றை அன்பளிப்பாக வழங்குவார், கச்சாய் பிரிவு மக்களால் நூலகத்துக்கு நூல்கள் அன்பளிப்புச் செய்யப்படவுள்ளன.

நிகழ்வில்கொடிகாமத்தைச் சேர்ந்த கவிஞர் சு.க.நவரத்தினத்தை கௌரவித்தல், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை யில் சித்தி பெற்ற பிரதேசத்தைச் சேர்ந்த 5 மாணவர் களைக் கௌரவித்தல், நூலக சேவை களை அதிகளவு நேரம் பயன்படுத்தியோருக்கு பரிசில் வழங்கல், வாசிப்பு மாதத்தில் நடத்தப் பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் மற்றும் முன்பள்ளிச் சிறார் கள் ஆகியோருக்கு பரிசில் வழங்கல் ஆகியவையும் இடம்பெறும். தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நூலகத்தின் "சுவையூற்று" சஞ்சிகை வெளியீடும் இடம் பெறவுள்ளது. (வ-9)




## மரண அறிவித்தல்



### கந்தையா கனகசபாபதி

முள்ளானை இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கனகசபாபதி நேற்று(01.11.2013) வெள்ளிக்கிழமை அதிகாலை முள்ளானையில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், அரசரட்ணம்-அன்னப்பாக்கியம் தம்பதியரின் மருமகனும், புஸ்பவதியின் அன்புக்கணவரும், கந்தையா இராசநாயகம்(கனடா), காலஞ்சென்ற பொன்னையா இராசலட்சுமி(முள்ளானை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இலட்சுமிகாந்தன்(மானிப்பாய்), காந்திமதி (வவுனியா), யோகமதி (பிரான்ஸ்), மதிவதனி(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இன்பமலர்(மானிப்பாய்), தயாபரன்(வடலியடைப்பு) யோகராஜா(பிரான்ஸ்), சதீஸ்குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும், சர்மிலா, பிரமிலா, கபிலஜீவன், மிதுலா, றூபகா (இலங்கை வங்கி வவுனியா) சிவஜெனன்(லண்டன்), நிமோசன், நிரோசன், நிதர்சன் (பிரான்ஸ்), கவின், செவ்வோன்(லண்டன்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(03.11.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு முள்ளானையில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முள்ளானை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

021-320 7073
முள்ளானை இ[illegible]

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் வேலுப்பிள்ளை

(முன்னாள் கிளை முகாமையாளர், பல நோ.கூ. சங்கம் , கொடிகாமம்)



கச்சாய் அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் வேலுப்பிள்ளை நேற்று (01.11.2013) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான காசித்தம்பி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் பாசமிகு கணவரும் சுதர்சன், பிரகாஸ், தர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் முத்துப்பிள்ளையின் அன்புச் சகோதரனும் கிரிசங்கர், ஜெயந்தினி, காயத்திரி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பங்கயன், சாத்விகாஸ், கிரிசாங்கினி ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.11.2013 ) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்
தொ.பே.: 0773[illegible]03152,
0756[illegible]99102

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வளர்ப்பு மாடுகளால் நெற்பயிர்கள் நாசம்

தென்மராட்சி, நவ.2
தென்மராட்சி தெற்கு மறவன் புலோ, தனங்களப்பு, நாவற்குழி உள்ளிட்ட பகுதிகளிலுள்ள நெல் வயல்களில் வளர்ப்பு மாடுகளால் நெற் பயிர்கள் நாசமாக்கப்படுவதாக நெற் செய்கையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

காலபோக நெற் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் வளர்ப்புக் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு கமநல சேவைகள் நிலையத்தால் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்ட போதும் கால்நடைகளை வளர்ப்போர் அதனைப் பொருட்படுத்தவில்லை.


தனங்களப்பு, மறவன்புலோ, நாவற்குழி ஆகிய பிரதேசங்களிலுள்ள வயல்களில் நெற் செய்கை மேற்கொள்வோரில் பெரும்பாலானோர் தென் மராட்சி பிரதேசத்தின் ஏனைய பகுதிகளில் வசித்து வருகின்றனர். எனவே பகல் வேளையில் கால்நடைகள் வயல்களில் பயிர்களை நாசம் செய்வதைக் கண்காணிக்க தம்மால் முடியவில்லை என்று நெற் செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர். (வ-9)

## உணவு பாதுகாப்பு வாரத்தில் பயன்தரு செயற்பாடுகள்

தென்மராட்சி, நவ .2
தென்மராட்சி பிரதேசத்தில் உணவுப் பாதுகாப்பு வாரத்தில் பல்வேறு செயற்பாடுகளை சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினரும் உள்ளூராட்சி மன்றத்தினரும் சிறப்பாக மேற்கொண்டுள்ளனர்.

கடந்த 21 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த ஒரு வார காலப் பகுதியில் பாட சாலைகள், பொது அமைப்புகள், பொதுமக்கள் மத்தியில்விழிப்பூட்டல், செயற்றிட்டங்கள், கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. அத்துடன் பிரதேசத்தில் உள்ள அனைத்து உணவு கையாளும் நிலையங்கள், சமையலறைகள், உணவுகள் தயாரித்து வழங்கும் இடங்கள் போன்றவற்றில் சுகாதாரப் பகுதியினர் பரிசோதனைகளை மேற்கொண்டனர். (வ-9)



யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் மேடைகள் அமைக்கும் பணி துரிதமாக இடம்பெற்று வருகின்றது. (வ-7)

## மீண்டும் திருத்தத்துக்கு வடதாரகை II

யாழ்ப்பாணம், நவ.2
நெடுந்தீவு கடற்போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டு வரும் அரச படகான வடதாரகை II மீண்டும் திருத்த வேலைகளுக்காகக் கொழும்புக்குக் கொண்டு செல்லப்படவுள்ளதால் அதன் சேவை நேற்று வெள்ளிக்கிழமை நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த படகுச் சேவை நண்பகலில் இடம்பெற்று வந்தது.

எனவே இந்தச் சேவை நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து நேற்றுத் தொடக்கம் குறித்த நண்பகல் சேவையில் தனியார் படகுகள் சேவையில் ஈடுபடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-7)

### சாவகச்சேரி மின்சார சபையின்

## பாவனையாளர் கட்டடம் தனங்களப்பு வீதியருகில்

தென்மராட்சி, நவ. 2
இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி பாவனையாளர் நிலையத்துக்கான புதிய கட்டடம் தனங்களப்பு வீதியை அண்மித்ததாகவுள்ள காணியில் அமைக்கப்படவுள்ளது. அதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி அலுவலகத்துக்கு நிரந்தரக் கட்டடம் இல்லாததால் தனியார் கட்டடங்களை நீண்ட காலமாக வாடகைக்கு எடுத்து

“ ”
சாவகச்சேரி அலுவலகத்துக்கு நிரந்தரக் கட்டடம் இல்லாததால் தனியார் கட் டடங்களை நீண்ட காலமாக வாடகைக்கு எடுத்து அதில் செயற்பட்டு வருகிறது.

அதில் செயற்பட்டு வருகிறது. இந்த நிலையில் சாவகச்சேரி நகர சபைக்குச் சொந்தமான காணி இருப்பின் வழங்கிஉதவுமாறுஇலங்கை மின்சார சபையினர் நகர சபையிடம் கோரியிருந்தனர். அதன் பிரகாரம் கடந்த ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற சபையின் மாதாந்தக் கூட்டத்தில் மீன் சந்தை அமைக்கவுள்ள கட்டடத்துக்கு அருகில் உள்ள ஏழு (7) பரப்புக் காணியை மின்சார சபைக்கு நன் கொடையாக வழங்க முடிவு செய்து அந்தக் காணியில் அலுவலகக் கட்டடம் அமைப்பதற்கான ஆரம்பக் கட்டப் பணிகளை மின்சார சபையினர் மேற்கொண்டுள்ளனர். (வ-9)

## விடுதி பராமரிப்பாளர் பதவி வெற்றிடம்

தென்மராட்சி, நவ.02
யாழ்.மாவட்டச் செயலகத்தால் பராமரிக்கப்படும் விடுதிகளுக்கு பராமரிப்பாளர் பதவிக்கு யாழ்.அரச அதிபரால் ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பான விவரங்கள் யாழ்.மாவட்டச் செயலகத்தால் சகல திணைக்கள அலுவலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. பதவிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 13 ஆம் திகதி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

18 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவராகவும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஆறு பாடங்கள் சித்திபெற்ற விடுதியின் உள்ள, வெளிச் சுற்றாடலை அழகுறப் பேணுதலில் அனு பவம் உள்ள சிங்களம் அல்லது ஆங்கிலம் ஓரளவு தெரிந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-9)

## இறந்த விசுவாசிகள் தினம் இன்றாகும்

கொழும்புத்துறை, நவ.2
உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் இறந்தவர்களை நினைவு கூரும் இறந்த விசுவாசிகள் தினத்தை இன்று சனிக்கிழமை அனுஷ்டிக்கின்றனர். இந்தத் தினத்தையொட்டி யாழ். குடாநாட்டில் அமைந்துள்ள கிறிஸ்தவ சேமக்காலைகளிலும் ஆலயங்களிலும் ஆன்மாக்களின் ஈடேற்றத்துக்கான சிறப்பு வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

இறந்த தமது உறவினர்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ள கல்லறைகளைத் தரிசித்து அவர்களுக்கு அஞ்சலி செலுத்தி வேண்டுதல் செய்யும் சடங்குகள் சேமக்காலைகளில் இடம்பெறும்.

யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் இன்று மாலை 4 மணிக்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமை யில் இறந்தோர் நினைவுத் திருப்பலி இடம்பெறும். அதனைத் தொடர்ந்து குருக்களால் கல்லறைகள் ஆசீர்வதிக்கப்படும். இன்றைய தினம் முழுவதும் மக்கள் சேமக் காலைகளுக்குச் சென்று கல்லறைகளுக்கு மலர்தூவி சுடரேற்றி வேண்டுதல்களில் ஈடுபடுவது சிறப்பான அம்சமாகும். (வ-135)

## 30 வருடங்களாக கவனிக்கப்படாத வீதி

யாழ்ப்பாணம், நவ.2
சாவகச்சேரி கச்சாய் வீதியின் 4 ஆம் குறுக்குத் தெரு கடந்த 30 வருடங்களாக திருத்தப்படாமல் கவனிப்பாரற்ற நிலையில்உள்ளது. இதனால் அந்தப் பகுதி மக்கள் போக்குவரத்தில் ஈடுபடும்போது பெரும் அசௌகரியங்களை எதிர் கொள்கின்றனர்.

குறித்த வீதியின் இரு மருங்கிலும் பற்றைக்காடுகள் நிரம்பிக் காணப்படுவதுடன் கல்லும் முள்ளும் நிறைந்து வீதியால் நடந்து செல்ல முடியாத நிலையும் காணப்படுகிறது. குறித்த வீதியைத் திருத்தித் தருமாறு அந்தப் பகுதி மக்கள் சாவகச்சேரி நகர சபைத் தலைவருக்கு 3 தடவைகள் கடிதங்கள் மூலம் கோரிக்கை விடுத்த போதும் வீதி யைத் திருத்த எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (வ-14)

# கடற்றொழிலாளருக்கு மீன்பிடி உபகரணங்கள்

## மண்ணெண்ணெய் முத்திரை நடைமுறை நிறுத்தப்படும்

வலி.தென்மேற்கு, நவ. 2
மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு வசதியாக அரசால் மானிய அடிப்படையில் வழங்கப்பட்டு வரும் மண்ணெண்ணெய் முத்திரைநிறுத்தப்பட்டு அதன் பெறுமதிக்கேற்றவாறு வள்ளம், வலை போன்ற மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தத் திட்டம் டிசம்பர் மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளதால் கடற்றொழில் அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய சகல ஒழுங்குகளையும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

மண்ணெண்ணெயின் விலை திடீரென்று அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து கடற்றொழிலாளரின் நலன் கருதி இயந்திர வள்ளங்கள் மூலம் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் தடையின்றித் தொழிலை மேற்கொள்வதற்கு வசதியாக தொழிலுக்கேற்றவாறு மானிய அடிப்படையில் மண்ணெண்ணெய் முத்திரை வழங்கப்பட்டு வருகிறது.

மானியமாக வழங்கப்படும் மண்ணெண்ணெய் முத்திரையை சிலர் தவறான முறையில் பயன்படுத்துவதாக அதிகாரிகளுக்குத் தெரிய வந்தமையை அடுத்து, கடற்றொழில் அமைச்சு மண்ணெண்ணெய்க்குப் பதிலாக மீன்பிடி உபகரணங்களை வழங்குவதற்கான மாற்றுத் திட்டத்தை அறிமுகப்படுத்த முன்வந்துள்ளது.

இதற்கமைய ஒருவருட மானிய முத்திரையின் பெறுமதிக்குப் பதிலாக வள்ளம், வலை போன்ற மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான சகல ஒழுங்குகளையும்மேற்கொண்டுள்ள மேற்படி நிறுவனம் கடற்றொழில் அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய கடற்றொழில் அமைப்புக்கள் மூலம் பயனாளிகளைத் தெரிவு செய்ய வுள்ளது. (வ-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைகிறதா காங்கிரஸ்?

## ஜி.கே.வாசன் அவசர மந்திராலோசனை



சென்னை, நவ.2

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கலந்துகொள்ளும் பட்சத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் அவசர மந்திராலோசனை நடத்தவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொதுநலவாய மாநாட்டில் இந்திய அரசு பங்கேற்கக் கூடாது என்ற பிரச்சினையில் தமிழக காங்கிரஸ் இரு அணிகளாக பிரிந்து செயற்படுகிறது. தமிழக நலன் சார்ந்து வாசன் தலைமையில் ஒரு அணி குரல் கொடுக்கிறது. வெளிவிவகாரத் துறை பிரச்சினையில் மாநில உணர்வுகளுக்கு இடமில்லை என இன்னொரு அணி வாதிட்டு வருகிறது. இந்நிலையில் புதுடில்லியில் நடந்த காங்கிரஸ் உயர்மட்ட நிலைக் குழு கூட்டத்தில், பொதுநலவாய மாநாட்டில் பிரதமர் பங்கேற்பார் என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதையடுத்து பிரதமர் மன்மோகன் சிங்கை ஜி.கே. வாசன் நேரில் சந்தித்தார். "பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்க கூடாது. தமிழக மக்களின் உணர்வுகளை என் தந்தை மூப்பனார் தொடர்ந்து கடைப் பிடித்து வந்தார். நானும் அவரது வழியை பின்பற்றி வருகிறேன். தமிழக மக்களின் உரிமையை விட்டுத் தர முடியாது. மற்ற மாநில மக்களுக்கு அளிக்கும் முக்கியத்துவம், தமிழக மக்களுக்கு தரப்படுவதில்லை. இதனால், பொதுமக்கள் பெரிதும் அதிருப்தி அடைந்துள்ளனர், காங்கிரஸ் தொண்டர்களும் விரக்தியுடன் காணப்படுகின்றனர்." என்று வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில் பொதுநலவாய மாநாட்டில் மன்மோகன் சிங் கலந்துகொண்டால் பதவி விலகுவதா? அடுத்தகட்டமாக என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து, தமிழக காங்கிரஸ் முன்னணி தலைவர்களுடன் இன்று வாசன் ஆலோசிக்க உள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ந)

## பாட்னா குண்டுவெடிப்பு குற்றவாளி உயிரிழப்பு

பாட்னா, நவ.2

இந்தியாவின் பாட்னாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய குற்றவாளி தாரிக் உயிரிழந்துள்ளார். பாட்னா ரயில் நிலையக் கழிவறையில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் சிக்கி படுகாயமடைந்த தாரிக் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் தொடர் சிகிச்சை பலனளிக்காமல் தாரிக் மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார் என்று கூறப்படுகின்றது. (ந)

முசாபர்நகர் கலவரம் குறித்த கருத்துக்கு

## ராகுலிடம் விளக்கம்கோரும் இந்திய தேர்தல் ஆணையம்

புதுடில்லி, நவ.2

உத்தரப்பிரதேசத்தின் முசாபர்நகர் கலவரம் தொடர்பாக காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்த கருத்துக்கு இந்தியத் தேர்தல் ஆணையம் விளக்கம் கோரியுள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்பு மத்தியபிரதேசம் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் ராகுல் காந்தி சுற்றுப்பயணம் செய்து தேர்தல் பரப்புரை செய்தார். அப்போது அவர் உத்தர பிரதேச மாநிலம் முசாபர் நகரில் நடைபெற்ற கலவரத்தில் பாரதிய ஜனதா கட்சிக்கு தொடர்பு உள்ளது என்று குறிப்பிட்டு உரையாற்றி இருந்தார்.

ராகுலின் இந்த பேச்சு தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறிய செயல் என்று, கடும் கண்டனம் தெரிவித்த பாரதிய ஜனதா தலைவர்கள் அது குறித்து உத்தர பிரதேச மாநில தலைமை தேர்தல் ஆணையரிடம் முறைப்பாடு தெரிவித்திருந்தனர்.

அதைத் தொடர்ந்து ராகுல் தெரிவித்த கருத்துத் தொடர்பாக விளக்கம் அளிக்குமாறு ராகுல் காந்திக்கு தேர்தல் ஆணையம் கடிதம் அனுப்பியுள்ளது. (ந)

## பீஹார் செல்கிறார் மோடி

பாட்னா, நவ.2

பாட்னா குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்திப்பதற்காக குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி இன்று பீஹார் செல்கிறார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பாட்னாவில் நரேந்திர மோடி பங்கேற்ற பேரணி மற்றும் பொதுக்கூட்டத்தை குறி வைத்து நடத்தப்பட்ட வெடி குண்டு தாக்குதலில் 6 பேர் உயிரிழந்தனர். 82 பேர் படுகாயமடைந்தனர். அவர்கள் பாட்னாவில் பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரையும், காயமடைந்தவர்களையும் நேரில் சந்தித்து ஆறுதல் கூறுவதற்காக நரேந்திர மோடி இன்று பாட்னா செல்கிறார்.

அதற்காக பாதுகாப்பு பணிகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் நரேந்திர மோடி பீஹார் வரும்போது மாவோயிஸ்ட்கள் தாக்குதல் நடத்தக்கூடும் என்று உளவுத்துறையினர் எச்சரித்துள்ளனர். (ந)

## முக்கிய வணிக வளாகங்களை தாக்க தீவிரவாதிகள் சதித் திட்டம்

புதுடில்லி, நவ.2

இந்தியாவில் உள்ள முக்கிய வணிக வளாகங்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு தீவிரவாத அமைப்புகள் திட்டமிட்டுள்ளன என்று இந்திய உளவுத்துறை எச்சரித்துள்ளது.

இதுகுறித்து இந்திய உளவுத்துறை வெளியிட்டுள்ள தகவல் குறிப்பிப்பில், "அண்மையில் கென்யாவில் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதலை ஒத்த தாக்குதல்களை இந்தியாவில் நடத்த தீவிரவாத அமைப்புகள் திட்டமிட்டுள்ளன. மும்பையில் உள்ள முக்கிய வணிக வளாகம் ஒன்றில் தாக்குதல் நடத்துவதற்குத் தீட்டப்பட்ட சதித்திட்டம் தற்போது சிக்கியுள்ளது. ஆதலால் அனைத்து மாநிலங்களும் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)



தமிழ்நாடு சென்னையில் உள்ள தமிழக அரசு அச்சகத்தில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு திடீரென தீ பிடித்தது. ஏழுக்கும் மேற்பட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறையினரின் பெரும் போராட்டத்தின் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. எனினும் பலகோடி ரூபா பெறுமதியான அச்சு இயந்திரங்கள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன என்று கூறப்படுகின்றது. (ந)

## பா.ஜ.கவுடன் கூட்டணி இல்லை; – வைகோ

சென்னை, நவ.2

எதிர்வரும் தேர்தலில் பா.ஜ.கவுடன் கூட்டணியமைக்கவுள்ளேன் என்று ஒருபோதும் நான் கூறவில்லை என்று தெரிவித்துள்ளார் ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ.

ம.தி.மு.க எதிர்வரும் தேர்தலில் பா.ஜ.கவுடன் கூட்டணி அமைக்கவுள்ளது என்று தகவல்கள் பரவி வருகின்றன. அதுகுறித்து விளக்கமளிக்கும்போதே வைகோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"பாட்னாவில் நடந்த குண்டுவெடிப்பு ஓர் கொடுஞ்செயல். அதைக் கண்டித்தே கருத்துத் தெரிவித்தேன். அதனால் பா.ஜ.கவுடன் ம.தி.மு.க. கூட்டணி அமைக்கும் என்று அர்த்தமல்ல" என்று தெரிவித்துள்ளார் வைகோ. (ந)

## பிரதமராகும் வாய்ப்பு மோடிக்கே அதிகம்: கருத்துக் கணிப்பு கூறுகின்றது

புதுடில்லி, நவ.2

சட்டசபைத் தேர்தல் நடக்கவிருக்கும் மாநிலங்களில் நடத்தப்பட்ட தேர்தல் கருத்துக் கணிப்பின்படி நாட்டின் அடுத்த பிரதமராகும் வாய்ப்பு காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுலை விட, பா.ஜ. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடிக்கே அதிகமாக உள்ளது என்று கூறப்படுகின்றது.

மத்திய பிரதேசம், சட்டீஸ்கர், டில்லி மற்றும் ராஜஸ்தான் ஆகிய 4 மாநிலங்களில் சட்டமன்ற தேர்தல் குறித்த கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. 5 மாநில சட்டமன்ற தேர்தல் 2014 நாடாளுமன்றத் தேர்தலின் முன்னோட்டமாக இருக்கும் என கருதப்படுவதால் இந்த மாநிலங்களில் பெறும் வெற்றியின் அடிப்படையில் நாட்டின் அடுத்த பிரதமராகும் வாய்ப்புக் குறித்து ஆய்வு நடத்தப்பட்டது.

யார் பெயரையும் குறிப்பிட்டு கேட்காமல் அடுத்த பிரதமராகும் வாய்ப்பு யாருக்கு அதிகம் என மக்களிடம் கருத்து கேட்கப்பட்டது. இதில் பெரும்பாலானவர்கள் முதலாவதாக நரேந்திர மோடி என்றும், 2ஆவதாக ராகுல் என்றும், 3ஆவதாக சோனியா என்றும் பதிலளித்தனர்.

மோடிக்கு 35 சதவீத வாக்காளர்கள் ஆதரவும், ராகுலுக்கு 17 சதவீதம் பேரும், சோனியாவிற்கு 5 சதவீதம் பேரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

தலைநகர் டில்லியில் மட்டும் மோடிக்கு 42 சதவீதம், ராகுலுக்கு 15 சதவீதம் பேரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ராஜஸ்தானில் மோடிக்கு 40 சதவீதம் பேரும், ராகுலுக்க 19 சதவீதம் பேரும் ஆதரவு தெரிவித்துள்ளனர். ஆனால் மத்திய பிரதேசம் மற்றும் சட்டீஸ்கரில் ஏறக்குறைய இருவரும் சமநிலையிலேயே ஆதரவு பெற்றுள்ளனர்.

அதன் அடிப்படையில் பா.ஜ. ஆட்சிக்கு வந்தால் பிரதமராகும் வாய்ப்பு மோடிக்கே அதிகம் என்றும் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் ராகுலே பிரதமராகும் வாய்ப்பு அதிகம் எனவும் தெரிகிறது.





நாட்டின் அடுத்த பிரதமர் நேர்மையானவராக இருக்க வேண்டும் என 26 சதவீதம் பேரும், திடமானவராக இருக்க வேண்டும் என 15 சதவீதம் பேரும் கருத்துக்கணிப்பில் தெரிவித்துள்ளனர். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் ஆதரவுடனேயே இந்தியாவில் தீவிரவாதம்

## அமெரிக்க முன்னாள் இராணுவத்தளபதி கருத்து

நியூயோர்க், நவ.2
பாகிஸ்தான் ஆதரவுடனேயே இந்தியாவில் தீவிரவாத நடவடிக்கைகள் தொடர்கின்றன என்று தெரிவித்துள்ளார் அமெரிக்க முன்னாள் இராணுவத் தளபதியும் போர் ஆய்வு மையத்தின் தலைவருமான ஜேக் கீனி.

> தற்போதுள்ள பாகிஸ்தான் அரசிடமிருந்து பெரிய அளவில் நாம் எதையும் எதிர் பார்க்க முடியாது. பாகிஸ் தானின் எல்லை பகுதி, தலிபான்களின் புகலிடமாக உள்ளது.

தீவிரவாதம் குறித்து அமெரிக்க நாடாளுமன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

"பாகிஸ்தான் பிரதமராக நவாஸ் ஷெரீப் பொறுப்பேற்ற பின்னரும் பாகிஸ்தான் ஆதரவுடன் இந்தியாவில் தீவிரவாத நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பயங்கரவாத அமைப்புகள் மூலம் பாகிஸ்தான் அரசு இந்தியாவில் இடம்பெறும் தீவிரவாத நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்து வருகிறது.

ஆப்கனில் உள்ள அமெரிக்க படைகள் மீதும், நேட்டோ படைகள் மீதும் தலிபான்கள் தாக்குதல் நடத்துவதற்கு பாகிஸ்தான் ஆதரவளிக்கிறது.

தற்போதுள்ள பாகிஸ்தான் அரசிடமிருந்து பெரிய அளவில் நாம் எதையும் எதிர் பார்க்க முடியாது. பாகிஸ்தானின் எல்லை பகுதி, தலிபான்களின் புகலிடமாக உள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

ஜேக் கீனியின் கருத்துக்கள் தொடர்பில் பாகிஸ்தான் அரசு இதுவரை எதுவிதக் கருத்தும் வெளியிடவில்லை. (ற)

# கண்காணிக்கப்படாது ஐக்கிய நாடுகள் சபை

## உறுதியளித்தது அமெரிக்கா



வொஷிங்டன், நவ.2
அமெரிக்க தேசிய பாதுகாப்பு அமைப்பின் (என்.எஸ்.ஏ) உளவு நடவடிக்கைக்கு உலக அளவில் எதிர்ப்பு எழுந்துள்ள நிலையில் தமது உளவு அமைப்புகளால் ஐ.நா.வின் தகவல் தொடர்புகள் கண்காணிக்கப்படமாட்டுதென்று அமெரிக்கா உறுதியளித்துள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூனின் செய்தித்தொடர்பாளர் மார்டின் நெசிர்கி,

"உண்மையில் நாங்கள் அமெரிக்க அதிகாரிகளுடன் தொடர்பில் உள்ளோம். ஐ.நா.வின் தகவல் தொடர்புகள் இதுவரை கண்காணிக்கப்படவில்லை. இனியும் கண்காணிக்கப்படாது என்று அவர்கள் உறுதி அளித்துள்ளனர். விதிமுறை மீறல்களை தடுப்பது குறித்து சர்வதேச சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐ.நா.வின் உறுப்பு நாடுகள் அனைத்தும் அதனை பின்பற்ற வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

உலக நாடுகளிலுள்ள 35 தலைவர்களின் மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி உரையாடல்களை அமெரிக்க தேசிய பாதுகாப்பு அமைப்பு (என்.எஸ்.ஏ) உளவு பார்த்தது என்று வெளியான தகவல்களை அடுத்து சர்வதேச அளவில் பெரும் சர்ச்சைகள் எழுந்துள்ளன. (ற)

# சிலியில் நிலநடுக்கம்

சண்டியாகோ, நவ.2
சிலி நாட்டின் தலைநகர் சான்டியாகோவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கத்தின் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.6 ஆக பதிவாகியுள்ளது.

கொலம்பிக் நகரில் இருந்து 65 கி.மீற்றர் தொலைவில் பூமிக்கு அடியில் 10 கி.மீ. ஆழத்தில்நிலநடுக்கம்மையம் கொண்டிருந்தது என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சிலியில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுவதுண்டு. 2010 ஆம் ஆண்டு 8.8 என்ற அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தாலும்அதனைத்தொடர்ந்து தாக்கிய சுனாமியாலும் 500க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 2 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் வீடுகளை இழந்தனர். (ற)

# இரசாயன ஆயுத உற்பத்தி இனி சிரியாவில் கிடையாது

## உறுதிப்படுத்தியது கண்காணிப்பு அமைப்பு



டமஸ்கஸ், நவ.2
இரசாயன ஆயுதங்களைத் தயாரிக்கப் பயன்படும் சாதனங்களை சிரியா முற்றிலுமாக அழித்துள்ளது என்று உறுதிப்படுத்தியுள்ளது நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த அரசாயன ஆயுத கண்காணிப்பு தடுப்பு அமைப்பு.

அண்மையில் அமைதிக்கான நோபல் பரிசுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அந்த அமைப்பு இரசாயன ஆயுத உற்பத்தி சாதனங்களை அழிப்பதற்காக சிரியாவுக்கு கடந்த வெள்ளிக்கிழமை வரை காலக்கெடு விதித் திருந்தது.

இந்தநிலையில் அதற்கு ஒருநாள் முன்னதாகவே இந்தப் பணிகள் நிறைவடைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"சிரியாவில் இரசாயன ஆயுதங்களைத் தயாரிப்பதற்கு உதவும் இயந்திரங்கள், இரசாயன குண்டுகளில் விஷ வாயுக்களை நிரப்பும் கருவிகள் முதலியவை முற்றிலுமாக, அழிக்கப்பட்டு விட்டன. அதனை நாங்கள் ஆய்வு செய்து, உறுதிப்படுத்தியுள்ளோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது..

அதன் மூலம் சிரியாவில் இனி புதிதாக இரசாயன ஆயுதங்கள் தயாரிக்கப்படுவது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. (ற)

# சிரியாவின் மீது இஸ்ரேல் திடீர் விமானத் தாக்குதல்

நியூயோர்க், நவ.2
சிரியாவில் ஐ.நா. நிபுணர் குழுவினர் இரசாயன ஆயுத அழிப்புப் பணிகளை மேற்கொண்டு வரும் நிலையில் நேற்று முன்தினம் இஸ்ரேல் சிரியா மீது விமானத் தாக்குதலை நடத்தியுள்ளது.



சிரியாவின் லடாகியா மாகாணத்தில் உள்ள இராணுவ விமான தளத்தின் மீது தாக்குதல் நடத்தப் பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

லெபனானில் உள்ள ஷியா பிரிவு இயக்கத்தினரான ஹிஸ்புல்லா அமைப்புக்கு அனுப்புவதற்காக வைக்கப் பட்டிருந்த ஏவுகணைகள் மீது இந்தத் தாக்குதல் நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது.

தாக்குதல் நடைபெற்றதை உறுதி செய்த அமெரிக்க அதிகாரி ஒருவர் மேலதிக விவரங்களைக் கூற மறுத்து விட்டார். இஸ்ரேலிய அதிகாரிகளும் தகவல் எதுவும் தெரிவிக்கவில்லை.

சிரியாவின் ஜனாதிபதி பஷார் அல் அசாத்துடன் இணைந்துள்ள ஹிஸ்புல்லா இயக்கத்திருக்கான ஏவுகணைகளே இந்தத் தாக்குதலின் இலக்காக இருந்தது என்று மட்டும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

கடந்த மே மாதமும் இஸ்ரேல் இதுபோல் இரண்டு வான்வழித் தாக்குதல்களை மேற்கொண்டது என்றும், அப்போதும் ஹிஸ்புல்லா இயக்கத்தினருக்கான ஈரானின் ஆயுதங்களே அவர்களின் இலக்காக இருந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ற)

# ஜப்பானுக்கு சீனா கண்டனம்

பீஜிங், நவ.2
தமது கடற்படையின் இராணுவப் பயிற்சியின் போது ஜப்பான் போர் கப்பல் இடையூறு செய்ததாக சீனா குற்றம் சுமத்தியுள்ளது.

மேற்கு பசிபிக் பெருங்கடலின் திறந்த கடற்பரப்பில் சீனக் கடற்படை ஒக்ரோபர் 24ஆம் திகதி முதல் இராணுவ பயிற்சி மேற்கொண்டு வருகிறது. இந்த பயிற்சியில் துப்பாக்கி சுடுதல், வெளிநாட்டு கப்பல்கள் மீதான கவனம் செலுத்துதல் உள்ளிட்ட பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில் ஜப்பானின் போர் கப்பல் ஒன்று சீன ராணுவ பயிற்சி பகுதியில் அத்துமீறி நுழைந்து இடையூறு செய்தது என்று சீனா குற்றஞ்சாட்டியுள்ளது.அதுகுறித்து ஜப்பானுக்கு சீனா கடும் கண்டனத்தைதெரிவித்துள்ளது.(ற)

# இணைய நிறுவனத்தில் ஸ்நோடனுக்கு வேலை

மொஸ்கோ, நவ.2
அமெரிக்காவின் இரகசிய உளவுநடவடிக்கையை ஆதாரங்களுடன் வெளிப்படுத்தியவர் எட்வேர்ட் ஸ்நோடன். அமெரிக்க தேசிய பாதுகாப்பு நிறுவனத்தின் முன்னாள் பணியாளரான அவர் தற்போது ரஷ்யாவில் தஞ்சம் கோரியுள்ளார்.



இந்தநிலையில் ரஷ்யாவின் மிகப் பெரும் இணையத்தள நிறுவனம் அவரைப் பணிக்கு அமர்த்தவுள்ளது என்று கூறப்படுகின்றது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஸ்நோடனின் சட்டத்தரணி,

"ரஷ்யாவில் உள்ள மிகப் பெரிய இணையத்தள நிறுவனம் ஒன்றில் ஸ்நோடன் பணியாற்ற இருக்கின்றார். பாதுகாப்புக் காரணமாக அந்தநிறுவனத்தின் பெயரை வெளியிட இயலாது" என்று தெரிவித்துள்ளார். (ற)

# 'போப்'பையும் விட்டு வைக்காத அமெ.?

வத்திக்கான், நவ.2
போப்பாண்டவர் பிரான்ஸிஸின் தொலைபேசி அழைப்புகளையும் அமெரிக்கா ஒட்டுக் கேட்டதாக தகவல்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



அமெரிக்க உளவு அமைப்பான என்.எஸ்.ஏ உலக தலைவர்களின் தொலைபேசி உரையாடலை ஒட்டு கேட்டதாக தகவல் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில் வாத்திக்கானில் உள்ள போப்பாண்டவர் பிரான்ஸிஸின் தொலைபேசி உரையாடல்களும் ஒட்டுக் கேட்கப்பட்டன என்று இத்தாலி நாட்டு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டதுடன், அது தொடர்பாகத் தற்போது விவாதிக்கப்படுவதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் வத்திக்கானின் செய்தித் தொடர்பாளர் வானே வினீஸ்,

"அந்தச்செய்தியில் உண்மை இல்லை, வாத்திக்கான் புனிதமான இடம். அங்கு ஒட்டுக் கேட்பு எதுவும் நடக்கவில்லை" என்று தெரிவித்துள்ளார்.

இத்தகவலை அமெரிக்க தேசிய உளவு அமைப்பும் மறுத்துள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ORGAN, GUITAR**

புல்லாங்குழல் வகுப்புகள்
சினிமாப் பாடல்களுக்கான Notes
விற்பனைக்குண்டு.
சுரவீணா இசை மன்றம்
4, செட்டித்தெரு ஒழுங்கை,நல்லூர்.
T.P : 077 703 1293 (33246) (7.6.3)

**அன்பொளி கல்வியகம்**

யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2013**

**சித்தியடைந்த மாணவர்களுக்கான**

**பரிசளிப்பு நிகழ்வு**

எமது கல்வியகத்தில் கற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு 03.11.2013 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நாச்சிமார் கோவிலடி (ராஜா கிறீம் ஹவுஸ்) சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இயக்குநர்

**விற்பனைக்கு** 15 மாதம் நிரம்பிய லயன்சப்பேட் (lionshaperd) ஆண்/பெண் அல்ஷேசன் நாய்கள் விற்பனைக்குண்டு.
ம.மார்கண்டு,
M.Sலேன், கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (39693)(6.3.4)

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

T.V.S XL கெவிடியூற்றி சிவப்பு
மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு.
சீனியர் லேன், யாழ்ப்பாணம்.077 706 6487 (39678)(7.6.3)

**கார் விற்பனைக்கு**

மருத்துவரின் பாவனையில் மட்டும் உள்ள
TOYATO YARIS (MANUAL) KR-xxxx
Made in Japan (2011 August made)
Mileage 5000km red colour உடனடியாக
விற்பனைக்குண்டு.
தொ.பே: 077 722 2468 (39568) (7.6.3)

**IELTS** A1 B1 B2 **KU** Education

ஸ்போக்கன் இங்கிலீஷ் வகுப்புகள் Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
தனிப்பட்ட முறையில் உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.
K.U Education,No 75,Temple Road,Jaffna. IELTS Centre

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய்

### தலைமை அலுவலக எல்லை சுவர் அமைத்தல்

### கேள்விப் பத்திரம் வழங்கல் - கால நீடிப்பு

மேற்படி வேலைக்கு 11.10.2013ஆம் திகதிய வலம்புரி பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தல் தொடர்பாக கேள்விப்பத்திரம் வழங்குவதற்கான காலம் 20.11.2013ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ச.சிவகுமாரன்
உபதவிசாளர்,
வலி.தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய். (சி/13622) (7.6.3)

# வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் 2014 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் எல்லைக்குட்பட்ட சந்தைகள், **இறைச்சிக்கடைகள், கோழி இறைச்சிக் கடைகள்** என்பவற்றை 01.01.2014 தொடக்கம் 31.12.2014 ஆம் திகதிவரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி : 19.11.2013 பிற்பகல் ஒரு மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி : 20.11.2013 நண்பகல் 12.00 மணிவரை
கேள்வி திறக்கும் திகதி : 20.11.2013 பிற்பகல் 2.00 மணிவரை

01. கேள்விப் பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி உட்பட இரு பிரதிகளை "தவிசாளர் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அதற்கென தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். மூன்றாவது பிரதி "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" என்னும் முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

02. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையும் அதன் நிழற்படப்பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்பட மாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப் பத்திரம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

04. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

05. இறைச்சிக் கடைக்கு மாதாந்த வாடகை செலுத்தப்படல் வேண்டும்.

06. கேள்விப் படிவக் கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றிற்கு 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (N.B.T) செலுத்தப்படல் வேண்டும்.

07. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தலுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ / நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.

08. தெரிவுசெய்யப்படும் கேள்விக்காரர்கள் கேள்வித் தொகையில் 1/3 பகுதியை 29.11.2013 ஆம் திகதி பிற்பகல் ஒருமணிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்ளவேண்டும்.

09. கேள்வி சம்பந்தமான மேலதிக விடயங்களை தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

சண்முகம் சிவகுமாரன்
உப தவிசாளர்,
வலி. தென்மேற்கு, பிரதேசசபை,மானிப்பாய்.
01.11.2013

**2014ஆம் ஆண்டிற்கான கேள்வி அட்டவணை**

| | சந்தைகள் துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன்இறைச்சிக் கடைகள், கோழி இறைச்சிக் கடைகள் விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர பணம் N.B.T தவிர | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை N.B.T தவிர | மாதாந்த வாடகை N.B.T தவிர |
|---|---|---|---|---|---|
| 1 | **மானிப்பாய் பட்டின உப அலுவலகம்** | | | | |
| | 1. மானிப்பாய் பொதுச் சந்தை | 1000.00 | 15000.00 | 1322200.00 | |
| | 2. மானிப்பாய் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 476300.00 | 400.00 |
| | 3. மானிப்பாய் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிகடை | 1000.00 | 5000.00 | 136100.00 | 300.00 |
| | 4. மானிப்பாய் பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 412500.00 | 400.00 |
| 2 | **மானிப்பாய் கிராம உப அலுவலகம்** | | | | |
| | 1. காக்கைதீவுப் பொதுச் சந்தை | 1000.00 | 5000.00 | 420178.00 | |
| | 2. நவாலி பிரசாத் சந்தை | 1000.00 | 5000.00 | 230158.00 | |
| | 3. சாவற்கட்டுச் சந்தை | 1000.00 | 5000.00 | 190850.00 | |
| | 4. நவாலி பிரசாத் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 99864.00 | 400.00 |
| | 5. நவாலி பிரசாத் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 33055.00 | 300.00 |
| | 6. நவாலி பிரசாத் சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 54506.00 | |
| | 7. ஆனைக்கோட்டைச் சந்தி மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 280390.00 | |
| | 8. ஆனைக்கோட்டைச் சந்தி கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 55000.00 | |
| 3 | **பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்** | | | | |
| | 1. பண்டத்தரிப்பு பொதுச் சந்தை | 1000.00 | 15000.00 | 1245405.00 | |
| | 2. பண்டத்தரிப்பு சாந்தை சந்தை | 500.00 | 2000.00 | 88012.00 | |
| | 3. பண்டத்தரிப்பு பொதுச்சந்தை மாட்டிறைச்சிகடை | 1000.00 | 5000.00 | 182160.00 | 600.00 |
| | 4. பண்டத்தரிப்பு பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 121770.00 | 600.00 |
| 4 | **பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்** | | | | |
| | 1. மாகியப்பிட்டி பொதுச் சந்தை | 1000.00 | 5000.00 | 146663.00 | |
| | 2. இளவாலை பொதுச்சந்தை | 1000.00 | 5000.00 | 145200.00 | |
| | 3. மாதகல் பொதுச்சந்தை | 1000.00 | 5000.00 | 109667.00 | |
| | 4. மாகியப்பிட்டிச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 56210.00 | 250.00 |
| | 5. மாகியப்பிட்டிச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 11000.00 | 250.00 |
| | 6. மாதகல் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 51150.00 | 250.00 |
| | 7. இளவாலைபொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 142301.00 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு வழங்குவதில் அதிபர்களுக்கு சிரமம்

வவுனியா,நவ.2

வவுனியா மாவட்டப் பாடசாலைகளில் மாணவர்களுக்கு உணவு வழங்குவதில் பல்வேறு சிரமங்களை பாடசாலை நிர்வாகத்தினர் எதிர்கொள்வதாக பாடசாலை அதிபர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

உலக உணவுத்திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு சத்துள்ள மதிய உணவு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த வகையில் வவுனியா மாவட்டத்தில் 150 க்கும் மேற்பட்ட பாடசாலைகளில் இந்த உணவு விநியோகம் இடம்பெற்று வருகின்றது.

இதற்கென பருப்பு, அரிசி, எண்ணெய், மீன்ரின் என்பன பாடசாலைகளுக்கு வழங்கப்படுகின்றன. உணவுகளைச் சமைப்பதற்கு விறகினைப் பெறுவதில் பாடசாலை அதிபர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிய வருகின்றது.

விறகினைக் காடுகளில் இருந்து பெறுவதற்கு உரிய அனுமதியைப் பெறுவதில் தடைகள் ஏற்பட்டு வருகின்றன. இருப்பினும் சட்டத்துக்கு விரோ தமாகவே பாடசாலை களுக்கு விறகு எடுத்து வரப்படுகின்றன.

இதே வேளை பாடசாலை நலன் விரும்பிகள் மற்றும் பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் பணம் கொடுத்தும் விறகு வாங்கப்படுகின்றது.

ஆனால் இந்த வசதி பின்தங்கிய இடங்களிலுள்ள பாடசாலைகளில் காணப்படுவதில்லை. மேலும் உணவு சமைப்பதிலும் இடர்பாடுகள் காணப்படுகின்றன.

அத்துடன் கடந்த ஐந்து மாதங்களாக மரக்கறிகளுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படாததால் கொள்வனவு செய்த மரக்கறிகளுக்கான கொடுப்பனவையும் மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால் பாடசாலை அதிபர்கள் உணவு விநியோகத்தை மேற் கொள்ள முடி யா நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-402)

கற்சிலைமடு சி.கூ.சங்கத்தில்

# கடன் பெறுவதில் மக்கள் ஏமாற்றம்

முல்லைத்தீவு, நவ.2

கற்சிலைமடு சிக்கனக் கூட்டுறவுச் சங்கத்தினால் வழங்கப்பட்ட கடன்கள் ஒழுங்காகச் செலுத்தப்படாததால் கடன்களைப் பெறுவதற்குக் காத்திருப்பவர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

இந்தச் சங்கத்தினால் சுழற்சி முறையில் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே கடன்களைப் பெற்றவர்கள் அவற்றைச் செலுத்தினால் மட்டுமே ஏனையவர்கள் கடன்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஆனால் கடன்களைப் பெற்றவர்கள் அவற்றை ஒழுங்காகச் செலுத்தாததால் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே சங்க நிர்வாகிகள் துரித நடவடிக்கை மேற்கொண்டு வழங்கிய கடன்களை வசூலிப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென சங்க அங்கத்தவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மேலும் சங்கத்தைத் திறம்பட இயங்க வைக்குமாறும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (க-500)

புதுக்குடியிருப்பு சந்தை அமைப்பதற்கு

# ஒதுக்கப்பட்ட நிதியை தக்கவைக்க வேண்டும்

## மாகாண சபையிடம் மக்கள் கோரிக்கை

வலி.தென்மேற்கு, நவ.02

புதிதாகப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்ட வடமாகாண சபை புதுக்குடியிருப்பு பொதுச் சந்தையை நிர்மாணிப்பதற்கென ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் செல்லாதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இங்குள்ள மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

புதுக்குடியிருப்பில் சுமார் 50 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவிருந்த சந்தைக் கட்டடத்துக்கான அனுமதியை ஆளுநர் வழங்காமல் காலம் கடத்தி வந்ததே ஒதுக்கப்பட்ட பணம் திரும்பிச் செல்வதற்கான காரணமெனத் தெரிவிக்கப்பட்ட நிலையில் மக்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

புதுக்குடியிருப்பில் சந்தையொன்று அமைக்கப்படாமை குறித்து புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து சந்தைக் கட்டடத்தை அமைப்பதற்கு மேற்படி நிறுவனம் முதற் கட்டமாக 4.8 மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருந்தது.

தற்போது சந்தைக் கட்டடத்தை அமைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்ட பிரதேச சபை அதற்கான அனுமதியைக் கோரி வடமாகாண ஆளுநருக்கு விண்ணப்பித்திருந்தது.

மேற்படி விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்த ஆளுநர், சந்தை அமைப்பதற்கான அனுமதியை வழங்காமல் பல மாதங்களாகக் காலம் கடத்தி வந்ததால் குறிப் பிட்ட காலத்துக்குள் சந்தைக் கட்டடத்தை அமைக்க முடியாத நிலை பிரதேச சபைக்கு ஏற்பட்டுள்ளதாகப் பிரதேச சபையினர் தெரிவிக்கின்றனர்.

இதனால் ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இந்த நிலை குறித்து கவலையும் விசனமும் தெரிவித்துள்ள பொது மக்கள் வடமாகாண சபையைப் பொறுப்பேற்றுள்ள த.தே.கூட்டமைப்பினர் வசதி யீனங்கள் மத்தியில் வாழ்ந்து வரும் மக்களின் நலன்கருதி ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் செல்லாதவாறு சந்தைக் கட்டடத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண் டுமென்று கேட்டுள்ளனர். (க-115)



வவுனியா வடக்கு கனகராயன் குளத்தில் மீனவர்களுக்கான சனசமூக நிலையக் கட்டடத்தின் அடிக்கல்லை வவுனியா அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர நட்டு வைத்தார். (க-435)

# முல்லை. பிரஜைகள் குழுவின் செயற்பாடுகள் ஆரம்பம்

வன்னி, நவ.2

முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள் குழுவின் ஆரம்ப நிகழ்வும், அலுவலக கட்டத்திறப்பு விழாவும் அண்மையில் இடம்பெற்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வசிக்கின்ற தமிழ், சிங்கள, முஸ்லிம் இனத்தவர்களை உள்ளடக்கிய இந்தக் குழுவானது குறித்த பிரதேசத்தில் உள்ள கல்விமான்களையும் உள்வாங்கி உருவாக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இன ஒற்றுமையைப் பாதுகாப்பதுடன் அரச அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு ஒத்தாசை வழங்குவதும் பிரதேச மக்களின் வாழ்க்கை நிலையை அபிவிருத்தி செய்வதும் இந்தக் குழுவின் பிரதான நோக்கமாகும்.

மேலும், எதிர்காலத்தில் முல்லைத்தீவு மாவட்ட மக்கள் முகம் கொடுக்கின்ற பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றைக் களைவதற்குரிய ஒரு முறையான வேலைத் திட்டத்தை அமைப்பதும் இந்தக் குழுவின் பிரதான செயற்பாடெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனங்களுக்கு இடையில் மத, கலாசார ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களை உருவாக்குதல்- பிரதேச மக்கள் முகம் கொடுக்கின்ற பொதுவான பிரச்சினைகளைக் கண்டறிந்து அவை தொடர்பாக அரச அலுவலருடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டு தீர்வினை வழங்குவதற்கான ஏற்பாட்டை மேற்கொள்ளல், பிரதேசத்தின் கல்வி மட்டத்தை முன்னேற்றுவதற் காக பாடசாலைகளுக்குள் கல்வி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், பிரதேச இளைஞர், யுவதிகளின் விளையாட்டுத் திறனை முன்னேற்றுவதுடன் திறமையான வீர வீராங்கனைகளைத் தேசிய மட்டத்துக்குக் கொண்டு செல்லல். இந்த மாவட்டத்தின் ஏழ்மை நிலையையும் தொழில் இல்லாமையையும் ஒழித்துக் கட்டுதல். ஆகிய வேலைத் திட்டங்களும் பிரஜைகள் குழுவால் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க-435)

# சந்தேகநபருக்கு விளக்கமறியல்

கிளிநொச்சிப் பகுதியில் 14 வயதுச் சிறுமியைக் கடத்திச் சென்று வன்புணர்வுக்கு உட்படுத்தி விட்டுத் தலைமறைவாகியிருந்ததாகக் கூறப்படும் சந்தேக நபரை எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 22ஆம் திகதி 14 வயதுடைய சிறுமியொருவரைக் கடத்திச் சென்று வன்புணர்வுக்கு உட்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரைத் தேடி வந்த கிளிநொச்சிப் பொலிஸார் கடந்த 29 ஆம் திகதி அவரைக் கைது செய்து ஆரம்ப கட்ட விசாரணைகளை மேற் கொண்ட பின்னர் மறுநாள் பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எம்.ஐ. வகாப்தீன் முன்னிலையில் முற்படுத்தினர்.

குறித்த சந்தேக நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய பொலிஸ் பொறுப்பதிகாரி பி.குருமூர்த்தி குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதாகத் தெரிவித்தார்.

இந்த நிலையில் சந்தேக நபரை எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் அன்றைய தினம் அவரை அடையாள அணி வகுப்புக்கு உட்படுத் துமாறும் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதி வான் எம்.ஐ.வகாப்தீன் உத்தர விட்டுள்ளார். (க-6)

# 91 ஆசிரியர் இடமாற்றம்

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளிலிருந்து வெளி மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெறுவதற்கு 91 ஆசிரியர்கள் தகுதி பெற்றுள்ளனர். இந்த மாத முற்பகுதியில் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தில் இடம் பெற்ற இடமாற்றச் சபைக் கூட்டத்திலேயே இந்த முடிவு வெளியிடப்பட்டது.

சுமார் 203 ஆசிரியர்கள் இடமாற்றம் பெறும் பொருட்டு விண்ணப்பித்திருந்த போதிலும் 112 ஆசிரியர்களது இடமாற்ற விண்ணப் பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. நிராகரிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு அது தொடர்பாக எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தெரிவித்தார். (க-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகை ஆசிரியர் பிணையில் விடுதலை

மட்டக்களப்பு, நவ.2
காத்தான்குடியை மையமாகக் கொண்டு வெளிவரும் பத்திரிகை ஒன்றின் ஆசிரியர் புவி ரஹ்மத்துல்லாஹ் வியாழக்கிழமை பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.
கஞ்சா இருப்பதாக தெரிவித்து புவி ரஹ்மத் துல்லாவின் வீட்டில் பொலிஸ் மோப்ப நாய்கள் மூலம் காத்தான்குடி பொலிஸார் தேடுதல் மேற்கொண்டனர்.
இதன்போது கஞ்சாக் கட்டொன்று அவருடைய வீட்டு வளாகத்திலிருந்து பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டது.
இதனால் புவி ரஹ்மத்துல்லாஹ் கைது செய்யப்பட்டு களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்றில் பதில் நீதிவான் பிரேம்நாத்திடம் முன்னிலையில் முன்னிலைப்ப டுத்தப்பட்ட போதே அவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.
இது தொடர்பான வழக்கு எதிர்வரும் 26 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.
புவி ரஹ்மத்துல்லாஹ் வீட்டில் கஞ்சா இருக்கவில்லை. இது அவரைக் கைது செய்வதற்காக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட செயல் என்று சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்தனர். (ச-10)



வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு வியாழக்கிழமை அக்கரைப்பற்றில் விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. இந்த ஊர்வலத்தில் விசேட தேவையுடையவர்கள், மற்றும் பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்டனர்.

கட்சி வேண்டுகோளையடுத்து

# பதவி விலகினார் தவிசாளர் நைசர்

மட்டக்களப்பு, நவ.2
இறக்காமம் பிரதேச சபையின் தவிசாளர் பதவியை சுழற்சி முறையில் பகிர்ந்து கொள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது. அதனை யடுத்து தவிசாளர் எம்.ஐ. நைசர் கட்சியின் வேண்டுகோளை ஏற்று தவிசாளர் பதவியை ராஜினாமாச் செய்துள்ளார். இந்தத் தகவலை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலர் எம்.ரி.ஹஸன் அலி தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கடந்த 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற பிரதேச சபைத் தேர்தலில் அதிகூடிய விருப்பு வாக்குகளை வாய்பத்தான் சேனையைச் சேர்ந்த எம்.ஐ. நைசரும், இரண்டாவது அதிகூடிய விருப்பு வாக்குகளை இறக்காமத்தைச் சேர்ந்த மௌலவி யு.கே. ஜெபீரும் பெற்றிருந்தனர். அப்போது சுழற்சி முறையில் தவிசாளர் பதவியைப் பகிர்ந்து கொள்ள முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் தீர்மானித்தது.
இதன் பிரகாரம் முதல் இரண்டு வருடங்களுக்கு நைசரும், அடுத்து இரண்டு வருடங்களுக்கு ஜெபீர் மௌலவியும் பதவி வகிப்பார்கள் என்று கட்சி அறிவித்திருந்தது.
அதற்கமைய இரண்டு வருட முடிவில் இறக்காமம் பிரதேச சபையின் தவிசாளர் பதவியிலிருந்து ராஜினாமா செய்யுமாறு தவிசாளர் எம்.ஐ.நைசருக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் விடுத்த வேண்டுகோளை ஏற்று. அவர் பதவியை ராஜினாமா செய்துள்ளார். - என்றார். (ச)

விசேடதர தாதியர் நியமனத்தில்

# வட, கிழக்கு தாதியர்கள் திட்டமிட்டுப் புறக்கணிப்பு

மட்டக்களப்பு, நவ.2
வடக்கு, கிழக்கு மாகாணத்தில் சிரேஷ்ட தாதிய உத்தியோகத் தர்களாக கடமை ஆற்றிவரும் நாம் இதுவரையில் தாதியர் சேவை தரத்துக்கு உள்வாங்கப்படாது திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளோம் என்று பாதிக்கப்பட்ட சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.
இந்த விடயம் குறித்து மீள்குடியேற்றப் பிரதி அமைச்சருக்கும் ஏனைய அரசியல் வாதிகளுக்கும் மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுஎன்று மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் சிரேஷ்ட தாதிய உத்தியோகஸ்தர் க.சிவப்பிரகாசம் தெரிவித்தார்.
இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
தாதியர் சேவை விசேடதர நிய மனத்துக்காக கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சுகாதார அமைச்சால் பயிற்சியளிக்கப்பட்ட வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தாதியர்களை உள்ளடக்காது, சிங்கள மொழி மூலம் கொழும்பில் பயிற்சியளிக்கப்பட்ட தாதியர்களுக்கு மாத்திரம் நேர்முகப் பரீட்சை நடத்தி அவர்களுக்கு மாத்திரம் பதவி உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இந்த விடயம் குறித்து சுகாதார அமைச்சிடம் கேட்ட போது பொதுச் சேவை ஆணைக் குழுவின் அனுமதிக்காக காத்திருப்பதாக எமக்குக் கூறப்பட்டது.



ஆனால் கடந்த ஆகஸ்ட் 18ஆம் திகதி பொதுச் சேவை ஆணைக் குழுவினால் அதற்குரிய கடிதம் அனுப்பப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.
எனவே வடக்கு, கிழக்கில் காணப்படும் வெற்றிடங்களைக் கருத்தில் கொண்டு கிழக்கில் பயிற்சியளிக்கப்பட்ட தமிழ்த் தாதியர்களை இந்த விசேட தரத்தில் சேர்த்துக் கொள்ளும் ஏற்பாடு களை மேற் கொள்ள வேண்டும். இதில் பாரபட்சம், புறக்கணிப்பு இடம் பெறாமல் இருக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# பால் உணவு பொருள்கள் உற்பத்தி

கிழக்கு மாகாண கால்நடை அபிவிருத்தித் திணைக்களம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்டத்தின் நிதியுதவியுடன் பால் உணவுப் பொருள்களை உற் பத்தி செய்து வருகின்றது.
மட்டக்களப்பு, தும்பங்கேணி என்னும் இடத்தில் வேலை வாய்ப் பற்றிருக்கும் யுவதிகளைக் கொண்டு இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கபட்டு வருகிறது என்று தும்பங்கேணி அரச கால்நடை வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ்.எம். நஸீர் தெரிவித்தார். (ச)

# விபத்தில் சிக்கியவர் உயிரிழப்பு

வாழைச்சேனை, நாவலடியில் வீதி விபத்தில் சிக்கிய ஒருவர் சிகிச்சை பயனின்றி வியாழக் கிழமை உயிரிழந்துள்ளார் என்று மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.
பொலநறுவை, கிரித்தலே பகுதியைச் சேர்ந்த கே. பண்டார ரணதுங்க (வயது-38) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள் ளார் என்று பொலிஸார் கூறினர்.
வாழைச்சேனை, நாவலடி பகுதியூடாக இந்த நபர் தனது நண்பருடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, வீதியில் வந்து கொண்டிருந்த லொறியில் மோதுண்டு படுகாயமடைந்திருந்தார்.
அவர் உடனடியாக வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். எனினும் அங்கு சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

# கழிவைக் கொட்டுவதால் மக்கள் அசௌகரியம்



கல்முனை, நவ.2
கல்முனை மாநகர எல்லைக்குள் அமைந்துள்ள வெலிவேரியா வீட்டுத்திட்ட கரையோரத்தில் கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.
இது குறித்து கல்முனை மாநகர சபைக்கு அறிவித்தும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.
இந்தப் பகுதிக்கு முன்னால் பொது சுகாதார அலுவலகம் அமைந்துள்ளது. எனினும் இது குறித்து பொதுச் சுகாதார அதிகாரி எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது கவலை அளிக்கின்றது என்று மக்கள் கூறுகின்றனர். (ச)

# கற்றல்செயற்பாட்டில் மாணவர்கள் ஆர்வம் காட்டுவது குறைவு

மட்டக்களப்பு, நவ.2
கிழக்குமாகாணத்தில் மாணவிகளை விட ஆண் மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் ஆர்வம் காட்டுவது குறைந்து வருகிறது என்று கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம். டி.ஏ. நிசாம் தெரிவித்தார்.
மாகாணக் கல்வித் திணைக்களத்தில் ஆசிரிய ஆலோசகர் மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு நடைபெற்ற முறை சாராக் கல்வி குறித்த கலந்துரையாடல் ஒன்றின் போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பாடசாலையில் மாணவர்களை நெறிப்படுத்தும் நடவடிக்கை பின்னடைவு கண்டு வருவதால், அவர்களின் கற்றல் செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது.
இன்று நட்டத்தில் இயங்கும் ஒரு நிறுவனமாக இருப்பது கல்வித்துறை மட்டுமே.
பல வருடங்களாக எந்தப் பெறுபேற்றையும் தராது நட்டத்திலே இயங்கும் கல்வி நிறுவனத்தை தொடர்ந்து நடத்தி வருகின்றோம்.
இந்த நட்டத்தில் இருந்து மீள்வதற்கு, உள்ள ஒரே வழி ஆசிரியர்கள் அர்ப்பணிப்புள்ள வர்களாக மாறுவதே ஆகும்.
பாடசாலைக்கு வரும் மாணவ மாணவிகளது அத்திபாரம் முன்பள்ளி. இந்த முன்பள்ளி இன்று எவரது கைகளில் உள்ளது. விரும்பியவர்கள் எல்லாம் முன்பள்ளி தொடங்கிறார்கள். அவர்களிடம் ஒருமுறையான பாடத்திட்டம் உள்ளதா? முறையான கற்பித்தல் திறன் உள்ளதா? ஆனால் அந்த முன்பள்ளியை நம்பித்தான் எமது கற்பித்தல் ஆரம்பமாகின்றது. அர்ப்பணிப்பு நிறைந்தவர்களாக அனைவரும் மாறும் பட்சத்தில் கிழக்கு மாகாணக் கல்வியின் தலைவிதி மாற்றப்படும். - என்றார். (ச-291)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநாட்டில் பங்கேற்க மன்மோகனுக்கு வெளிவிவகார அமைச்சு ஆலோசனை

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு இந்திய பிரதமர் அலுவலகமும், வெளி விவகார அமைச்சும் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்குக்கு ஆலோசனை வழங்கியுள்ளன.

வட மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், இந்திய பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமே இதற்கு காரணமாக அமைந்துள்ளது என இந்தியத் தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

வட மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை இலங்கை அரசுக்கு எடுத்துரைப்பதற்காக இந்திய அரசு மேற் கொண்ட நடவடிக்கைகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் இந்த கடிதத்தை அனுப்பியுள்ளார்.

வசதியான ஒரு சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணத்திற்கு பயணம் மேற்கொள்ளுமாறு இந்தியப் பிர தமருக்கு அழைப்பு விடுப்பதாகவும் அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய மாநாட்டை இந்தியா முற்றாகப் புறக்கணிக்க வேண்டும் என தமிழக சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ள நிலையில், மாநாட்டில் பங்கேற்குமாறு இந்தியப் பிரதமருக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# தொழிலாளர் தேசிய முன்னணி அரசுடன் இணைந்து செயற்படும்



## தலைவர் திகாம்பரம் எம்.பி. தெரிவிப்பு

தொழிலாளர் தேசிய முன்னணி எதிர்காலத்தில் அரசுடன் இணைந்து ஒற்றுமையுடன் செயற்படும் என அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பி.திகாம்பரம் தெவித்துள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியை அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் மாலை சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நுவரெலியா மாவடத்தி லுள்ள குறிப்பிட்ட சில தமிழ் மத்திய பாடசாலைகளை தேசிய மட்ட பாடசாலைகளாக தரமுயர்த்துமாறு தொழிலாளர் தேசிய முன்னணியின் பிரதிநிதிகள் இதன்போது ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

அதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் காலங்களில் முன்னெடுக்கப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதன்போது உறுதியளித்துள்ளார் எனவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

# காதலியை கத்தியால் குத்தி காதலனும் தற்கொலை

## இரத்தினபுரியில் சம்பவம்

இரத்தினபுரி - இறக்குவானை பிரதேசத்தில் காதலனொருவர், தமது காதலியை கத்தியால் குத்தி படுகாயப்படுத்தி விட்டு தானும் தற்கொலை செய்து கொண் டுள்ளார்.

இறக்குவானை - தெனியாய வீதியில் உள்ள காதலியின் வீட்டில் நேற்றுமுன்தினம் மாலை இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. காதலி வீட்டுக்கு காதலன் சென்றவேளை அங்கு இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது காதலன் காதலியை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார். பின் தானும் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

படுகாயங்களுக்கு உள்ளான தெனியாய பகுதியைச் சேர்ந்த 17வயது காதலி காவத்தை வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகிறார்.

தெரணியகல - மீயனவிட்ட பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய காதலனே உயிரிழந்துள்ளார். இறக்குவானை பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பாதுகாப்புக் குறைபாட்டால் எங்களுக்கு பெரும் சிக்கல்

## *சிறை அதிகாரிகள் கவலை*

கொழும்பு.நவ.2

பொலிஸ் பாதுகாப்பு வழங்கும் விடயத்தில் காணப்படும் குறைபாடுகளால் பாதாள உலகக் குற்றங்களுடன் சம்பந்தப் பட்டுள்ள சந்தேகநபர்களை நீதிமன்றங்களுக்கு இட்டுச் செல்லும்போது சிக்கல்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது என்று சிறைச் சாலை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கைதிகளை நீதிமன்றத்துக்கு ஏற்றிச் செல்லும்போது இது வரை காலமும் சிறைச்சாலை உத்தி யோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரி-56 துப்பாக்கிகள் மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்குப் பதிலாக, பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் பொலிஸாரின் பாது காப்பு உரிய வேளையில் கிடைப்ப தில்லை என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த சந்தேகநபர்களை ஏற்றிச் செல்வதற்கு முன்னர் பொலிஸ் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

சில சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கு அண்மையில் சந்தேக நபர்களுடன் பஸ்களை நிறுத்தி வைத் திருப்பது தொடர் நிகழ்வாகிவிட்டது.



அதனால் குறித்த நேரத்துக்கு சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த முடியாத சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன என்று அவர்கள் குற்றம் சாட்டி யுள்ளனர்.

அத்தகைய சந்தர்ப்பங்களில் சிறைச்சாலை உத்தியோகத்தர் களே கண்டனங்களுக்கு உள்ளாகின்றனர் என்றும் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (ச-22)

# அதிவேக நெடுஞ்சாலையில் கட்டாக்கலி நாய்கள் தொல்லை

புதிதாக திறந்துவைக்கப்பட்ட கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் கட்டக்காலி நாய்களால் தொல்லை ஏற்பட்டுள்ளது.

கட்டாக்காலி நாய்கள் பாதையில் அங்கும் இங்கும் செல்வதால் இதுவரையில் இரண்டு வாகன விபத்துக்கள் இடம் பெற்றுள்ளன. இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப் படும் என அதிவேக நெடுஞ்சாலையின் நிர்வாக உயரதிகாரி பீ.கே. ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் நூற்றுக்கும் மேற்பட்ட நாய்கள் வலைகளின் மூலம் பிடிக்கப்பட்டிருந்தன. இதேவேளை, தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நடந்து சென்ற நபர் குறித்த திடீரென ஒருவர் சந்கேத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

காரில் சென்ற நபர் காரிலிருந்து இறங்கி பாதையில் நடந்து சென்றபோதே கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மாநாட்டில் பங்களாதேஷ் பிரதமர் பங்கேற்பார்?




இலங்கையில் எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதிவரை இடம்பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா பங்கேற்கக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அழைப்பை ஏற்று ஒருநாள் நிகழ்வில் அவர் கலந்து கொள்ளக்கூடும் என வெளிநாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அமர்வுகளில் பங்கேற்குமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சு பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் திப்பு மோனி மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சயிடுல் ஹக் ஆகியோர் அமர்வுகளில் பங்கேற்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது காலநிலை மாற்றம், பிராந்திய பிரச்சினைகள், சுகாதாரம் உள்ளிட்ட விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டி யது அவசியமானது என பங் களாதேஷ் வலியுறுத்தும் என அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

# கண்டியில் புராதன நாணயங்கள் மீட்பு



கண்டி - வத்தேகம பாரதி தமிழ் வித்தியாலயத்தில் இருந்து புராதன நாணயங்கள் மீட்கப்பட்டுள்ளன. பாடசாலை வளாகத்தில் இடிந்து விழுந்த மண்ணை வெட்டி அகற்றியபோதே இந்தப் புராதன நாணயங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மழை காரணமாக குறித்த பாடசாலை வளாகத்தில் மண்சரிவு ஏற்பட்டது. மாணவர்களின் உதவியுடன் மண்ணை வெட்டி அகற்ற பாடசாலை அதிபர் நடவடிக்கை எடுத்தார்.

அதன்போது மண்ணுக்குள் இருந்து புராதன நாணயங்கள் மீட்கப்பட்டுள்ளன. 1870ஆம் ஆண்டைச் சேர்ந்த 23 நாணயங்கள், 1893 ஆம் ஆண்டிற்குச் சொந்த மான 05 சதம் 11 நாணயங் கள், 1892ஆம் ஆண்டைச் சேர்ந்த 05 சதம் 52 நாணயங்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. இவை தொல்பொருள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# கொரிய மொழி பரீட்சையில் 2 ஆயிரத்து 466 பேர் சித்தி

கொரியமொழி தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்றிய 18 ஆயிரத்து 466 பேரில் 2 ஆயிரத்து 466 பேர் சித்தியடைந்துள்ளனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

உற்பத்தித் துறையில் 538 பேரும், நிர்மாணத் துறை யில் ஆயிரத்து 28 பேரும், மீன்பிடித் துறையில் 960 பேரும் சித்தியடைந்துள்ளனர்.

பரீட்சைப் பெறுபேறுகளை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பார்வையிட முடியும் என பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளரும், ஊடக பேச்சாளருமான மங்கல ரன்தெனிய தெரிவித்தார்.

தாம் விண்ணப்பித்த பிரிவின் ஊடாக பெறுபேறுகளை பார்வையிட முடியும் எனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் கூறியுள்ளது.

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

வெல்லவ பொலிஸ் பிரிவின் ஹங்கமுவ, பிடவத்த பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி துப்பாக்கி, குண்டுகளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் அனுராதபுரம் மாவட்ட குற்றப் புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து 23 கிலோ வெள்ளைச் சந்தனமும் கைப்பற்றப்பட்டுள்ளதென பொலிஸார் தெரிவித்துள்ளனர். பிடவத்த, இப்பாகமுவ பகுதியைச் சேர்ந்த 58 வயதான ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# தங்கம் கடத்திய பெண் கைது

24 இலட்சத்து 45 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கத்தை சட்டவிரோதமாக கடத்திச் செல்ல முயன்ற பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலை யத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு பகுதியைச் சேர்ந்த அந்தப் பெண்ணிடமிருந்து இருந்து 489 கிராம் தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளதென சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்ட பெண், தனது பயணப் பொதியில் சூட்சுமமாக மறைத்து தங்கத்தை இந்தியாவின் கேரளாவிற்கு கடத்திச்செல்ல முற்பட்டபோது விமான நிலைய பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு சுங்கப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# ரயிலில் மோதி மாணவன் சாவு

அங்குலானை சமகி மாவத்தை பகுதியில் ரயிலில் மோதி பாடசாலை மாணவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மருதானையில் இருந்து பாணந்துறை நோக்கிப் பயணித்த ரயிலில் மோதியே குறித்த மாணவன் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர் மொரட்டுவ பகுதி பாடசாலையொன்றில் தரம் 10இல் கல்வி கற்கும் 16 வயதான மாணவராவார்.

# பிரிட்டனில் இலங்கையர் கொலை; இருவர் கைது

பிரிட்டனில் இலங்கையர் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் இருவர் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பீட்சா விநியோகம் செய்த தவிச பீரிஸ் என்பவரே கடந்த வாரம் கொலை செய்யப்பட்டிருந்தார். இவர் பிரிட்டன் பல்கலைக்கழகமொன்றின் மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் பீட்சா விநியோகத்துக்காக சென்றிருந்த போது தென் யோர்க்சயர் பிரதேசத்தில் வைத்து கொலை செய்யப்பட்டிருந்தார்.

தென் யோர்க்சயர் பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதான இளைஞர் ஒருவரும், 25 வயதான நபர் ஒருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இயற்கை வளங்களைச் சீண்டும் ஒவ்வாத போக்கு வேண்டாமே....

கிளிநொச்சி மாவட்டம், நிலவளம் மட்டுமன்றி நீர்வளமும் போதிய அளவு காணப்படும் பிரதேசம். அங்கு நெற் செய் கையே இரண்டு போகப் பயிராக சாகுபடி செய்யப்படுகிறது. அந் தப் பிரதான விவசாயத்தைப் பாதிக்கும் வகையில், மாவட்டத் தின் பல பகுதிகளில் நெற் செய்கைக்கு உரிய, உகந்த காணி கள், மண்ணிட்டு மேட்டு நிலங்களாக மாற்றப் படுவதாக, குடியிருப்புகளாக மறுவடிவம் கொடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மிகக் குறிப்பாக ஏ-9 வீதியின் பரந்தன் முதல் கரடிப் போக்கு வரையான பகுதிகளிலும், மற்றும் பரவிப்பாஞ் சான், பன்னங்கண்டி, மருதநகர்ப் பகுதிகளிலும், இரணைமடு நீர்ப் பரப்புக்குள் அடங்கும் வேறு சில பகுதிகளிலும் நெற் செய்கைக் காணிகள் மேட்டு நிலங்களாக மாற்றப்பட்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

மேற்குறிப்பிட்ட காணிகள் பயிர்ச் செய்கைக்கு என்றே விசேட் மாக வழங்கப்பட்டவை. ஆனால் சம்பந்தப்பட்ட வர்கள் தமது போக்கில் அவற்றை மேட்டுக் காணிகளாக மாற்றுவதாகக் கண்டனங்கள் எழுந்துள்ளன்.

வயல்களாக இருந்து வருவாய் தரும் மண் அன் னையை, மேட்டுநிலங்களாக மாற்றுவதில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மாவட்டக் கமநல உத்தியோகத்தர் வலியுறுத்தி உள்ளார்.

அண்மையில் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற விவசாய ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் விவசாய அமைப் புகள், விவசாயிகள் மற்றும் திணைக்கள அதிகாரிகளாலும் இது சுட்டிக் காட்டப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் நெற்செய்கைப் பகுதிகளை தென்னங்கன்றுகளை நாட்டி மேட்டு நிலமாக்கும் முயற்சியில் பலர் மிகத் தீவிரமாக, மிக்க வேகத்துடன் செயற்படுவதாகவும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் எண்ணிக்கை பெருகும் அளவுக்கு நிலம் இன உற்பத்தி செய்வதில்லை. விவசாயத்துக்கு உகந்த மற்றும் நெல் உற்பத்தியைத் தரும் வளமுள்ள காணிகளை, மேட்டு நிலங்களாக்குவதால் நெல் உற்பத்தி உட்பட விவசாயம் பாதிப்புறும் என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல.

எனினும் இவற்றைப் பொருட்படுத்தாமல், தத்தமது நலன்களை மட்டும் முன்னிறுத்தி நெற்செய்கை நிலங் களை பாழடிப்பது பெரும் சமூக விரோதச் செயல்களின் வரிசையில் வைத்து நோக்கப்பட வேண்டியதாகும்.

தம்மிடம் பண வசதியும், அரசியல் செல்வாக்குப் போன்ற பிற வலிமைகளும் உள்ளதால், ஒரு பிரதேசத்தின் அல்லது பிரிவின் இயற்கை வளத்தைச் சீண்டுவதற்கு எந்தக் கொம்பனுக்கும் உரிமையோ அதிகாரமோ இல்லை. அதிலும் மிகக் குறிப்பாக மக்களின் உணவுத் தேவைக்கான பிரதான நெற்சாகுபடிக்குக் குந்தகம் விளைவிக்கும் எந்தச் செயற்பாடும் ஆரம்பத்திலேயே, முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும். அதுவும் வடக் கின் நெற்களஞ்சிய மான வன்னிப் பிரதேசத்தில் காணி களை மேவி வீடுகள் அமைப்பதும், தென்னைப் பயிர்ச் செய்கை மேற் கொள்வதும் கடும் தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

இன்னொரு புறத்தில் வவுனியா மாவட்டத்தில் குளங் களும் குடியிருப்புகளாக மாற்றப்படும் பாதகச் செயல் அதி அதிவேக மாகத் தலையெடுத்து வருவதாக இயற்கை வளம் நாடிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

குளங்கள் குன்றினால் நன்னீர் வளம் தேய்ந்து போகும்; விவசாயம் சரிந்து விழும். நாடும், நகரும் வெள்ளத்தில் மூழ்கி அனர்த்தங்கள் உண்டாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்திலும், நில வளத்தைச் சீண்டும் செயற்பாடுகள் கண்டும் காணாதது போன்று, ஆங்காங்கே தலையெடுத்து வருவதும் பெரும் பாதக விளைவுகளை ஏற் படுத்தப் போகிறது. வளமான மண்ணைக் கொண்ட வலிகாமம் வடக்கு மற்றும் அதனை அண்டிய பிர தேசங்களில் ஒரு பகுதி, அரச அலகுகளால் கபளீகரம் செய் யப்படும் அதேவேளை-பயிர்ச்செய்கை நிலங்களில் அடுக்குமாடி வீடுகள், அலங்கார மாடங்கள் எழுப்பப்படுகின்றன.

புலம்பெயர்ந்த உறவுகளிடமிருந்து கிடைக்கும் பணத்தை, பொருளியல் மற்றும் கல்வியியல் வளர்ச்சிகளுக்குத் தக்கவாறு பயன்படுத்தாமல், ஒருவருக்கு மற்றவர் போட்டி என்ற ஒவ்வாத நிலை எடுத்து, இயற்கை வளம் கண்ணுக்குப் புலப்படாத விதத் தில் துஷ்பிரயோகம் செய்யப்படுவது வேதனைக்குரியதாகும்.

வடக்கில் மாகாணசபை ஒன்று உருவாகிவிட்டது. அதனூடாக இவை போன்ற செயற்பாடுகளைத் தடுப்பதற்கான திட்ட மிடப் பட்ட முறையிலான நடவடிக்கைகள் உடன் தேவை. மக்க ளின் மிக முக்கிய உணவுத் தேவையான நெல் உற்பத் திக்குப் பங்கம் விளைவிக்கும், இயற்கை வளத்தைச் சீண்டும், எந்த வகைச் செயற்பாடும் முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும்.

எதிர்கால சந்ததியின் நலனை முன்னிறுத்தி, நிலையான பிரதேச அபிவிருத்திக்கு, ஒன்றிணைந்து செயற்படத் திடசங்கற்பம் பூண வேண்டிய வேளை இது.

# வடக்கின் அமைதிக்கு யார் பொறுப்பு?


தொல்காப்பியன்

வடக்கில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட வேண்டியது வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனின் கடமை என்று, விந்தையான நியாய விளக்கம் ஒன்றைக் கொடுத்திருக் கிறார் பாதுகாப்புச்செயலர் கோத் தபாய ராஜபக்ஷ. அண்மையில் ஐ.நா மனிதஉரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வருவதற்கு முன்னர், அமைக்கப் பட்டு விட்டது. இலங்கையில் சட்டம், ஒழுங்கைக் கவனிக்கத் தனியான அமைச்சு ஒன்று. இந்த நிலையில், வடக்கின் சட்டம் ஒழுங்கு நிலை குறித்தும், அதற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் தான் பொறுப்பு என்றும் கூறுவதற்கு, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எந்த தார்மீக அடிப்படையும் - உரிமையும் கிடையாது. ஏனென் றால், அவருக்குக் கீழ் உள்ள பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து சட்டம் ஒழுங்குக்குப் பொறுப்பான திணைக்களங்கள் பிரித்தெடுக் கப்பட்டு விட்டன. ஆனாலும், அவர் சட்டம் ஒழுங்கு குறித்து இந்தளவுக்கு அழுத்தமான கருத்துகளை வெளி யிட்டுள்ளார் என்றால், உண்மை யிலேயே சட்டம் ஒழுங்கு அமைச்சு தனியாகப் பிரிக்கப்பட்டமை உண்மை தானா என்ற கேள்வியைத் தான் எழுப்ப வைக்கிறது.

### உள்நோக்குடன் பேசும் கோத்தபாய ராஜபக்ஷ

வடக்கு மாகாண முதல் வராகப் பொறுப்பேற்று விட்டதால், வடக்கு மாகாணத்தின் சட்டம் ஒழுங்குக்கு அவரே பொறுப்பு என்று பொறுப்புக் கூறவைக்கும் பாங்கு இந்தக் கருத் தில் தொனிப்பதை அவதானிக்கலாம் அதுவும், பொலிஸாரைக் கையாளும் அதிகாரம் இல்லாவிட்டாலும் கூட, சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண் டியது முதலமைச்சரின் பொறுப்பு என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளதில் உள்நோக் கம் ஏதும் உள்ளதா என்ற சந்தேகத் தையும் அவரது கருத்து எழுப்ப வைக் கிறது. மாகாணசபைத் தேர்தலுக்குப் பின் னர், வடக்கில் குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதைச் சுட்டிக்காட்டியே, அவர் முதலமைச்சரே அதற்குப் பொறுப்பு என்று கைகழுவ முயன்றுள்ளார்.

13ஆவது திருத்தத்தின்படி, மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தாலும், அவற்றை வழங்க முடியாது என்று முரண்டு பிடிக்கும் மஹிந்த அரசின் மிக முக்கியமானதொரு பிரமுகரே இந்த கோத்தபாய ராஜபக்ஷ. இந்த விவ காரத்தில் அவர் தனது இறுக்கமான பிடிவாதத்தைத் தளர்த் திக் கொள்ளத் தயாராக இருந்தாலே, பாதிக் கிண றைத் தாண்டி விடலாம். அப்படிப் பட்டவர், எதற்காக வடக்கு மாகாண முதல்வருக்குச் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு உள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார் என்ற கேள்வி எழுகிறது. தற்போதைய நிலையில் எந் வொரு சம்பவம் தொடர்பாகவும், முதலமைச்சரால் நேரடியாக பொலி ஸாருக்கு உத்தர விட முடியாது. அவ் வாறாயின் அவ ரால் எப்படிச் சட்டம் ஒழுங்கை உறு திப்படுத்திக் கொள்ள முடியும் என்ற கேள்வி எழுவதை, பாதுகாப்புச் செய லரால் விளங்கிக் கொள்ள முடியாது என் றில்லை.



### மாணவத் தலைவனின் பேச்சு எடுபடாது

பாடசாலைகளில், ஒவ்வொரு வகுப் பறைகளிலும் ஒரு மாணவர் தலை வன் (மொனிற்றர்) நியமிக்கப்பட்டி ருப்பார். அவர் வகுப்பறையில் ஆசிரி யர் இல்லாத நேரங்களில், மாண வர்களை கண்காணிப்பார், அமை தியை மீறும் மாணவர்களின் பெயர் களைக் கரும்பலகையிலோ அல்லது ஒரு கடதாசியிலோ குறித்து வைத்து ஆசிரியர் வந்த பின்னர் கொடுப்பார். கொஞ்சம் கண்டிப்பான மாணவத் தலைவன் என்றால், எல்லை மீறும் மாணவர்களை எழுந்து நிற்கச் சொல்வார். அதற்கு அப்பால் அவரால் எதையும் செய்ய முடியாது. கையில் பிரம்பெடுத்து அடிக்கவோ, தண்டிக் கவோ முடியாது. அதற்கான அதி காரங்கள் அவரிடம் கிடையாது. பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் கருத்தை வைத்துப் பார்க்கும் போது, கிட்டத்தட்ட, வடக்கு மாகாண முதல்வரையும், ஒரு பாடசாலை வகுப்பறை மாணவத் தலைவனைப் போன்று செயற்பட வேண்டும் என்றே எதிர்பார்க்கிறார் போலத் தெரிகிறது. வகுப்பறையில் அமைதி குலைந்திருந்தால், சில ஆசிரியர்கள் எல்லா மாணவர் களையும் தண்டிப்பார்கள். வேறு சில வித்தியாசமான ஆசிரியர்கள் வகுப்பறை மாணவத் தலைவனை அழைத்து எதற்காக அமைதியைப் பேணத் தவறினாய் என்று அவருக் குத் தண்டனை கொடுப்பார்கள். கோத்தபாயவும் வகுப்பு மாணவத் தலைவனே பொறுப்பு என்று கூறும் ஆசிரியர்களைப் போல, கருத்து வெளியிட்டுள்ளார்.

### அதிகாரம் இல்லை பொறுப்பு முதல்வருக்கு

பாடசாலைகளைப் பொறுத்த வரை யில், மாணவர்களால் வகுப்ப றையை நிர்வகிக்கும் அதிகாரத்தை கோர முடியாது. ஏனென்றால், அதற்குரிய வயது அவர்களுக்கு இருக்காது. ஆனால், மாகாணசபைக்கு ஒரு மாகாணத்தின் சட்டம் ஒழுங்கை பேணுவதற்கான சகல தகை மைக ளும் இருக்கும். ஆனாலும், மாகா ணங்களுக்கு பொலிஸ் அதி காரங் களை வழங்க இலங்கை அரசு தயா ராக இல்லை. மாகாணசபைகளை, வெறும் பொம்மையாக வைத்திருக் கவே அரசு முனைகிறது. இத் தகைய சூழ்நிலையில், மாகாணசபை யின் கையில் அதிகாரத்தையும் கொடுக்கா மல், சட்டம் ஒழுங்குக்கு முதல்வரே பொறுப்பு என்று அரசு அபத்தமான கருத்தை முன் வைக்கிறது என் றால் அதில் ஏதோ ஓர் உள்நோக் கம் இருக்கிறது என்று தானே அர்த்தம். அதாவதுமற்றைய மாகா ணங்க ளைப் பற்றியெல் லாம் அரசு கவ லைப்படவில்லை. குறிப்பாக, வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு பொலிஸ் அதி காரங்கள் பகிர்ந் தளிக்கப்பட்டு விடக் கூடாது என்பதில் தான் அரசு உறுதியாக உள்ளது.

இதற்காக எத்தகைய குறுக்கு வழி களையும் அரசு கையாளலாம்.

ஏற்கனவே வடக்கில் பல சந்தர்ப்பங் களில், படைமுகாம்களை மூடும் முடி வுகள் எடுக்கப்பட்டபோது, அதைத் தடுப்பதற்காக, பொதுமக்களைக் கொண்டே போராட்டங்களை நடத்த வைத்தனர் படையினர்.

சில இடங்களில் மர்மமான கொள் ளைகள் நடந்தன. கொலைகள் அதி கரித்தன.

அவற்றுக்கும், படையினரின் சோத னைகள் குறைப்புக்கும் முடிச்சுப் போடப்பட்டு, படையினர் விலகக் கூடாது என்று போராட்டங்கள் நடத்தப் பட்டன.

இப்போதும் மாகாணசபைத் தேர்த லுக்குப் பின்னர்கூட, வடக்கில் சில கொள் ளைகள், கொலைகள் நடந்துள்ளன.


அவற்றைக் கருத்தில் கொண்டே, முத லமைச்சரே சட்டம் ஒழுங்குக்குப் பொறுப்பு என்று கூறியுள்ளார் பாது காப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ. வடக்கு மாகாணசபைக்கு பொதுமக் களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பு உள்ளதே தவிர, அதற்கான அதிகாரங்களைக் கொடுக்க வேண்டியது மத்திய அரசு தான் . அதைச் செய்யாமல், வெறு மனே, சட்டம் ஒழுங்குக்கு அவரே பொறுப்பு என்று கூறுவதால், முதல்வ ரிடம் அதிகாரம் வந்து விட்டதாக கருதிவிட முடியாது.வடக்கு மாகாண சபை செயற்படத் தொடங்கியிருந் தாலும், வடக்கிலுள்ள மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அதற்கு இருந்தாலும், கோத்தபாய ராஜபக்ஷ கூறும் அளவுக்கு முதல்வருக்கு அதி காரம் இல்லை.அவருக்குரிய அதிகாரங் களை கொடுக்காமல், அவரை பொறுப் பாளியாக்க அரசு முனைகிறது என்றால் அது நல்லதொரு மாற்றத்துக்கான அறிகுறியாகத் தென்படவில்லை.

“ _ ”

**பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் கருத்தை வைத்துப் பார்க்கும் போது, கிட்டத்தட்ட, வடக்கு மாகாண முதல்வரையும், ஒரு பாடசாலை வகுப்பறை மாணவத் தலைவனைப் போன்று செயற்பட வேண்டும் என்றே எதிர்பார்க்கிறார் போலத் தெரிகிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய புன்னகை அழகா...



அனுஷ்கன்


தமிழர்களின் விடுதலைப் போர் பல ஒப்பற்ற தியாகங்களால் கட்டி எழுப்பப்பட்ட ஒன்று. உலக வல்லரசுகளும் உலகின் முன்னணி ஆய்வாளர்களும் மூக்கில் விரலை வைக்கும் அளவுக்கு புலிகள் இயக்கத்தால் வளர முடிந்ததற்கு பல்வேறுபட்ட காரணங்கள் வரலாற்றுப் பதிவுகளில் நிறைந்திருக்கின்றன. ஒரு விடுதலை இயக்கத்தை வளர்த்தெடுப்பதற்கு இராணுவ பலத்திற்கு அப்பால் அரசியல் பலமென்பது மிகவும் அவசியமானது. அரசியலின்றி இராணுவமுமில்லை. விடுதலைப் போராட்டமும் இல்லை. அந்த வகையில் விடுதலைப் போராட்டத்தின் மலையான நிமிர்வுக்கு உரமிட்ட அரசியல் தலைவர்களில் முக்கியமானவர் தமிழ்ச்செல்வன். தமிழ்ச்செல்வனையோ, அவரது என்றைக்கும் நித்தியமான புன்னகையையோ தெரியாதவர்கள் யாருமே இருக்க முடியாது. அந்தளவுக்கு விடுதலைப் போராட்டத்தின் அரசியல் வெற்றிடத்தை தன் ஆளுமையாலும் அரசியல் திறன்களாலும் நிரப்பி விடுதலைப் புலிகளின் கொள்கைகளை எட்டுத் திசையும் எடுத்துச் சென்றவர் தமிழ்ச்செல்வனே. 2007ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ஆம் திகதி அதிகாலை வேளை வான் படையின் குண்டு வீச்சில் அவரது உயிர்பறிக்கப்பட்டாலும் கூட, தமிழ் மக்களிடமிருந்து தமிழ்ச்செல்வன் பற்றிய நினைவலைகளை ஆறு ஆண்டுகள் கடந்தும் எவராலும் பிரிக்க முடியாமலே இருக்கிறது.

தமிழ்ச்செல்வன் விடுதலைப் போராட்டத்திற்குள் பிரவேசித்த காலம் விடுதலைப்புலிகள் கெரில்லா படையாக யாழ். நகரத்திற்குள் உலாவிய வேளையாகும். கண்ணில் காணும் இராணுவ அணிகள் மீது கரந்தடித் தாக்குதலை நடத்தி விட்டு விடுதலைப்புலிகள் தப்பியோடி பதுங்குதலே அப்போதைய விடுதலைப் புலிகளின் பிரதான தாக்குதல் உத்தியாக இருந்தது. இந்த நேரத்தில் தான் 18 வயது இளைஞனாக இயக்கத்துடன் யாழ்ப்பாணத்தின் பயிற்சி முகாம் ஒன்றில்வைத்து இணைந்து கொண்டார் தினேஸ் என்னும் இயற்பெயர் கொண்ட தமிழ்ச் செல்வன். இணைந்து சில நாள் களுக்குள்ளே விடுதலைப்புலிகளின் தலைமை யின் மனதிலும் இடம்பிடித்துக் கொண்டார். இதனால் சிறப்பு தாக்குதல் படைப் பிரிவில் ஒரு தளபதியாக குறுகிய காலத்திற்குள் அவரால் பரிணமிக்க முடிந்தது.

முட்கம்பி வேலிகள் அடித்து, வலிகாமத்தின் பெருமளவு பிரதேசங்களை விழுங்கியபடி பலாலி படைத்தளத்தில் இருந்து கொண்டு தமிழ்மக்களை கொத்துக் கொத்தாக வேட்டையாடிய சிங்களப்படைகளுக்கு பாடம் படிப்பிக்க வேண்டுமென்பதே தமிழ்ச்செல்வனின் வெறியாக இருந்தது. இதனால் தாக்குதல் அணிகளுடன் தானே நேரடியாக களமிறங்கி பல தடவைகள் பலாலிப் படைத்தளம் மீது உக்கிர தாக்குதலை தொடுத்து சிங்களப்படைகளை கலங்க வைத்தார். யாழ்ப்பாணத்தை சிங்களப் படைகளிடமிருந்து மீட்டெடுக்க வேண்டுமென்பது தமிழ்ச்செல்வனின் கனவு. அதனால் தான் இறுதியில் யாழ் செல்லும் படையணிக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தார். ஒரு போராளியாக உருவெடுத்த தமிழ்ச்செல்வனின் தாக்குதல் திறமைகள் தலைவர் பிரபாகரனிடத்தே அவர் மீது ஓர் அக்கறையை தோற்றுவித்தன. முகத்தைப் பார்த்தே திறமையை மதிப்பிடும் தீர்க்கதரிசனம் வாய்ந்த தலைவர் தமிழ்ச்செல்வனிடம் ஏதோ ஓர் ஆர்வம் நிரம்பிக் காணப்படுவதை ஊகித்து அறிந்து கொண்டார். தமிழ்ச்செல்வனின் எதற்கும் கலங்காத மனமும், ராஜதந்திரமும், பிரச்சினைகளை சுமுகமாக அணுகும் திறனும், நித்திய புன்னகையும் தலைமையை கவர்ந்திழுத்து விட்டது. எனவே தான் அரசியல் பிரிவை தமிழ்ச் செல்வனின் கைகளில் ஒப்படைப்பது என்ற தீர்மானத்தை தலைமை எடுத்தது.

ஒரு விடுதலை இயக்கத்தின் அரசியல் நகர்வுகள் கடினமானவை. பரப்புரை முன்னெடுப்பு, சர்வதேசத்தையும் போராளிகளையும் நேரத்தில் சமாளிக்கும் ஆற்றல், ராஜதந்திர பூகோள செயற்பாடுகளுக்கு நடுவில் போராட்டத்தின் அரசியல் கொள்கையை நகர்த்திச் செல்லும் திறன் என்பன ஓர் இயக்கத்தின் அரசியல் தலைவனுக்கு மிகவும் அவசியமான விடயங்கள். இவ்வாறு ஒரு சிக்கல் மிகுந்த பணி ஒப்படைக்கப்பட்ட போதும், அது ஒரு சுமையாகவே தமிழ்ச்செல்வனுக்குப் படவில்லை. அந்தளவுக்கு அரசியல் விற்பன்னராக தலைமை தமிழ்ச்செல் வனை வளர்த்தெடுத்தது. பேச்சு மேசையென்றாலும் சரி, ஊடகவியலாளர் சந்திப்புக்கள் என்றாலும் சரி ஒரு புன்னகையிலேயே ஆயிரம் அரசியல் பேசும் அரசியல் தலைவராக விளங்கினார் தமிழ்ச்செல்வன். நோர்வே தொடங்கி ஒஸ்லோ வரை எல்லா நாடுகளிலும் தமிழ் மக்களின் விடுதலைக் கனவை சுமந்து பயணித்தவர் பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன்.7 வருடகாலம் ஆயுதப்போராளியாகவும் 21 வருட காலம் அரசியல் போராளியாகவும் வலம் வந்த நித்திய புன்னகை அழகன் தமிழ்ச் செல்வனை பேரின அரசு சமாதானம் பேசிக்கொண்டே சாகடித்தது. அந்த நாள் அனைத்து தமிழ்மக்கள் மனதிலும் ஆறாத நினைவுப் பதிவாக இருக்கிறது. சிங்களத்தின் அரசியல் சாணக்கியத்தை ஒற்றை விரல் நுனியில் அறிந்து வைத்திருந்த மாபெரும் இளம் அரசியல் போராளியான தமிழ்ச்செல்வன் மாகாணசபை பற்றியும் மாவட்ட சபைகள் பற்றியும் முழங்கிய கருத்துக்கள் இன்று உலக அரசியல் ஆய்வாளர்களின் ஆய்வுப் பொருளாக இருக்கின்றது. எனவே முள்ளி வாய்க்கால் பேரவலத்தின் பின் மாபெரும் அரசியல் வெற்றிட மொன்றுக்குள் தள்ளப்பட்டிருக்கும் தமிழினம் தமிழ்ச்செல்வனின் புன்னகையோடு கூடிய அரசியல் கருத்துக்களை ஏந்திக் கொண்டு விடுதலை நோக்கிய அரசியல் பயணத்தை உத்வேகமாக ஆரம்பிக்க வேண்டும்.

---




## கணவனும் மனைவியும் கருத்தொருமித்து வாழ வழிகாட்டும்

# கேதார கௌரி விரதம்



எம்.பி.அருளானந்தன்

கேதார கௌரி விரதம் புரட்டாதி மாத பூர்வ பக்க அட்டமியில் ஆரம்பித்து ஐப்பசி மாதத்து அபரபக்க சதுர்த்தசியில் நிறைவு பெறும்.

உலக மாதாவாகிய சக்தி சிவபெருமானை நோக்கிச் சிவபூசை செய்து இந்த விரதத்தை நோற்றுப் பெரும் பேற்றினை அடைந்தாள். நினைத்ததை தருகின்ற சக்தி விரதங்களுள் மகிமை வாய்ந்த விரதம் கேதார கௌரி விரதமாகும். இது இருபத்தொரு தினங்கள் சக்தியை நினைத்து அனுஷ்டிக்கும் விரதமாகும். இந்த விரதத்தை இருபத்தொரு தினங்களும் அனுஷ்டிக்க இயலாதவர்கள் சதுர்த்தசித் தினத்திலாவது கேதார நாதரை வேண்டி அனுஷ்டிக்கலாம்.

இந்த விரத மகிமையை நோக்குகின்ற பொழுது சர்வமும் சிவமயமே என்ற கொள்கையுடையவரான பிருங்கி என்னும் நாமத்தையுடைய முனிவரான திருக்கைலாயத்திலே சிவனை வழிபடுவதற்காக சென்றிருந்த வேளை அங்கே சிவன் தனித்திருக்காது பார்வதி பரமேஸ்வரராகக் காட்சியளிப்பதைக் கண்டார்.

சிவனை மட்டும் எப்பொழுதும் வணங்கி வரும் பிருங்கி முனிவர்-வண்டுருத்தாங்கி பரமேஸ்வரரை மட்டும் வலம் வந்து பிரதட்சணம் செய்தார். அம்மையைத் தவிர்த்து விட்டார். முப்பத்து முக்கோடி தேவர்களும், அம்மை, அப்பா இரு வரையும் வலம் வந்து வணங்கி நிற்க பிருங்கி முனிவர் சிவபெருமானை மாத்திரம் வலம் வந்து வணங்கி நின்றமையும் உலக மாதாவாகிய தன்னைப் புறக்கணித்தமையும் அம்மையை ஆத்திரங் கொள்ளச் செய்தன.

இதனால் பார்வதிதேவி பிருங்கி முனிவரை சக்தியற்றவராகவும், ஆற்றலில்லாதவராகவும் ஆக்கி விட்டார். ஆற்றலை இழந்த முனிவர் மூர்ச்சையானார். முனிவர் மூர்ச்சை தெளிந்ததும் இறைவனே ஊன்றுகோல் கொடுத்து அவரை இருப்பிடம் சேர்த்தார்.

பார்வதி தேவியார் இவற்றை எல்லாம் கண்ணுற்று தாம் வேறு வேறாக அன்றி இறைவனின் இடப்பாகத்தில் ஒரே வடிவில் இருந்தால் இத்தகைய நிலைமை வந்திருக்காது என்பதை உணர்ந்து பூலோகம் சென்று சிவபெருமானின் உடலில் வாமபாகத்தை வேண்டித் தவம் இயற்றினார்.

கௌதம முனிவரின் ஆலோசனைப்படி உமையம்மையார் சிறந்த விரதமாகிய கேதாரீஸ்வரர் விரதத்தை முறையாக அனுஷ்டித்தார். பரமசிவன் எழுந்தருளி உமையம்மையைத் தமது வாமபாகத்தில் அமர்த்திக் கொண்டார். இறைவன் அர்த்த நாரீஸ்வரர் வடிவம் ஆனார். பாதி ஆண் பாதி பெண் ஆகவுள்ள சிவமூர்த்தமே அர்த்தநாரீஸ்வர வடிவம் ஆகும்.

அப்பொழுது இறைவி இறைவனை நோக்கி இந்த விரதத்தை முறைப்படி அனுஷ்டிப்பவர் நீண்ட ஆயுளையும், சற்புத்திர பேற்றையும், சகல செல்வங்களையும், குடும்ப சுகங்களையும் இம்மையில் பெற்று இறுதியில் தேவரீர் திருவடித் தாமரைகளையும் அடைவதற்குத் திருவருள் புரிய வேண்டும் என வேண்டினார். இறைவனும் அவ்வாறு அனுக்கிரகம் செய்து தேவியோடு அர்த்தநாரீஸ்வரராகத் திருக்கைலாயத்துக்கு எழுந்தருளினார். பிருங்கி முனிவரும் சிவனும் சக்தியும் ஒன்றென உணர்ந்து பழைய உருவைப் பெற்றார். சிவமும் சக்தியும் ஒன்றென உலகத்தவர்களுக்குக் காட்டவே இந்தத் திருவிளையாடல் நடந்தது.

குடும்பத்தில் கணவனும் மனைவியும் கருத்தொருமித்து நல்வாழ்வு வாழ வேண்டியே கேதார கௌரி விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது. அடுத்து, திருமணமாகாத கன்னிப் பெண்களும் தமக்கொரு நல்ல கணவன் கிடைக்க வேண்டுமென நினைத்து அனுஷ்டித்தால் திருமணம் நிறைவேறுகிறது. குடும்பம் சீரோடும், சிறப்போடும், செழிப்போடும், சுகத்தோடும், அமைதியுடனும் வாழ சிவசக்தி வழிபாடு மிகவும் அவசியமானதாகும்.

இந்த வழிபாட்டில் பிரதானமாக முதலாம் நாள் கேதார கௌரி நோன்புக் கயிற்றில் ஒரு முடிச்சுப் போடப்படும். தொடர்ந்து வரும் 21 தினங்களும் 21 முடிச்சுப் போட்டு நிறைவு நாளன்று இருபத்தொரு நெய்வேத்தியப் பொருள்களுடன் வழிபாடு நிறைவேற்றி நோன்புக் கயிற்றை கையில் கட்டுவர்.

இத்தகு மகிமை வாய்ந்த விரதத்தை அனுஷ்டித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்**: தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு காரியங்களைச் சாதிப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஒத்துழைப்பு உண்டு. வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். மாணவர்கள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள்.

**இடபம்**: பழைய நல்ல சம்பவங்களை நினைவுகூர்ந்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். மனக்குழப் பங்கள் நீங்கும்.

**மிதுனம்**: ஆரவாரமின்றிச் சில வேலைகளை முடிப்பீர்கள். வெளியூர்ப் பயணங்களால் ஆதாயம் உண்டு. தன்னம்பிக்கை துளிர் விடும். அரச வேலைகளிலிருந்து வந்த தடைகள் நீங்கும்.

**கடகம்** : மனக்குழப்பங்கள் நீங்கும். நம்பிக்கைக்குரியவர்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். கோபம் குறையும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**சிங்கம்**: அதிரடியாகச் செயற்பட்டு சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**கன்னி**: எதையோ இழந்ததைப்போல் ஒருவித கவலைகள் வந்து நீங்கும். சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். வியாபாரத்தில் இரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**நாளை**

ஐப்பசி-17 ஞாயிற்றுக்கிழமை 03.11.2013
திதி: அமாவாசை மு.இ.07.04 வரை
நட்சத்திரம்: சுவாதி பி.இ.12.23 வரை
சுபநேரம்: 09.04 - 10.34 வரை
இராகுகாலம்: 04.34 - 06.04 வரை

**துலாம்**: வெளியூர் பயணங்களால் அலைச்சல், செலவுகள் ஏற்படும். வியாபாரத்தில் வேலையாள்களால் பிரச்சினைகள் வரக் கூடும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும்.

**விருச்சிகம்**: சில தினங்களாக முடியாமல் இழுத்தடித்த காரியங்களெல்லாம் இனி முடிவுக்கு வரும். அரச வேலைகளில் அனுகூல மான நிலை காணப்படும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**தனுசு**: மன உளைச்சல் நீங்கும். உத்தியோகத் தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள்.

**மகரம்**: ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். நண்பர்கள், உறவினர்களின் உதவி கிடைக்கும். மனக்குழப்பங்கள் நீங்கும். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**கும்பம்**: எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். அயலார் சிலரின் செயற்பாடுகளால் கோபம், எரிச்சல் அடையலாம். விமர்சனங்களைக் கண்டு அஞ்ச வேண்டாம்.

**மீனம்**: சோர்வு, அலைச்சல் நீங்கி ஆனந்தமாகக் காணப்படுவீர்கள். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். அரசியல்வாதிகளின் ஆதரவு கிடைக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | 4 | 9 | | | |
| | | | 5 | | | | | 7 |
| | 3 | 8 | | | | 6 | 4 | |
| | 1 | | | 6 | 2 | | 5 | 9 |
| | 5 | 9 | | | | 2 | 1 | |
| 2 | 8 | | 9 | 1 | | | 3 | |
| | 4 | 1 | | | | 5 | 7 | |
| 6 | | | | | 8 | | | |
| | | | 4 | 7 | 1 | | | 8 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 5 | 6 | 4 | 9 | 3 | 8 | 7 |
| 4 | 6 | 7 | 5 | 8 | 3 | 1 | 9 | 2 |
| 9 | 3 | 8 | 1 | 2 | 7 | 4 | 6 | 5 |
| 3 | 1 | 4 | 7 | 6 | 2 | 8 | 5 | 9 |
| 7 | 5 | 9 | 8 | 3 | 4 | 2 | 1 | 6 |
| 2 | 8 | 6 | 9 | 1 | 5 | 7 | 3 | 4 |
| 8 | 4 | 1 | 2 | 9 | 6 | 5 | 7 | 3 |
| 6 | 7 | 2 | 3 | 5 | 8 | 9 | 4 | 1 |
| 5 | 9 | 3 | 4 | 7 | 1 | 6 | 2 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனம் நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

சவால்களை வெல்லும் சர்வதேச கல்வித் தகைமைகளை வழங்கும்

BCAS Campus இன்
இனிய தீபாவளி
நல்வாழ்த்துக்கள்...

BTEC HND in...
- Computing & Systems Development
- Quantity Surveying
- Civil Engineering
- Business Management
- Biomedical Science
- Law
- Psychology



www.bcas.lk

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910
077 710 2131

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபத் திருநாள் சிறப்பு மலர்

02.11.2013

## துன்ப துயரங்கள் நீங்கட்டும்



இன்று தீபாவளித் திருநாள். இது தமிழ் மக்களுடைய பொன்னான ஒரு பண்டிகைப் பெருநாள். வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனாகிய காத்தற் கடவுளான ஸ்ரீ மகாவிஷ்ணு மூர்த்தியின் சக்கராயுதத்தால் மாண்ட கொடுமை மிக்க அரக்கன் நரகாசுரனின் வேண்டுதலுக்கிரங்கியதால் உருவான இந்தத் தீபாவளியைக் கொண்டாடி மகிழும் அனைவரும் சீரோடும் சிறப்போடும் வாழ அருளாசி நல்கி வாழ்த்துகின்றோம்.

இந்தத் தீபாவளியுடன் இது காலும் நாம் பட்ட துன்ப துயரங்கள் யாவும் நீங்கி இனிமேல் இன்பவாழ்வு நிலைக்க வேண்டும். இன்பமும் மகிழ்ச்சியும் பொங்கிப்பரவி எங்கும் மங்களம் நிலவ ஆசிவழங்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

ஈழமணித் திருநாடு ஒரு சிறப்பான சீரான வளநாடாகும். இங்கு வாழ்கின்ற மக்கள் எல்லோரும் துன்பமில்லாத ஒரு நல்ல நிறை வாழ்வு வாழ வேண்டும் என்பதே எமது வேணவா. ஆதலால்-

இன்றைய தீபாவளிப் பண்டிகைத் திருநாளில் எல்லோரும் நலமுடன் சுகமே வாழ இறையருளை நாடித் தேடி ஓடி எல்லாம் வல்ல நல்லைக் கந்தனின் திருவருள் கிடைக்க அவனைச் சிந்தித்து வந்தித்துச் சேவித்துப் பிரார்த்தித்து அருளாசி வழங்கி மகிழ்கின்றோம்.

ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
ஆதீன குருமுதல்வர்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

## ஒளிமயமான வாழ்வு மலரட்டும்



தீபமும் ஒளியும் இணைந்தது தீபாவளி. தீபாவளி என்பதற்குள்ளே ஒளி இருப்பது போல, ஒவ்வொருவருக்குள்ளேயும் ஒரு ஒளி உண்டு. வீட்டிலே விளக்கேற்றினால் இருள் அகன்று ஒளி கிடைக்கிறது. அந்த ஒளி பிறந்ததும் இருள் அகல்வதைப்போல, மனதிலுள்ள ஒளியை மக்கள் உணர்ந்தால் மனதிலுள்ள இருள் அகன்றுவிடும். அந்த மன இருளை அகற்றி ஒளியைக் காண்பது தான் வாழ்க்கை. அந்த வாழ்க்கை ஒளி என்பது அனுபவத்தால் அடைவது; அனுபவித்து பின் ஆனந்திப்பது.

வாழ்க்கை என்றால் இன்பமும், துன்பமும், கசப்பும் இருக்கும். எளிமையும், ஏழ்மையும், வலிமையும் இருக்கும். இந்த மூன்றும் சேர்ந்து திரிசூலம் போன்றதுதான் வாழ்க்கை. இத்தனையும் இருந்தாலும் தீபாவளியை உற்சாகமாக கொண்டாடுவது என்பது வழிவழியாக வந்த வழக்கம். தீபாவளியன்று இனிமை இருக்க வேண்டும், இன்பம் இருக்க வேண்டும், துன்பம் இருக்கக்கூடாது, துன்புறுத்தலும் இருக்கக் கூடாது.

இது அன்புத் தீபாவளியாக இருக்கட்டும்! அனைவரும் இன்பமுடன் வாழட்டும், மற்றவரையும் வாழவிடட்டும் ,தீபாவளித் திருநாளில் ஒளிமயமான வாழ்வு மலரட்டும் என்று ஆசீர்வதிக்கின்றோம்.

சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிகதேசிகர்,
இந்துமத குருபீடாதிபதி.

## ஒற்றுமை நிலவட்டும்



நரகாசுரன் என்ற அசுரனை வதம் செய்த நன்னாளாக தீபாவளித் திருநாள் தமிழ் மக்களால் கொண்டாடப்படுகின்றது. இந்தத் திருநாளில் நாம் அனைவரும் ஒற்றுமையுடனும், சகோதர உணர்வுகளுடனும் கூடி மகிழ வேண்டியது அவசியமாகும். அனைத்து மக்களுக்கும் தீபாவளி தின நல்வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

சிவஸ்ரீ. பரமேஸ்வர
மனோகரக்குருக்கள்
இந்துமத குரு பீடாதிபதி.

## அன்புடன் வரவேற்போம் தீபத்திருநாளை



விதியினை மதி வென்று, காரிருளை ஒளி வென்று நானிலம் விடிவுகாண வந்து திக்கும் தீபத்திருநாளை அன்புடன் வரவேற்போம்.

பஞ்ச பூதங்களில் ஒன்றான நெருப்பை இறையொளியின் அம்சமாக தீபங்களாக இல்லங்களில் ஏற்றி வழிபடுவது தீபாவளி மரபாகும்.

அறியாமை, அகம்பாவம், சினம், அசத்தியம் போன்ற தீய குணங்கள் அழிந்து உலகில் சத்தியம் ஜெயிக்க வேண்டும் என்பதையே இத்திருநாள் வலியுறுத்துகின்றது. இப்புலோகத்தில் மனிதன் தனக்காக வாழாது பிறருக்காக வாழவேண்டும் என்பதை இத்தீபாவளித் திருநாள் எமக்கு உணாத்தி நிற்கின்றது.

சகல உள்ளங்களும் ஆனந்தத்தால் மிளிர்ந்து, சமத்துவமும் சகோதரத்துவமும் மலாந்து, உள்ளங்களில் சுழ்ந்திருக்கும் இருள் அகன்று அனைத்து உள்ளங்களி லும் தீபப்பரவசம் மலர இப்புனித தினத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைந்துபிரார்த்திப்போம்.

அசுர யுகம் அழிந்து அன்புடன் அகிம்சை வழி பிறக்கவும் நிம்மதியிழந்து வாழும் எம்மக்களின் வாழ்வில் விடிவுபிறந்து நிம்மதியும் சந்தோசமும் பிறக்க வேண்டும் என பிரார்த்திப்பதுடன், இன்றைய தினம் தீபாவளித் திருநாளைக் கொண்டாடும் அனைத்து இந்துக்களுக்கும் சிறந்த ஒரு நாளாக அமைய வேண்டும் என வாழ்த்து வதுடன் எம்மக்களுக்கு சிறந்த ஒரு எதிர்காலம் மலர வேண்டும் எனவும் இருக ரம் ஏந்தி பிரார்த்திக்கின்றேன்.

டீ.எம் சுவாமிநாதன்,
ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்,
ஸ்ரீபொன்னம்பலவாணேஸ்வரர்
தேவஸ்தானம். தர்மகர்த்தா

## இளைஞர் சிந்திக்க வேண்டிய நாள்



அனைவருக்கும் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். இறையருளால் அனைவரும் இன்புற்று வாழ இறைவனை இந்த நாளில் பிரார்த்திக்கின்றேன். இந்துக்களின் இனிய விழாக்களில் தீபாவளி தனித்துவமானது. நரகாசுரன் என்ற அசுரத்தன்மை மிக்கவனின் கொடுமையால் பாதிப்புற்ற பக்தர்களை பரந்தாமன் காப்பாற்றிய நாளே தீபாவளி. அறத்தைக் காப்பாற்றுவதற்கு இறைவன் இறங்கி வருவான் என்ற தத்துவத்தை உணர வைக்கும் இந்த நாள் குறித்த வரலாற்றை அனைவரும் உணர்வர். எனவே இந்த நாளில் எங்களைச் சூழ உள்ள துன்பங்கள் அகல்வதற்கு அனைவரும் இறையருளை வேண்டுங்கள். நரகாசுரன் தன் தவறை உணர்ந்து தன்னைத் தண்டித்த நாளை தர்ம நாளாக ஒளியேற்றி வணங்குங்கள் என இறுதியில் உரைத்தான் என்பது வரலாறு.

மனித வாழ்வு மிகவும் அற்புதமானது. இந்தப் பிறவியை சீராக சிறப்பாகப் பயன்படுத்த அனைவரும் முயற்சி செய்வோம். தாய், தந்தை, உற்றார், உறவினர் அனைவரையும் நேசிக்கும் பழக்கம் இத்தகைய திருநாள்களில் பேணப்பட வேண்டும். தாய், தந்தையை நேசிக்க வேண்டிய வயதில் எந்தவித உழைப்புமின்றி ஊர் உலா வரும் உழைப்பற்ற எம் இளைஞர்கள் இதனைச் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

எம் அருமைச் சகோதரா; இந்த நாளில் இரு கரம் கூப்பி மன்றாடுகின்றேன். உழைப்பில் ஈடுபடுங்கள், வறுமையை விரட்டுங்கள், பெற்றோரை பேணுங்கள், புதுமைகளைச் செய்யுங்கள், புதிய மனிதர்களாகப் பிரகாசியுங்கள். எல்லை கடந்த ஆடம்பரங்களைத் தவிருங்கள். அறிவியல் உலகில் காலடி எடுத்து வையுங்கள். நல்ல விடயங்களை சாதிக்கத் தயாராகுங்கள். வயதிலே மூத்தவரோடு வாதம் செய்வதைத் தவிர்த்து அவர்களை வாழ்த்துங்கள். உங்கள் புத்தாக்கக் கருத்துக்களை வயதானோருக்கு பக்குவமாக எடுத்துரையுங்கள்.

எங்களுக்குரிய சௌகரியங்கள் போதாது எனக் கவலைப்படுவதை விடக் கிடைத்தவற்றுக்காக முதற்கண் கடவுளுக்கு நன்றி சொல்வோம். ஏதுமறியாது, சிறு பராயத்திலே தாய், தந்தையை இழந்து ஆதரவற்ற நிலையங்களில் அடைக்கலம் புகுந்து வாழும் மழலைகளின் நிலையை ஒரு கணம் உணர்ந்து வாழப்பழகுங்கள். சிறைக்கூடங்களில் அல்லலுறும் எம்மவரை நினைந்து அவர்களின் விடுதலைக்காகப் பிரார்த்தியுங்கள். வைத்தியசாலைகளில் நோய் வாய்ப்பட்டு அல்லலுறும் அன்பர்களுக்காக அனைவரும் பிரார்த்தியுங்கள். இருளை அகற்றும் நன்னாளாகிய தீபாவளி நன்னாளில் உயிர்களைக் கொன்று உண்பதில் ஆர்வம் காட்டாதீர்கள். குடியைக் கெடுக்கும் குடியைக் கைவிடுங்கள். நல்லதையே எண்ணுங்கள். வயதிலே மூத்தவர்களுக்கும் குழந்தைகளுக்கும் புத்தாடை கொடுத்து பிறர் மகிழ்வதை தரிசியுங்கள். ஏழைகளைச் சிரிக்க வைக்க இந்த நாளில் இயன்றவரை உதவுங்கள். தீபத்திருநாளில் தீமைகள் அற்ற நன்னாளாக அமைய இறையருளை வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

கலாநிதி ஆறுதிருமுருகன்
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## சுபிட்சம், சகவாழ்வு மலரட்டும்



அன்பிற்கினிய அனைத்துள்ளங்களுக்கும் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள். எமது தமிழ்மக்களின் சுய மும் பலமும் உலகறியச் செய்திட்ட மகிழ்வுடன் இனிய தீபாவளி திருநாளின் மகிழ்வும் இரட்டிப் பாகின்றது.

போர் நடந்த மண்ணில் காலம் கடந்த போதும் இன்றும் கூட பலவிதத்திலும் புது விதத்திலும் யுத்தம் நடந்து கொண்டு தான் இருக்கிறது. க்ருதயுகத்தில் தேவலோகம் அசுரலோகம் என ஒவ்வொரு உலகில் வாழ்ந்துவந்த தேவர்களும் அசுரர்களும் கலியுகத்தில் உலகங் கள் அற்றுப்போய் அவ்வுலகங்கள் எம் மனதில் ஒன்றாகிவிட்டன. பலர் மத்தியில் கோபம், பொறாமை, அழுக்கு, புகைப்பது, குடிப்பது, ஆபாசப் பேச்சுக்கள், வக்கிரபுத் திகள், ஏமாற்றுவது, புறம்கூறுவது, பாலியல் வக்கிரங்கள், சுய நலம், திருட்டு, வரதட் சணை என தேவ அசுர யுத்தம் செய்து கொண்டிருக்கின்றது.

ஒரு அறையின் இருட்டைப்போக்க எப்படி வெளச்சம் தேவைப்படுகின்றதோ, அதே போல் நம்மில் இருக்கும், நம்மைச் சூழ் ந்திருக்கும் இருட்டு என்னும் அசுரனை அழிக்க ஞானஒளி, என்ற வெளிச்சம் தேவைப் படுகின்றது. உண்மை ஒளியாகிய இறை ஒளி தேவைப் படுகின்றது. இறை ஒளி மூலம் எங்கள் மக்களை பீடித்திருக்கும் இருள் அகலட்டும். சுபீட்ச மும், சகவாழ்வும், பிறக் கட்டும். மக்கள் குதூகலத்துடன் தீபங்கள் ஏற்றி மகிழ் வுடன் தீபாவளி கொண்டாடட்டும்.

சிவஸ்ரீ. சபா. வாசுதேவக்குருக்கள்
தலைவர், சர்வதேச இந்துமத
குருமார் ஒன்றியம், யாழ்ப்பாணம்

## தித்திக்கும் தீபாவளித் திருநாள்

இன்று தீபாவளித் திருநாள். இது ஓர் இனிய நல்ல நாளாகும். இந்த இனிய நல்ல நாளில் இந்து மக்கள் இறையாசி வேண்டி தானதர்மம் செய்து உள்ளம் மகிழ்ந்து இன்ப வாழ்வில் திளைத்திருக்க வேண்டும்.

காலை எழுந்து புனித புண்ணிய நீராடி புத்தாடை அணிந்து ஆலய தரிசனம் செய்து இது வரை காலமும் தாம்பட்ட துன்ப துயரங்கள் விலகி இனி எல்லோருமே மகிழ்ச்சியுடன் கலந்த மாங்கல வாழ்வு வாழ இறையருள் திருவருள் புரியட்டும். இந்தத் தீபாவளி எப்படி வந்தது? இதை ஏன் நாம் கொண்டாட வேண்டும்? இந்த வினாக்களுக்கு ஒரு புராண வரலாறு விடை பகர்கின்றது. நரகாசுரன் என்ற ஓர் அரக்கன் தன் தவ வலிமை யினால் வரங்களைப் பெற்று மூவுலகையுமே கொடுமைப்படுத்தினானாம். தேவர்களும் முனிவர்களும் [illegible] ஞானிகளும் ரிஷிகளும் ஒன்று சேர்ந்து நரகாசுர னின் ஹிம்சையிலிருந்து [illegible] காக்க வேண்டும் என்று திருமாலிடம் முறையிட்டனராம்.

அதனால் திருமால் நரகாசுரனுடன் போர் செய்து தமது சக்கராயுதத்தால் அசுரனின் உயிர் பறித்தார். அந்த அசுரன் தான் இறக்கும் தறுவாயில், "பிரபுவே! என்னை மன்னிக்க வேண்டும். நான் என்னுடைய ஆணவத்தால் எல்லோரையுமே கொடுமைக்குள்ளாக்கி விட்டேன். ஆகையால் என் உயிர் பிரியும் இந்நாளை எல்லோருமே மகிழ்ச்சியுடனே கொண்டாட வேண்டும். இந்த வாரத்தை எனக்கு அருள வேண்டும்" என்று கேட்டுக்கொண்டானாம். திருமாலும் அப்படியே ஆகட்டும் என்று அசுரனுக்கு வரமீந்தாராம். அந்த நரகாசுரன் இறந்துபட்ட நாளே இந்தத் தீபாவளி என்று சொல்லப்படுகிறது.

ஆதலால்- இந்த இனிய சிறப்புமிகு அரிய பெரிய திருநாளில் நாம் அனைவருமே கடவுளை வணங்கி, எல்லோரிடமும் அன்பு காட்டி, புது ஆடைகளை நாமும் அணிந்து மற்றவர்களுக்கும் தானம் செய்து இன்புற்று நல்வாழ்வு வாழ அவனருளையே நாடி ஓடித் தேடிச் சிந்தித்து வந்தித்துச் வணங்குவோமாக.

இராசையா ஸ்ரீதரன் யாழ்.வண்ணை வேங்கடேசப் பெருமாள் கோயில் ஓதுவார்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் வங்கியின் தீபாவளி சேவை

யாழ்ப்பாணம், நவ.2

தீபாவளி தினத்தை முன்னிட்டு மக்கள் வங்கியின் சாவகச்சேரி, சங்கானை மற்றும் வல்வெட்டித்துறை கிளைகள் காலை 9 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை விசேட வாடிக்கையாளர் சேவைக்காகத் திறந்திருக்கும் என்று பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## மின்மாற்றி வெடித்தது விசமிகளின் செயல்

வலி.வடக்கு, நவ .2

இரவு வேளையில் மின் மாற்றி பெரும் சத்தத்துடன் வெடித்தமையால் மல்லாகம் கல் லாரை வீரபத்திரர் கோவிலடி பகுதியில் உள்ள மக்கள் பெரும் பதட்டமான நிலை மைக்கு உள்ளாகிய சம்பவம் ஒன்று செவ் வாய்க்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது.

இரவு பத்து மணியளவில் மின்மாற்றி வெடித்ததைத் தொடர்ந்து அந்தப் பகுதிக்கான மின்சாரம் தடைப்பட்டது.

சுன்னாகம் மின்சார சபைக்கு அறிவித்ததைத் தொடர்ந்து உடனடியாக இரவோடு இரவாக மின்மாற்றி சீர் செய்யப்பட்டு மின்விநியோகம் வழங்கப்பட்டது.

இதேவேளை மின்மாற்றியில் சில விசமிகள் திட்டமிட்டு மின்மாற்றிக்கு அருகே குறடுகள், வயர்கள் என்பன காணப்பட்டதையடுத்து மின்மாற்றியைச் சேதப்படுத்த முயன்றிருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக மின்சார சபை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். (ந-86)

# ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம்**

(ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர்- ஊர்காவற்றுறை)

உதயம் 10.05.1946

அஸ்தமனம் 02.11.2004

சாகாத மனிதனாய்
சரித்திரம் படைத்திட்ட
சத்திய சீலனே—உன்
ஓயாத நினைவலைகள்—எம்
நெஞ்சை உரசுகையில்

நீயாக யாருமில்லை—நாம்
நிழலாற இடமுமில்லை
பேச்சற்று நடைப்பிணமாய்
சுவாசம் மட்டும் எம்மோடு

மாசற்ற உன் அன்பை
மதிக்காத மானிடர்கள்
காட்டாற்று வெள்ளம் போல்
கால் போன போக்கில்

பேச்சற்று மௌனிகளாய்
யார் சொல்வார்? எடுத்துரைப்பார்
ஏமாற்று உலகத்திலே
காத்திடுவாய் எம் கனவுகளை
படைத்தவனின் பரிவுடனே

கரம்பொன் கிழக்கு. (39532) (6.4.3)

என்றும் நினைவுடன் வாழும்
மனைவி, மக்கள்,
மருமக்கள்

# 13ஆம் ஆண்டின் நினைவில்

மலர்வு்காக உதிர்வுக்காக

08.01.1960 25.10.2000



அமரர்

**கந்தப்பு தவராசா (பவா)**

தி.தி: 02.11.2013

உந்தன் நினைவுகளால் எந்தநாளும்
வெந்து நொந்து தவிக்கிறோம் - நாம் ஆற
வந்து ஒரு தரம் பார்க்காயோ அப்பா?
சந்தை சந்ததிகள் கூறும் உங்கள் நாமம்
எந்த நாளும் ஓங்கி ஒலிக்குதே!
எந்தையே வந்தே விடுங்கள் எம்மிடம்!

கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

நினைவுத் துயரில்
மனைவி, பிள்ளைகள்.

# First Anniversary



Born
07.08.1933

Died
02.11.2012

**Matilda Jeyaranee Jeyarajah**

**02.11.2013**

You left me suddenly
one year ago
still I am mourning
when I think of the sacrifices
you made for me
I am unable to forget same.

Loving Husband
M.A.Jeyarajah

(39691) (7.4.3)

## கௌரி விரத நிகழ்வுகள்

**இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்** நடத்தும் கௌரி விரதகாலச் சிறப்புச் சொற் பொழிவுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் சிவகாமி அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுதர்சன் தர்ப்பணா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் கலந்து கொள்வார்.

சிறப்பு சொற்பொழிவாளர்களாக கந்தசத்திய தாசன், நித்தியதசீதரன், த.மனோஜ்குமார் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

♦♦♦

வண்ணை-கன்னாதிட்டி காளியம்மாள் ஆலய கௌரி விரத இறுதிநாள் பூஜை ஞாயிறுற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும். சிவலிங்கப் பெருமானுக்கு உபசார பூஜை நடைபெற்று, வில்வ அர்ச் சனையைத் தொடர்ந்து காப்புக் கட்டும் நிகழ்வு இடம்பெறும்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக் களம் நடத்தும் கௌரி விரத விசேட சொற் பொழிவுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கயிலநாயகி பரந்தாமன் தலைமையில் நடைபெறும்.

♦♦♦

சுதுமலை சிவன் கோயிலில் முற்பகல் 11 மணிக்கு 'சிவலிங்க வழிபாடு' என்னும் தலைப்பில் நித்திய தசீதரன் சொற்பொழிவை நிகழ்த்துவார்.

மாதகல் பாணாவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நண்பகல் 12 மணிக்கு கந்தசத்தியதாசன் 'கௌரி விரத மகிமை' என்னும் தலைப்பிலும்,

மாகியப்பிட்டி சிவன் கோயிலில் பிற்பகல் 1.30 மணிக்கு 'அர்த்த நாரீஸ்வர வடிவம்' என்னும் தலைப்பில் நித்தியதசீதரனும் சொற்பொழிவுகளை நிகழ்த்துவர்.

## விவசாய விஞ்ஞான போட்டி முடிவுகள்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10, 11 வகுப்பு மாணவர்களிடையே நடத் தப்பட்ட வலய மட்ட விவசாய விஞ்ஞான போட்டி முடி வுகள் வலயக் கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

வகைI ஓ சி தரம் 10

1 ஆம் இடம்-வி.வினோஜா (சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி), 2 ஆம் இடம்-க.தனுஷியா (சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி), 3 ஆம் இடம் -க.கவி ராஜ்(சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி).

தரம் 11

1 ஆம் இடம்-சு.நிவேதா(மீசாலை வீரசிங்கம் மத் திய கல்லூரி), 2 ஆம் இடம்-நா.சௌந்தர்யா (வரணி ம.வி), 3 ஆம் இடம்-சே.திவ்யரூபி (வரணி ம.வி.).

வகை I சி 1 ஆம் இடம்-பு.தமிழ்ச்செல்வன் (உசன் இராமநாதன் ம.வி.), 2 ஆம் இடம் - சு.மயூரன் (உசன் இராமநாதன் ம.வி.), 3 ஆம் இடம் - இ.பிரசாந்தன் (உசன் இராமநாதன் ம.வி.). தரம் 11 1 ஆம் இடம் -ஸ்ரீ.தனுஷா (உசன் இரா மநாதன் ம.வி.), 2 ஆம் இடம்-த.பிரியாங்கா (உசன் இராமநாதன் ம.வி.), 3 ஆம் இடம்- ஜெ. ஜிந்துஷா (உசன் இராமநாதன் ம.வி.).

வகைII தரம்-10- 1 ஆம் இடம்-ச.சர்மிலன் (கைதடி குருசாமி வித்தி.), 2 ஆம் இடம்- சி.வி னித்தா (கைதடி விக் னேஸ்வரா வித்தி.), 3 ஆம் இடம்பிமேரி சிந்துஜா (மிருசுவில் றோ.க.த.க. பா ட.)

தரம் 11 1 ஆம் இடம்-செ.தயானா (கைதடி- நுணா வில் அ.த.க.பாட.), 2 ஆம் இடம்-இ.மைதிலி (கொடி காமம் அ.த.க.பாட.), 3ஆம் இடம்-ந.அனோஜன் (கைதடி குருசாமி வித்தி.) அதிஷ்டன் (கைதடி நுணாவில் அ.த. க.பாட.) (ந-9)

## புலமைப் பரிசில் சித்தி

அண்மையில் வெளியான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் கிளி நொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் சித்தியடைந்த மாணவர் விவரம்:-

ம.பவித்திரன்-188, சு.சுவர்சனா-186, அ.அலெக்ஸ்-184, வி.சங்கீதா-183, வி.யோகடிலக்ஷிகா-180, க.மேதகையன்-177, சா.சஞ்சீபன்-172, சி.யாழ்மறவன்-170, கி.குமணன்-169, ப.அபிலாஸ்-164, ர.லினுர்ஜன்-161, கு.தனுர்ஜன்-161, தி.தீபிகா-161, தெ.அருண்வெட்சி-158, கு.கவிசா-158, ஆ.புவனலோஜினி-158, ஸ்ரீ.தமிழருவி-157, க.நற்கீரன்-157, சி.சோலைப்பிரியன்-156, தோ.டிலக்ஷன்-155, ஜே.ஹேதுசா-155, லோ.கீர்த்தனா-155, பி.றம்மியலக்சுமி-153 (ந)

# ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி

**கவித்திரா சங்கீத்**

பிறப்பு 22.09.1992

இறப்பு 02.11.2012


என் அன்பான அருமை மகளே! உன்னைக் காணாது
எம் ஈரவிழிகள் இன்னும் காயவில்லை.
இதயத்தின் வேதனையும் குறையவில்லை.
ஊரும் பாரும் வியத்திருக்க - காலம்
எல்லாம் எம்முடன் இருப்பாய் என்றிருந்தேன்.
இடையில் வந்த கூற்றுவன் - எம்மை
விட்டுப் பிரித்து விட்டான் - உன்னை
காலங்கள் மாறலாம் - ஏன்
எம் கோலங்களும் மாறலாம் ஆனாலும்
எம் கண்முன்னே நிழலாடும் உன் நினைவுகள்
மட்டும் எம்முடன் நித்தமும் உயிர்வாழும்

தகவல்: கி.சிவானந்தி
619 B, கொக்காவில் றோட்,
நுணுக்காய்.

என்றும் உன் பிரிவால் வாடும்
அம்மா, உடன்பிறப்புக்கள்,
அம்மம்மா.

(32272) (12.6.3)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 29*01*1945

விண்ணில் 02*11*2012

**திருமதி சண்முகவடிவேல் அம்பிகாவதி**

ஆண்டு ஒன்று ஆகியதோ! ஆதாரமே உம்மைப் பிரிந்து
பார்க்கும் இடம் எல்லாம் உம் விம்பம்தானே தெரிகிறது
நீர் வாழ்ந்த வீடு இன்று கலகலப்பை இழந்த வெறுமையில்
கனவினில் அடிக்கடிவரும் உம் முகம்
இப்போதும் நம்பமுடியவில்லை உற்ற உன் கணவரோடும்
பெற்றபிள்ளையாய், பேரப்பிள்ளைகளாய், பூட்டப்பிள்ளைகளாய்
மற்றும் உறவுகளுடனும் கலங்கித் தவிக்கின்றோம்
உம் ஆத்மசாந்திக்காக என்றும் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

4 ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை
(R.S. பாலகிஸ்னன் - ஜேர்மன்)

சண்முகவடிவேல் (கணவர்)
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், அம்மா, சகோதரங்கள்
மற்றும் உறவினர்கள்.

(32213) (45.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருளில் ஓர் ஒளிக்கீற்று

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் வழங்கும்
வானொலித் தொடர் நிகழ்ச்சி.
"பெண்களின் தலைமைத்துவம்:
சமூகத்திலும் அரசியலிலும் பெண்களின் வகிபங்கு."
இலங்கை வானொலி தென்றல் அலைவரிசை FM 104.7 மற்றும் 104.9இல் 03.11.2013 முதல் ஞாயிறு தோறும் காலை 9.00 மணிமுதல் 10.00மணிவரை கேட்கத் தவறாதீர்கள்.

## 30ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம் 15 . 09 . 1923



மறைவு 04 . 10 . 2013

அமரர் **அவுறாம்பிள்ளை மரியாம்பிள்ளை**

குடும்பத்தின் ஒளிவிளக்காய் குவலயத்தே மிளிர்ந்தீரே
கூ.ரறிவும் கொண்டவராய் எமையென்றும் வளர்த்தீரே
பலகாலம் சென்றிடினும் மறவோமே உமை.

அன்பு ஐயாவின் ஆன்ம இளைப்பாற்றுத் திருப்பலி இன்று (02.11.2013) சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும். திருப்பலியில் கலந்து கொள்வதோடு, எமது இல்லத்தில் நடைபெறும் விருந்து உபசாரத் திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இல. 185, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு.

குடும்பத்தினர்.

(39703) (7.6.3)

# ஓய்வூதியருக்கு பணிக்கொடை நிதி கிடைக்காததால் தாமதம்

## பல நூறு விண்ணப்பங்கள் தேக்கம்

கொழும்பு, நவ.2

போதுமான நிதிகிடைக்காததால் ஓய்வூதியர் களுக்குரிய பணிக்கொடையை வழங்குவ தில் தாமதம் ஏற்படுவதாக ஓய்வூதியத் திணைக்கள வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

சுமார் 12 ஆயிரம் ஓய்வூதி யர்களுக்கு சுமார் 4 ஆயி ரம் மில்லியன் ரூபா வரை இந்த வகையில் செலுத் தப்பட வேண்டியுள்ளதாக வும் தெரிய வருகின்றது.

மேலும் இந்தக் கொடுப்பனவைப் பெறுவதற் கான விண்ணப்பங்கள் மாதாந் தம் ஆயி ரத்திலிருந்து ஆயிரத்து 200 வரை கிடைக்கப் பெறுவதாகவும் இவற்றில் அநேகமா னவை படைத்தரப் பினரிடமிருந்து கிடைப்பதாகவும் அந்த வட்டாரங்கள் தெரி வித்துள்ளன.

அரச ஊழியர் ஒருவர் ஓய்வுபெறும் போது தமது மாதாந்த ஓய்வூதியத்தின் இரண்டு வருடாங்களுக்குச் சமமானதொரு தொகை யைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இது தொடர்பாக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் சுனில் ஹெட்டியாராய்ச்சி யுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது;

கடந்த மே மாதம் வரையில் இத்த கைய 12 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இவற்றுக்குரிய கொடுப்பனவை மேற் கொள் வதற்கு 4 ஆயிரம் மில்லி யன் ரூபா தேவைப்படுகின்றது. நிதி கிடைப்பத னைப் பொறுத்து இந்தக் கொடுப் பனவுகள் படிப்படி யாக வழங்கப்படும் என்று கூறி னார்.

அடுத்த ஆண்டுக் கான ஓய்வூதியத்தை வழங் குவதற்கு 114 பில்லியன் ரூபா தேவைப்படுவதாக வும் அவர் மேலும் தெரி வித்தார். (க)

### குரு பாதுகா பூசை

குரு பாதுகா பூசை வழி பாடும் பஜனை தியான நிகழ்வுகளும் பிரதி வியாழக் கிழமை தோறும் மாலை 5 மணிக்கு நல்லூர் கோயில் வீதி, இல.9, செட்டித் தெரு ஒழுங்கையில் அமைந்துள்ள நிலை யத்தில் நடை பெற்று வருகிறது. (ந-14)

## முக்கிய அறிவித்தல்

### காலநீடிப்பு

கொக்குத்தொடுவாய் முத்துமாரியம்மன் ஆலயத்தில் இன்று 2.11.2013 சனிக்கிழமை நடத்தப்பட இருந்த அதிஷ்ட லாபச்சீட்டு குறிக் கப்பட்ட இத்தினத்தில் தவிர்க்க முடியாத காரணத்தால் அதிஷ்டம் பார்க்க முடியவில்லை. இந்த அதிஷ்ட லாபச்சீட்டின் அதிஷ்டம் பார்க் கும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது. 2014ம் ஆண்டு தைப்பொங்கல் தினத் தன்று மாலை 6மணிக்கு அதிஷ்டம் பார்க்கப்படும் என்பதை தயவு டன் அறியத்தருகின்றோம்.

இ.சிவலிங்கம்
தலைவர்
முத்துமாரியம்மன் ஆலயம்
கொக்குத்தொடுவாய்.

## பெயர் மாற்றம்

பிரமந்தனாறு மயில்வாகனபுரம், விசுவமடுவைச் சேர்ந்த **செல்வராணி பாலசிங்கம்** ஆகிய நான் (02.11.2013) இன்றிலிருந்து எனது பெயரை **தங்கராணி பாலசிங்கம்** என பெயர் மாற்றிக் கொள்வதோடு இனிவரும் காலங்களில் சகல ஆவணங் களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என அறியத் தருகிறேன்

தங்கராணி பாலசிங்கம் (39701) (12.3,6)

## லொறி விற்பனைக்கு

LL-XXXX தொடரிலக்கமுடைய Ashok Leyland 10 Wheel (டபிள் கப்) லொறி உடன் விற்பனைக்குண்டு.
(50000கி.மீ மட்டும் ஓடியது) (39702) (12 3,6)
தொடர்பு: 077 772 7610

## Personal classes

அனுபவம் வாய்ந்த
M.A பட்டதாரி ஆசிரியரால்
ஆங்கில வகுப்புக்கள் நடத்தப்படும்.
தொடர்பு:- 0755409288

## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
**GUNAA BEST PC** 52,Hospital Road,Jaffna.


# தனது சேவையில் 5 ஆம் வருடத்தில் கால்தடம் பதிக்கும் நியூ மெடிக் கெயர் வைத்தியசாலை, சாவகச்சேரி

★ நியூ மெடிக்கெயர் மருத்துவமனை நகரப் பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ளது. எம்மிடம்
  * வெளிநோயாளர் பிரிவு
  * உள்நோயாளர் பிரிவு

New Medi Care Hospital

## 24 மணி நேர MBBS டாக்டர்கள்

★ முன்பதிவுகள் மூலம் வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளையும், சிகிச்சைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
★ உங்கள் இல்லம் நாடி வந்து வைத்தியசேவைகள் வழங்கப்படும்.
★ பிரதி வெள்ளிக்கிழமைகளில் மாலை சிரேஷ்ட சத்திரசிகிச்சை நிபுணர் Dr.S. ரவிராஜ். (V.S)
★ பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை, மாலை மகப்பேற்று பெண் நோயியல் நிபுணர் Dr.K.சுரேஷ்குமார் (V.O.G)
★ பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் பி.ப. 1.30 மணிக்கு குழந்தை வைத்திய நிபுணர் Dr. அருள்மொழி
★ புதன் தவிர்ந்த ஏனைய நாள்களில் பொது வைத்திய நிபுணர் Dr.J.சிறிதரன் (V.P)
★ பிரதி சனிக்கிழமைகளில் பிற்பகல் ஒரு மணிக்கு சகல விதமான ஸ்கானிங் வசதிகளும் Dr. நிமலன் (Radiologist)
★ பிரதி ஞாயிற்றுகிழமைகளில் காலை தோல் வைத்தியநிபுணர் Dr.சத்தியரேகா
★ பிரதி செவ்வாய்க்கிழமைகளில் மாலை 4 மணிக்கு மூட்டுவாத நோய் வைத்திய நிபுணர் Dr.R. தம்பிப்பிள்ளை
★ பிரதி மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணிக்கு பொது வைத்தியநிபுணர் Dr. கேதீஸ்வரன் (V.P)
★ பிரதி வெள்ளிக்கிழமைகளில் சிரேஷ்ட கண் சத்திரசிகிச்சை நிபுணர் பிற்பகல் வருகை தருவார்.
★ அதி நவீன கணினி மயப்படுத்தப்பட்ட சாதனங்கள் மூலம் இரத்த, சல பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.
★ நவீன கருவிகள் மூலம் ECG, X Ray வசதிகள்
★ சலரோகம், இருதயநோய், இரத்த அழுத்தம், மூட்டுநோய்களுக்கான கிளினிக் வசதிகள்
★ சகல விதமான பற்சிகிச்சைகளும் பல் பிடுங்குதல், கட்டுதல், அடைத்தல், கிளிப் போடுதல்
★ சிறிய சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்படும்
★ நோயாளர் தங்கி சிகிச்சை பெற்றுக்கொள்ளும் விடுதி வசதி.
★ கைதடி வடக்கிலும் எமது சிகிச்சைகள் நடைபெறுகின்றன. தினமும்
  காலை 8.00 - 12.00 மணி வரை
  மாலை 5.00 - 8.00 மணி வரை வைத்தியர் பார்வையிடுவார்
  இரத்த, சல பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.
  தொ.போ.: 021 3734 505
★ தென்மராட்சியில் மீண்டும் சிரேஷ்ட கண் சத்திரசிகிச்சை நிபுணரின் சேவை பிரதி வெள்ளிக்கிழமைகளில் பி.ப. 4.00 மணிக்கு நடைபெறும்.



இல. 32, கச்சாய் வீதி, சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மையினர் உரிமைகள் பறிப்பு

## அதன் விளைவே காளியம்மன் ஆலய உடைப்புச் சம்பவம் என்கிறார் கருணாகரம்

மட்டக்களப்பு,நவ.2
இலங்கையில் சிறுபான்மை சமூகங்களின் அனைத்து உரிமைகளும் பறிக்கப்பட்டமையை தம்புள்ள காளியம்மன் ஆலயம் உடைப்புச் சம்பவம் எடுத்துக் காட்டியுள்ளது. இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம்(ஜனா) தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
நாட்டில் சிறுபான்மை சமூகம் அடக்கி ஒடுக்கப்படும் நிலையில், அது அகிம்சைப் போராட்டம் நடத்தி ஆயுதப் போராட்டமாக மாறி பல ஆயிரக்கணக்கான இழப்புகளை நாங்கள் சந்தித்து இன்று மௌனித்துப் போயுள்ளோம்.
நாட்டில் இடம்பெற்ற இந்த சம் பவங்கள் அனைத்தும் பொய் யானவை. இங்கு சிறுபான்மை சமூகத்துக்கு எந்தவித பாதிப்பும் இல்லை என்று தொடர்ந்து வந்த அரசுகள் சர்வதேச சமூகத்திடம் கூறி வந்தன. ஆனால் சிறுபான்மை சமூகத்தை அடக்கி ஒடுக்கி அவர்களின் அனைத்து உரிமைகளையும் பறிக்கும் வகையிலான நடவடிக்கைகள் தொடர்ந்து இடம் பெற்றே வருகின்றன.
எமது பிரச்சினையை சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானித்து வரும் நிலையிலும், எம்மீது அடக்கு முறைகள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன.
தம்புள்ள நகர வரலாற்றை எடுத்து நோக்கினால் தமிழர்களின் தலை நகரமாக தம்புள்ளை இருந்துள்ளது. ஆனால் இன்று அங்கு தமிழர்கள் வசிப்பதற்கோ, தமது மதக் கடமைகளை நிறை வேற்றுவதற்கோ முடியாதநிலை உருவாகியுள்ளது.
அங்கு 32 தமிழ் குடும்பங்கள் உள்ள போதும் காளி கோயில் உடைக்கப்பட்டுள்ளது.
32 தமிழ் குடும்பங்களுக்கு கோவில் தேவையில்லை என்றால், மட்டக்களப்பில் சிங்களவர்கள் வசிக்காத நிலையில் பல விகாரைகள் அமைக்கப்படுவதுஎதற்கு?
மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பௌத்த தலங்களை தமிழ் மக்கள் காப்பாற்றிய நிலையில் தமிழர்கள் வழிபட்ட ஆலயம் தம்புள்ளயில் உடைக்கப்பட்டமை கீழ்த் தரமான விடயமாகவே பார்க்கப்பட வேண்டும். -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
07.05.1935

உதிர்வு
03.10.2013



திருமதி
**அன்னம்மா அண்ணாமலை**
திதி:02.11.2013

முப்பத்தொரு நாள்கள் ஆகிவிட்டதம்மா
ஆனால் எங்கள் ஆறாத்துயர் இன்னும் ஆறவில்லை.
ஆண்டவன் திருவடியை அடைந்து
ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

004917668026705
இணுவில் கிழக்கு.

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்
**கந்தன் ஞானமுத்து**



கடந்த 04.10.2013 வெள்ளிக்கிழமை அகாலமரணமடைந்த எமது குடும்பத் தலைவரின் செய்தியறிந்து நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
நாளை (03.11.2013) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி மேற்கு.
குடும்பத்தினர்.
(39695)(7.6.3)

# மரண அறிவித்தல்கள்

## பெருமையினார் கனகரத்தினம்(தவம்)



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், வன்னேரிக் குளத்தை வதிவிடமாகவும், தோணிக் கல்லை தற் காலிக வதிவிட மாகவும் கொண்ட பெருமையினார் கனகரத்தினம் (தவம்) (முன்னாள் ஐடியல் கிறீம் ஹவுஸ் கணக்காளர்)30.10.2013 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.11.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.115/4, ஆலடி வீதி,
தோணிக்கல், வவுனியா. (29835)(12.5-6)
தகவல்:
குடும்பத்தினர்.

## கனகரட்ணம் செல்வநாயகம்



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் செல்வநாயகம் நேற்று (01.11.2013) வெள்ளிக் கிழமை காலமானார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.
தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(39092)(6.4)

## தவறிவிட்டது

இராயப்பு விமலதாஸ் என்பவருடைய தே.அ.அட்டை. (570623192V) சாரதி அனுமதிப்பத்திரம் என்பன பேர்ஸ்சுடன் ஸ்ரான்லி வீதியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 840 1839

## மலிவு விற்பனை

வளர்ப்பு கலர் மீன்கள், மீன் தொட்டி, மீன் தொட்டி உபகரணங்கள், வளர்ப்பின குருவி வகைகள் (African lovebirds, Cock tail, Bangali, Gouldian finchees, Jawa, Stawbary Fincheesh, Love birds) பல இனப் புறாக்கள், வளர்ப்பின கோழிகள் (பன்டம், சிலிக்கி, வான்கோழி, கினிக் கோழி, தாரா) என்பவற்றை மிக மலிவான விலை யில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
✱ வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவு.
**மல்ரி பாம் சென்ரர்**
61, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். (C/13519)(7.6.3)
075 988 0000, 075 498 5400, 021 791 2997

## SALE

The 'ESSENTIAL GRAMMAR', a Reference Book for Teachers of English by Parvathi Nagasundaram, a former Senior English Lecturer and the Head of English Department at the University of Sri Jayawardenepura, a teacher trainer at Pasdunrata and Consultant for Several Universities.
Available at M.D. Gunasena, Jeya Book Centre, Sarasavi Poobalasingam and other leading Bookshops.
Further Contact: 077 353 1079

## மணமகள் தேவை

30 கிறிஸ்தவ CIMA (Lond) Fully Qualified 5.7 நற்பண்புள்ள கணக்காளர் மணமகனுக்கு அதே சமமான உயர் தகைமைகளையுடைய மணமகள் தேவை.
தொடர்பு: 077 554 4800

## புறொயிலர் கோழி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட 2-4 கிலோ நிறைகளிலுள்ள இறைச்சிக் கோழி குறைந்த விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். சாப்பாட்டுக் கடைகளுக்கும் உரித்து வழங்கப்படும். (31029) (4.6.1)
காந்தன் பாம், திப்பிலி வீதி, மானிப்பாய்.
தொடர்பு:077 2195483, 075 071 0400.


## மின்சார வேலி அமைக்க நடவடிக்கை



கொழும்பு, நவ.2
காட்டு யானைகளிடமிருந்து மக்களையும் சொத் துக்களையும் பாதுகாக்கும்நோக்கில், ஆபத்து நிலவக் கூடிய சகல மாவட்டங்களிலும் மின்சார வேலிகளை அமைப்பதற்கு வன ஜீவராசிகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.
இந்தத் திட்டத்துக்காக 34 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது.
பொதுமக்கள் யானைகளிடமிருந்து எவ்வாறு பாதுகாப்பை பேணுவது?. காட்டுயானைகளுக்கு இடையூறு இல்லாதவாறு எவ்வாறு செயற்படுவது? போன்ற விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் மேற் கொள்ளப்படவுள்ளன என்று திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-10)


# VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned post up to 21.11.2013.

**PHYSICAL EDUCATION UNIT**

Visiting Instructor for the following fields
Badminton – Men / Baseball/ Chess - Men/ Chess- Women/ Karate /Rowing/ Swimming - Men / Swimming - Women/ Taekwondo/ Tennis / Volleyball (Women)/ Wrestling

**Rate of payment per hour of Instruction - Rs.250/-.**

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with **a self –addressed stamped envelope** 23x10 c.m. in size.

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Heads of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only those applicants who possess the qualifications and experience for consideration will be called for an interview.

**Registrar**
2013.10.31


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச நல்லொழுக்க தின நிகழ்வு

வடமராட்சி, நவ .2

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் நடத்தும் சர்வ தேச நல்லொழுக்க தின நிகழ்வு எதிர்வரும் 5 ஆம் திகதி காலை 9 மணிக்கு நிறுவனத் தலைவர் பா.இர குநாதன் தலைமையில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாட சாலை மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி, பண்பாட்ட லுவல்கள், விளையாட்டுத் துறை இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், பருத்தித்துறை பிரதேச, செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் திருமதி தபேந் திரா ஜெயராஜா, கரவெட்டி பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் செ.சுபச் செல்வன் ஆகியோர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் நிறுவனம் நடத் திய போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்ற மாண வர்களின் பேச்சுக்களும் மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை மாண வர்களின் இசையும், கோலாட் டமும், பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரிஆகியவற்றின்மாண வர்களின் நாடகங்களும் இடம்பெறும். (வ-8-422)



யாழ்.மாவட்டத்துக்கு அண்மையில் வருகை தந்திருந்த இலங்கை மத்தி வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், வலி.வடக்கில் மேற்கொள்ளப்படும் திராட்சைத் தோட்டச் செய்கையைப் பார்வையிட்டதுடன், அல்லைப்பிட்டியிலுள்ள கடல் அட்டைப் பண்ணைக்கும் சென்றிருந்தார். இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் சண்.குறிஞ்சிதரனின் ஏற்பாட்டிலேயே குறித்த இடங்களை மத்திய வங்கியின் ஆளுநர் பார்வையிட்டார். (வ-5)

முதியோர் உதவுதொகை

## புதியவர்களை இணைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பம்

வலி.வடக்கு, நவ.2

சமூக சேவைகள் அமைச் சால் 70 வயதுக்கு மேற் பட்ட வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்களுக்கான ஆயிரம் ரூபா கொடுப்ப னவை வழங்குவதற்காக புதியவர்களை இணைத் துக் கொள்வதற்கான நட வடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு வருடங் களுக்கு முன்னர் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட பொது சன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்கள் மற் றும் சமுர்த்தி நிவாரணம் பெறுபவர்கள் இந்தக் கொடுப்பனவைப் பெற்று வருகின்றனர்.

எனினும் கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் தமது 70 வயதைப் பூர்த்தி செய்தவர் கள் இந்த திட்டத்தில் இணைத் துக் கொள்ளப்படாத நிலை காணப்பட்டது.

தற்போது புதிய திட்டத்தின் கீழ் கடந்த ஜூன் மாதம் தனது 70 வயதைப் பூர்த்தி செய்த வறுமைக்கோட் டுக்கு உட்பட்டவர்கள் அனை வரையும் இணைத்துக் கொள்ள சமூக சேவை கள் திணைக்களம் நடவடிக்கை களை மேற்கொண்டுள்ளது. தற்போது இத்தகையவர் களின் சரியான விவரங் களை பிரதேச செயலகங் களில் உள்ள கிராம அலுவ லர்கள் மூலம் பெறுவதில் சமூக சேவை அலுவலர்கள் ஈடுபட்டுள்ளனர். (வ-86)

## பளை வாசிக்கே மலேரியா நோய்

தென்மராட்சி, நவ. 2

சாவகச்சேரி வைத்திய சாலையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது மலேரியா நோயாளியாக இனங்காணப்பட்டவர் பளைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என சுகாதாரத் திணைக் களத்தினர் தெரிவித்தனர்.

குறித்த நபர் இந்தியாவில் தங்கியிருந்து சொந்த இடத் துக்கு மீளக்குடியமர்ந்த பின் னர் தொடர்ச் சியாக அவ ருக்கு காய்ச்சல் ஏற்பட்டது. எனவே சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் சுய பரிசோதனை நிலையத்தில் பரிசோதனை மேற்கொண்ட போது அவர்மலேரியாவால் பீடிக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. இது தொடர்பாக பளை சுகாதாரத் திணைக் களத்தி னருக்கு அறிவிக் கப்பட்டு உரிய நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டதாக வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை இந்தியா மற்றும் ஆபிரிக்கா நாடுகளி லிருந்து சொந்த இடங்க ளுக்கு திரும்வோர் உடன டி யாக தத்தமது பிரிவு சுகா தார வைத்திய அதிகாரி பணிமனைகளில் பரிசோத னைகளை மேற்கொண்டு சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளு மாறும் சுகாதார பகுதியினர் அறிவித்துள் ளனர். (வ-9)

நயினாமடு–சின்னடம்பன் வீதி

## புனரமைப்பு எப்போது? பொதுமக்கள் விசனம்



மாங்குளம், நவ .2

கரப்புக்குத்தி, நையினா மடு, சின்னடம்பன் வீதி அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிப்பதற்காக கற்களும், மண்ணும் பறிக்கப்பட்ட போதும், அதற்கான பணிகள் ஆரம் பிக்கப்படாததையிட்டு மக்கள் விசனம் தெரிவித் துள்ளனர்.

'புறநெகும' மீளெழுச்சித் திட்டத்தின் அடிப்படையில் இந்த வேலைத் திட்டம் ஒதுக்கப்பட்டுள்ளது. நெடுங் கேணி பிரதேச சபைக்கும் ஒப்பந்தக்காரருக்கும், ஒப்பந் தம் தொடர்பான பிரச்சினை ஏற்பட்டதால் குறித்த வீதி யின் புனரமைப்புப் பணி இழு பறி நிலையிலுள்ளது. இது தொடர்பாக மத்தியஸ் தர் சபையில் முறையிட ஏற் பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த வீதியைப் புனர மைத்துத் தருமாறு பல தடவை மக்களால் கோரப் பட்டதனையடுத்து குறித்த பணிகள் ஆரம்பிக்கப் படவிருந்தது. எனினும் பணி கள் தொடரப்படாதமை குறித்து இட்டு அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது மழை காலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் கனகராயன் குளம் ஏ-9 வீதியிலிருந்து அந்தப் பகுதி யூடான வீதியால் பயணம் செய்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக் குகின்றனர். எனவே உடன டியாக வீதித் திருத்தப் பணி களை ஆரம்பிக்குமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் மக்கள் வேண்டுகோள் விடுத் துள்ளனர்.

(வ-422)

## நாடகக் கலைஞருக்கு கௌரவிப்பு நிகழ்வு

அல்வாயூர் கவிஞர் நாடக மன்றத்தினர் நாடகக் கலை ஞர் கலாபூசணம் மா.அனந்த ராஜனின் கலைச்சேவை யைக் கௌரவிக்கும் முக மாக பாராட்டு விழாவை யும் 'அனந்தம்' என்னும் நூல் வெளியீட்டையும் நடத்த வுள்ளனர். நாளை ஞாயிற் றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு வதிரி தேவரை யாளி இந்துக் கல்லூரி மண் டபத்தில் நிகழ்வு இடம்பெறும். ஓய்வுநிலை அதிபர் செ.சதா னந்தம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக பேராசிரியர் மா.நடராஜ சுந்தரம் கலந்து கொள்வார். வாழ்த்துரையை இ.து.குல சிங்கம், மா.இரகுபரன், சி.பசுபதி, வடமாகாண சபை உறுப்பினர்களான அ.பரஞ் சோதி, வே.சிவயோகன் ஆகியோரும், பாராட்டுரையை கொற்றை பி.கிருஸ்ணானந் தன், கே.ஆர்.டேவிட், கலா நிதி செ.திருநாவுக்கரசு, மா. கிருஸ்ணானந்தன் ஆகியோ ரும் நிகழ்த்துவர். (வ-9)



நல்லூர் பிரதேச செயலகத்தால் கொக்குவில் இந்திரா விளையாட்டுக்கழகத்துக்கு விளை யாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன. (வ-7)

## எழுத்தாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 2

நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவில் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் 'ஒரு புத்தகமும் ஒரு சமுதாய மும்' என்ற தொனிப் பொருளில் இளம் எழுத்தாளரைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 26ஆம் திகதி கோண் டாவில் பொது நூலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இளம் எழுத்தாளரான லோ.விஜேந் திரன் எழுதிய 'கதை கூறும் கதைகள்' எனும் நூல் ஆய்வு செய்யப்பட்டதுடன் எழுத்தாளரும் கௌரவிக் கப்பட்டார்.

நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.வசந்த குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளரான எஸ்.லலீசன், சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் சுரேஸ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-14)



ஆரம்ப சுகாதார நிலையம்

## நுணாவிலில் நிரந்தரமாக அமைக்கப்பட வேண்டும்

தென்மராட்சி, நவ .2

நுணாவில் பிரதேசத்துக் கென நிரந்தர ஆரம்ப சுகா தார நிலையம் இல் லாத தால் அந்தப் பகுதி யிலுள்ள குழந்தைகள், கர்ப்பிணி கள், பாலூட்டும் தாய்மார் சிர மங்களை எதிர்நோக்குகின் றனர். அந்தப் பகுதி மக்களுக் கென நுணாவில் பொதுநூ லக சைக்கிள் பாதுகாப்பு கொட் டகைக்குள் தற்காலி கமாக தாய் சேய் சிகிச்சைப் பிரிவு இயங்கி வருகிறது. போதிய இடவசதி இல்லாத தால் அங்கு செல்லும் பெரும ளவு மக்கள் வெயில், மழை யில் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

தற்காலிக கொட்டகைக்குள் இருப்பிட வசதிகள் இல்லாத தால் அங்கு செல்வோர் சிரமப்பட வேண்டியுள்ளது. நுணாவில் பிரதேசத்தில் நிரந்தரமாக ஆரம்ப சுகா தார நிலையம் அமைக்கு மாறு உரிய தரப்பினரிடம் பல தடவைகள் கோரிய போதிலும் அதனை நிறை வேற்ற எவரும் முன்வர வில்லையெனவும் தெரிவிக் கப்பட்டது.

(வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்ட நீர் நிலைகளில் நன்னீர் மீன் வளர்ப்பு



கொழும்பு.நவ.2

தோட்டப் பகுதியில் இனங் காணப்பட்டுள்ள நீர் நிலைகளில் நன்னீர் மீன்களை வளர்ப்பதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள் ளது. வாழ்வெழுச்சி (திவிநெகும) செயற்றிட்டத்தின் கீழ் இது நடைமுறைப்படுத்தப்படும். தோட்டங்களைச் சூழவுள்ள பிரதேச மக்களின் மீன் உணவுப் போஷாக்கை மேம்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கம் என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச-22)



நுரைச்சோலை அனல்மின் நிலைய இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகளை மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி அதிகாரிகளுடன் நேரில் சென்று பார்வையிட்டார்.

# பதவி உயர்வுகள் ரத்து

## தாதிய உத்தியோகத்தர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.2

அரச சேவைகள் ஆணைக் குழுவால் வழங்கப்பட்ட தாதிய கல்விச் சேவையின் விசேட தரத்தின் 42 முகாமைத்துவப் பதவி உயர்வுகளை சுகாதார அமைச்சின் துணைச் செயலர் ரத்துச் செய்துள்ளார்.

இவ்வாறு அரச தாதிய உத்தியோகத் தர்கள் சங்கம் குற் றம் சுமத்தியுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி அரச சேவைகள் ஆணைக்குழுவால் வழங்கப்பட்டிருந்த பதவி உயர்வுகளை சுகாதார அமைச்சின் துணைச் செயலர் ரத்துச் செய்துள்ளார் என்று சங்கத்தின் செயலர் சமன் ரத்னப்பிரிய தெரி வித்துள்ளார்.

அரச சேவைகள் ஆணைக் குழு அனுமதித்துள்ள அந்தப் பதவி உயர்வுகளை அந்த ஆணைக் குழுவினால் மாத்தி ரமே ரத்துச் செய்ய முடியும் என்று அவர் கூறினார்.

ஒழுங்கு முறையொன்றின் கீழ் வழங்கப்பட்ட இந்தப் பதவி உயர்வுகளை ரத்துச் செய்வற்கு சுகாதாரச் செயலர் நடவடிக்கை மேற் கொண்டமை தாதியக் கல்லூரிகளின் நிர்வாகம் மற்றும் முகா மைத்துவம் சரிந்து போகும் நிலையை ஏற்படுத்தும் என்று அவர் குறிப்பிட்டார். (ச-22)

# போக்குவரத்துச் சபைக்கு புதிதாக 2200 பஸ்கள்

## அடுத்த ஆண்டில் கொள்வனவு

கொழும்பு.நவ.2

அடுத்த ஆண்டில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 11,008 மில்லியன் ரூபா பெறு மதியான 2200 பஸ்களைக் கொள்வனவு செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அசோக் லேலண்ட் நிறுவனத்திடமிருந்து கடன் அடிப்படையில் இந்த பஸ்கள் கொள்வனவு செய்யப் படவுள்ளன.

கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்படும் பஸ்களுக்கான பணத் தொகை அடுத்த ஜனவரி மாதத்திலிருந்து ஐந்தாண்டுகளுள் மூன்று மாதத் தவணைச் செலுத்தல்கள் என்ற அடிப் படையின் கீழ் கட்டிமுடிக் கப்பட வேண்டும்.



இந்தக் கொள்வனவில் திறந்து மூடும் வசதி கொண்ட இரு கதவுகளுடனான 42 ஆசனங்கள் கொண்ட 800 பஸ்களும், அதே விதமான இரு கதவுகளைக் கொண்டுள்ள 54 ஆசனங்களுடனான 1400 அரைச் சொகுசு பஸ்களும் கொள்வனவு செய்யப்படவுள்ளன. முதற் கட்டமாக போக்குவரத்து அமைச்சினால் பஸ் கொள் வனவுக்காக இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு வருடாந்தம் ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடுகள் மூலம் 1100 பஸ்களுக்கு தவணைச் செலுத்தல்களைச் செலுத்து வதற்கு போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது.

எஞ்சியுள்ள 1100 பஸ்களுக்கு இலங்கை போக்குவரத்துச் சபைக்குக் கிடைக்கும் வரு மானத்திலிருந்து தவணைக் கட்டணமாக செலுத்தல்களைச் செலுத்து வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை போக்குவரத்துக்குத் தகுதி யற்ற காலம் கடந்துள்ள ஆயிரம் பஸ்களை ஏலம் விடுவதற்கும், அதன் மூலம் பெறப்படும் நிதிகள் நிலுவையில் உள்ள அரச செலுத்தல்களை செலுத்தி முடிப்பதற்குப் பயன்படுத்திக் கொள்ளப் படவுள்ளன.

இதற்கான அனுமதியைப் பெறுவதற்கு போக்குவரத்து அமைச்சால் அமைச்சர வைப் பத்திரம் அமைச்சர வைக்கு முன்வைக் கப்பட்டுள்ளது.

(ச-22)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகேஸ்வரி தர்மலிங்கம்



அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி தர்மலிங்கம் கடந்த (30.10.2013) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சின்னத்தம்பி தர்மலிங்கத்தின் (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் சுபாஸ்கரன் (ராயு - சுவிஸ்), சுகிர்தா (இலங்கை), கேதீஸ்வரன் (ஈசன் - சுவிஸ்), விஜிகரன் (விஜி -சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் பூபதி, திலகவதி, லீலாவதி, நகுலாவதி, குகானந்தன் (கனடா), பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் குகனேசன் (பொறியியலாளர், பணிப்பாளர், பாடசாலை வேலைப் பகுதி, வடக்குமாகாண கல்வி அமைச்சு), கேமேஸ்வரி (சுவிஸ்), சசிவதனி (சுவிஸ்), ரஜிதா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி (ஜேர்மனி), தம்பித்துரை மற்றும் இரத்தினம், Dr. புவிராசன், சுந்தரலிங்கம், மகாலட்சுமி, ரஞ்சி (கனடா), கெங்காதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜெனனி, சதீனா, விதுஷி, மிதுலா, சகானா, சஜிதன், கீர்த்திகா, தர்ஷனா, சஜிந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.11.2013) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி வல்லை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.தர்மலிங்கம் (கணவர்),
பிள்ளைகள், மருமக்கள்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

Farm, Business தேவைக்கேற்ற
காணி விற்பனைக்கு

பலாலி வீதியிலிருந்து 25 மீற்றர் தூரத்தில் 12 அடி பாதையுடன் கூடிய 5 பரப்புக்காணி கோண்டாவில் சந்திக்கு அண்மையில் சேவாலங்கா அலுவலகத்துக்கு அண்மையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0777037058

## மரண அறிவித்தல்

### திருமதி நிலாமணி தம்பி ஐயா



நல்லூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நிலாமணி தம்பி ஐயா நேற்று (2013.11.01) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து-சிவகாமி தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பி ஐயாவின் பாசமிகு மனைவியும் மதனராஜா(கனடா), திலகராஜா, சிவமலர், தர்மதாஸ்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜீவநாயகி, இரட்ணேஸ்வரி, சௌந்தரராஜா, இராஜபிரதீபா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், திலக்ஷன், சிவதர்சன், மக்ஸ், அருண், குருஷேன், டிறேஷா, பூர்ணிகா, அபிஷேக், பொலின் ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2013.11.02) சனிக்கிழமை மு.ப 10மணியளவில் இல 9/1, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூரில் அமைந்துள்ள அவருடைய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்குச் எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.9/1, புவனேஸ்வரி அம்பாள் வீதி,
நல்லூர்.

தகவல்:குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வலி.வடக்கில்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நேற்று (நேற்றுமுன்தினம்) நான் தொலை பேசியூடாக பேச்சு நடத்தினேன். உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ள தமிழ் மக்களின் பெரும்பாலான காணிகளையும் வீடுகளையும் இராணுவத்தினர் ஆக்கிரமிக்க தொடங்கியுள்ளனர். இதனால் அந்த இடங்களுக்கு சொந்தமான மக்கள் தொடர்ந்தும் அகதி முகாம்களில் வாழவேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது.

இராணுவத்தின் இந்தச் செயலுக்கு எதிராக மக்கள் உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கலும் செய்துள்ளனர். இந்நிலையில் இராணுவம் அங்கு வீடுகளை இடித்தழிக்கின்றது.

இந்தச் செயலை ஒருபோதும் ஏற்கமுடியாது. இதைத் தடுத்து நிறுத்தி உரிய தீர்வை காண வேண்டும் என இந்த பேச்சின்போது ஜனாதிபதியிடம் நான் கோரிக்கை விடுத்தேன்.

இந்த உரையாடலையடுத்து, சில நிமிடங்களுக்குப் பின்னர் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தொலைபேசி ஊடாக என்னைத் தொடர்புகொண்டார்.

"வீடுகள் இடிக்கப்படுவதாக நீங்கள் கூறிய விடயம் குறித்து ஜனாதிபதி யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியுடன் கலந்துரையாடினார். குறித்த நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறும் பணிப்புரை விடுத்துள்ளார். இதன் பின்னரும் வீடுகள் இடிக்கப்பட்டால் ஜனாதிபதியிடம் நீங்கள் முறையிடலாம்" என்று லலித் வீரதுங்க என்னிடம் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதியை நான் நேரில் சந்தித்து பல விடயங்கள் சம்பந்தமாக பேச்சு நடத்த வேண்டியுள்ளது. எனினும், வியாழனன்று நடைபெற்ற தொலைபேசி உரையாடலின்போது அதற்கான நேரத்தை நான் கோரவில்லை" என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் தெரிவித்தார்.

### நினைப்பதை

மாறும் வடக்கு முதல்வர் விடுத்த கோரிக்கைகளை அரசு நிராகரித்திருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய, நேற்றுமுன்தினம் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கேள்வியெழுப்பியபோது

"எங்களுடைய நாட்டில் சமாதானத்தை நிலை நிறுத்தப் போகின்றோமா இல்லையா என்பது தான் கேள்வி. நான் ஒன்றைச் சொல்ல, அதற்கு பதில் சொல்ல நான் மீண்டும் ஒன்று சொல்வேன். அவ்வாறு விவாதம் நடத்தத் தேவையில்லை. விவாதத்தில் எனக்கு நல்ல பரிச்சயமுண்டு.

நாங்கள் இந்த நாட்டிலே ஒத்துழைப்பையும் ஒரு மித்த தன்மையையும் கொண்டு வரப் பாடுபடுகின்றோம். இந்தப் போருக்குப் பின்னர் எங்கள் தமிழ் மக்கள் தான் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள்.

எங்களுக்கு, எங்களுடைய வாழ்க்கையை நடத்துவதில் உள்ள பிரச்சினைகள் தொடர்பில் எடுத்துக் கூறுவது கடமை. அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது ஜனாதிபதியின் பொறுப்பு. ஜனாதிபதி தான் நினைத் தது தான் சரி. நீங்கள் எதைப் பற்றி யோசித்தாலும், எதைப் பற்றிச் சிந்தித்தாலும் எவ்வளவு தான் கஷ்டப்பட்டாலும் நான் அதற்குப் பொறுப்பல்ல. நான் நினைத்ததையே செய்வேன் என்றால் என்னால் பதில் சொல்ல முடியாது.

ஆனால், எங்களுடைய பிரச்சனைகளை எடுத்தச் சொல்லும் போது பக்கச்சார்பான பிரச்சினை என்று எடுத்துக் கொள்வது பிழையானது. இராணுவம் இருப்பதால் நாங்கள் எங்கள் நாளாந்த வேலைகளை செய்ய்முடிவதில்லை. படிப்படியாகவாவது இராணுத்தை அகற்றுங்கள் என்று கேட்கின்றோம். இராணுவத்தில் இருந்து ஆணையிடும் ஒருவரால் மக்கள் பிரச்சினைகளை புரிந்துகொள்ள முடியாது. எனவே ஆளுநரை மாற்ற வேண்டும். இதனை வேறு விதமாக வியாக்கியானம் செய்தால் அதனால் பாதிப்படைவது நாங்களே - என்றார். (த-5)

### ஜனாதிபதியின்

அடையாளப்படுத்தி நிற்கிறது. இலங்கை வாழ் இந்துக்கள், வழிபாடுகள் - ஆன்மிக வணக்கங்கள் மூலம் இந்த விசேட பண்டிகையைக் கொண்டாடுவதில் உலகெங்கிலுமுள்ள இந்து மக்களுடன் இணைந்து கொள்கின்றனர். அறியாமையிலிருந்து எழும் தீயவற்றை வெற்றி கொள்வதற்கு அறிவுடமையையும், புரிந்துணர்வையும் அடைந்து கொண்டமைக்காக தெய்வங்களுக்குத் தங்களது நன்றியை வெளிப்படுத்தும் முகமாக கோயில்களில் விளக்கேற்றி வீடுகளை விளக்குகளால் அலங்கரிக்கின்றனர். இது உலகின் சடப்பெறுமானங்களால் நிறைந்த மனித நடைமுறைகளைக் கடந்த இந்து சமயத்தின் உயர்ந்த ஆன்மிகப் பெறுமானங்களின் ஒரு கொண்டாட்டமாகும்.

அன்புணர்வும் அர்ப்பணமும் நிறைந்த இந்தத் தீபாவளித் திருநாள், இந்து சமயத்தின் சகல ஆன்மிகப்பெறுமானங்களாலும் ஒதுக்கப்படும் வன்முறை மற்றும் பகைமை கொண்ட மூன்று தசாப்தகால நீண்ட போராட்டத்தின் பின்னரான புதிய நல்லிணக்க உணர்வில் வேற்றுமைகளைக் களைந்து, சமூகங்களுக்கு மத்தியில் புரிந்துணர்வை வளர்த்து, சுபீட்சத்தை அதிகரிக்கும் இந்துக்களுக்கான ஒரு முக்கிய நிகழ்வாகும்.

இத்தீபத்திருநாள் இந்துசமய போதனைகளைப் பின்பற்றும் எல்லோர் மத்தியிலும் மகிழ்ச்சியையும் - சமாதானத்தையும் - புரிந்துணர்வையும் கொண்டுவர வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

இலங்கை வாழ் இந்துக்களுக்கு எனது மகிழ்ச்சியும் அமைதியும் நிறைந்த தீபாவளி வாழ்த்துக்கள்.

### இசைப்பிரியா

கூடாதென வலியுறுத்தப்பட்டுவரும் நேரத்தில் பிரிட்டனில் 'சனல் 4' தொலைக்காட்சி இந்தப் புதிய திடுக்கிடும் போர்க்குற்ற ஆதாரத்தை நேற்றுமுன்தினம் வெளியிட்டு அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது.

போரின் இறுதிக் கட்டத்தில் இசைப்பிரியா கொல்லப்பட்டு நிர்வாணமாகக் கிடந்த காட்சிகள் ஏற்கனவே 'சனல் - 4' தொலைக்காட்சி வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில், இசைப்பிரியா இலங்கை இராணுவத்தினரால் உயிரோடு பிடிக்கப்பட்டுக் கொண்டு செல்லப்படும் காணொலி ஆதாரத்தை 'சனல் - 4' நேற்றுமுன்தினம் வெளியிட்டது.

நந்திக் கடற்கரையின் களப்பில், மேலாடையின்றி நீருக்குள் அமர்ந்திருக்கும் இசைப்பிரியாவை, இராணுவச் சிப்பாய் ஒருவர் சென்று கையைப் பிடித்து இழுப்பதும், அதன் பின்னர் இரண்டு இராணுவச் சிப்பாய்கள் அவருக்கு அருகில் சென்று வெள்ளைத் துணி ஒன்றை மேலே போர்த்திவலுக் கட்டாயமாக கைகளில் பிடித்து இழுத்துச் செல்வதும் இந்தக் காணொலியில் பதிவாகியுள்ளது.

இராணுவத்தினர் இசைப்பிரியாவைப் பிடித்துவரும் போது, 'இவர் பிரபாகரனின் மகள்' என்று கூறுவதும் அதற்கு இசைப்பிரியா கதறி அழுதவாறு, 'ஐயோ அது நானில்லை' என்று கூறுவதும் அந்தக் காட்சியில் பதிவாகியுள்ளது.

ஏற்கனவே இசைப்பிரியா தொடர்பில் வெளிவந்த ஆதாரங்களில் அவர் வெள்ளைத் துணி போர்த்தப்பட்டவாறு கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டிருந்த காட்சிகள் உள்ளடங்கியிருந்தன. அத்துடன் அவரது உடல் நிர்வாணமாகக் கிடக்கும் காட்சிகளும் இடம்பெற்றிருந்தன.

தற்போது வெளியிடப்பட்டுள்ள புதிய போர்க்குற்ற ஆதாரத்தின் பிரகாரம் இசைப்பிரியா இராணுவத்தினரால் உயிருடன் பிடிக்கப்பட்டு அதன் பின்னரே படுகொலை செய்யப்பட்டுள்ளமை உறுதியாகியுள்ளது என்று 'சனல் - 4' தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

இதேவேளை, பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் இராணுவ பங்கரில் பிஸ்கட் உண்டு கொண்டிருந்த காட்சியையும் பின்னர் அவர் சுட்டுக்கொல்லப்பட்ட நிலையில் காணப்பட்ட காட்சியையும் 'சனல் - 4' வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

### இராணுவம்

"சனல்-4 தொலைக்காட்சி நிறுவனம் தக்க தருணம் பார்த்துக் கொண்டிருந்து இலங்கைக்கு எதிராக போலி வீடியோக்கள் மற்றும் புகைப்படங்களை வெளியிட்டு நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சிக்கின்றது " என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய நேற்று 'உதயனி'டம் தெரிவித்தார்.

அத்துடன், அடுத்த சனல்- 4 தொலைக்காட்சி நிறுவனத்தில் அடுத்த வீடியோ எப்போது வெளியாகும் என்ற திகதியையும் அவர் குறிப்பிட்டார்.

போரின் இறுதிக்கட்டத்தில் படையினரால் பிடிக்கப்பட்டு கொல்லப்பட்டதாக கூறப்படும் தமிழீழத் தேசிய தொலைக் காட்சியின் செய்தி வாசிப்பாளரான இசைப்பிரியா தொடர்பில் சனல்- 4 தொலைக்காட்சி நிறுவனம் வெளியிட்டுள்ள புதிய போர்க்குற்ற ஆதார வீடியோ தொடர்பில் வினவியபோதே இராணுவப் பேச்சாளர் மேற்கண்டவாறு கூறினார்.

" இன்று நேற்றல்ல கடந்த நான்கு வருடங்களாகவே இலங்கைக்கு சர்வதேச அரங்கில் சேறுபூசும் நடவடிக்கையை சனல்-4 முன்னெடுத்து வருகின்றது. அவர்களிடம் உரிய ஆதாரங்கள் - சாட்சியங்கள் இருந்தால் அவற்றை அதிகாரிகளிடம் ஒப்படைக் கலாம்தானே. அல்லது ஒரேயடியாக ஒளிபரப்ப வேண்டியதுதானே? ஏன் கட்டங்கட்டமாக வீடியோக்களை வெளியிடுகின்றனர். இதிலிருந்தே அவர்களின் நோக்கம் என்னவென்பது புலனாகின்றது.

இவ்வாறு போலியான விடயங்களை வெளியிடுவதனால் சனல்- 4 என்றவுடன் போலி ஆவணங்களை வெளியிடும் ஊடகம் என்றுதான் மக்கள் தற்போது கருதுகின்றனர். இதன் பின்னணியில் புலம்பெயர் பிரிவினை வாதக் குழுக்களும் இருக்கின்றன. நான் அனைத்து புலம்பெயர்த் தமிழர் களையும் குற்றஞ் சாட்டவரவில்லை. அவர்களுள் நாட்டை விரும்புபவர்களும் இருக்கின்றனர்.

சர்வதேச அரங்கில் இலங்கைக்கு சேறு பூசும் நோக்கிலேயே முக்கிய தருணம் பார்த்து இவ்வாறான செயற்பாடுகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. அடுத்த வீடியோ வெளியாகும் திகதியைக் கூட என்னால் சொல்ல முடியும். அதாவது அடுத்த மார்ச்சில் சனல் 4 மற்றுமொரு போலி விடியோவை வெளியிடும். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. நீங்கள் கூறும் அந்த வீடியோவை நான் இன்னும் பார்வையிடவில்லை. பார்த்தாலும் பார்க்காவிட்டாலும் இது தான் என்னுடைய கருத்து. இசைப் பிரியா இராணுவ பயிற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது" என்றும் இராணுவப் பேச்சாளர் கூறினார்.

### வடக்கு மாகாண

பிய ஒன்றியத் தூதுவர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் வடக்கு மாகாண முதலமைச்சர் ஆகியோர் ஊடகவிய லாளர்களைச் சந்தித்துப் பேசினர்.

ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் டேவிட் டெலி தெரிவிக்கையில், இலங்கையுடன் நாம் சிறந்த நட்புணர்வை பேணுகின்றோம். இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பங்காளனாக ஐரோப்பிய ஒன்றியமே விளங்குகின்றது. ஏறக்குறைய 700 மில்லியன் ரூபா பெறுமதியான உதவிகளை இலங்கைக்கு வழங்கவுள்ளோம். 10 ஆண்டு காலத் திட்டத்தின் அடிப்படையில் 2025ஆம் ஆண்டு வரை இவை தொடரும்.

வாழ்வாதார உதவிகள் மற்றும் வீட்டுத்திட்டங்களை வடக்கு - கிழக்குப் பகுதிகளில் ஐரோப்பிய ஒன்றியம் முன்னெடுக்கின்றது. 20 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டத்தில் 16 ஆயிரம் வீடுகள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளன.

நீண்ட காலத்துக்குப் பின்னர் நடத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சராகத் தேர்வானமைக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்தேன். இங்குள்ள நிலைமைகள் தொடர்பில் அவர் சுருக்கமாக விளக்கினார். இலங்கைக்கான உதவிகளை நாம் நடுநிலைமையாகவே வழங்க விரும்புகின்றோம் - என்றார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவிக்கையில்:

தற்போது வழங்கியுள்ள உதவிகளுக்கு நன்றி தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் உதவிகளை வழங்க வேண்டுமெனவும் அவரிடம் கேட்டுக்கொண்டுள்ளேன். இந்த நாட்டில் சமாதானம் நிலைபெற ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒத்துழைப்பு அவசியம்.

இலங்கை அரசுடன் இணைந்து செயற்படும் அவர்கள், எங்கள் நிலைமைகளையும் தெரிந்து எடுத்துச் சொல்வதன் ஊடாக மேலும் சிறப்பாக பணியாற்ற முடியும் என்றும் தெரிவித்தேன். ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு வருகை தருமாறு அவர் என்னிடம் அழைப்பு விடுத்தார். எதிர்காலத்தில் நாம் மேலும் நெருக்கமாக அவர்களுடன் இணைந்து பணியாற்ற முடியும் - என்றார். (த-5)

### புத்தூர் யுவதி

நிலவுகின்றது.

வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த அவரின் கைத் தொலைபேசிக்கு அழைப்பு ஒன்று வந்துள்ளது இதற்குப் பதிலளிக்க வெளியே சென்ற அவர் பின்னர் காணாமற்போயிருந்தார். மறுநாள் தோட்டக் கிணற்றிலிருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டார் - என்றார்.

அவரது கைத்தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்தியவர் யார் என்பதை பொலிஸார் தெரிவிக்கவில்லை.

அவர் கிணற்றில் விழுந்துள்ளதால் உயிரிழந்துள்ளதாகவும் வன்புணர்வு செய்யப்பட்டிருப்பது பற்றி அறிக்கை எதுவும் தமக்கு தரப்படவில்லை என்றும் பொலிஸ் அத்தியட்சகர் மேலும் கூறினார். (த-4-86)

### வடக்கு

டுள்ளார். இம் மாதம் கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் பங்குபற்றுவதற்காக அவர் இலங்கைக்கு வந்தால் வடக்கு மாகாணத்துக்கும் வருவார் என்று 'த எக்கணமிக் ரைம்ஸ்' வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

### வடக்கு மக்கள்

ளார்.

அவர் தனது செய்தியில்,

தீபாவளி, தீபத் திருநாள். இருள் அகற்றி ஒளியைப் பரப்பும் ஒரு நன்நாள். வடக்கு மாகாணம் ஒளியை நோக்கிப் பயணிக்கும் இந்த நேரத்தில், தீபாவளி வந்திருப்பது சாலச் சிறந்தது.

எமது நாட்டுக்கு ஒளியும், சமாதானமும், அமைதியும் வந்தடைய இந்தத் தீபத் திருநாளில் பிரார்த்திப்போமாக. எமது மக்களின் வாழ்வில் ஒளி பிரகாசிக்க இறைவன் அருள் புரிவாராக என்று தெரிவித்துள்ளார். (த- 5)

### பெண் கொலைச்

வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெவித்ததாவது:

யாழ்.நாச்சிமார் கோயில் தேர் முட்டியில் பிணமாகக் கிடந்த அரியாலை நெடுங்குளம் வீதியைச் சேர்ந்த மார்க்கண்டு யோகராணி (வயது 45) என்பவர் கடந்த 17ஆம் திகதி உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

அவர் வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்டார் என்பது உடற்கூற்று பரிசோதனையில் தெரியவந்தது.

இந் நிலையிலேயே குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டு அவரது இரத்த மாதிரி மரபணு பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அவர் விளக்கமறியலிலும் வைக்கப்பட்டுள்ளார் - என்றார். (த-4)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரளிக் கிண்ண ஆரம்ப வைபவத்தில் இங்கிலாந்து வீரர் இயன் பொத்தம்

## கிளிநொச்சியில் நேற்று கோலாகல நிகழ்வு



நடைபவனியில் இயன்பொத்தம், மஹேல மற்றும் பிரபலங்கள்



நாணயச் சுழற்சியில்...

பொத்தமுக்கு வரவேற்பு..



வெற்றிக்கிண்ணம் அறிமுகம்








அணி வகுப்பில்...



வீரர்கள் அறிமுகம்

யாழ்ப்பாணம், நவ.2

முரளிக் கிண்ணத்துக்கான 20/20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வு வடக்கின் அனைத்து மாவட்டங்களிலும் நேற்றுக் காலை நடைபெற்றது.

கிளிநொச்சியில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் விசேட விருந்தினர்களாக இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் இயன் பொத்தம், இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜெயவர்த்தன ஆகியோர் கலந்துகொண்டனர். இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் இயன் பொத்தமுக்கு நேற்றுக் கிளிநொச்சியில் கோலாகல வரவேற்பு அளிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் நடந்த ஆரம்ப நிகழ்வில் போட்டியை நாணயத்தை சுழற்றி ஆரம்பித்து வைத்தார் இயன் பொத்தம்.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் கிளிநொச்சி ஒன்றிணைந்த கிரிக்கெட் அணியும் 'சீனிகம' கிரிக்கெட் அணியும் மோதிக் கொண்டன.

முன்னதாக கிளிநொச்சியில் இருந்து மாங்குளம் மகா வித்தியாலயம் வரை இடம்பெற்ற நடைபவனியில் இயன்பொத்தம், மஹேல ஜெயவர்த்தன ஆகியோர் கலந்து கொண்டனர். (கு-23-426)

## இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், நவ.2

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்கான, மன்னார் உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் மன்னார் பனங்கட்டிக்கொட்டு சென். ஜோசப் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மன்னார் சின்னக்கடை கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இறுதிப் போட்டி நிகழ்வுகளுக்கு விருந்தினர்களாக வடமாகாணசபை கல்வி, விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராசா, வடமாகாண சபை மீன்பிடி, போக்குவரத்து கிராமிய அபிவிருத்தி வணிகத் துறை அமைச்சர் பி.டெனீஸ்வரன், மன்னார் நகரபிதா எஸ்.ஞானப்பிரகாசம், இலங்கை உதை பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ரஞ்சித் றொட் றிக்கோ, வடமாகாணசபை உறுப்பினர்களான இ.ஆனல்ட், மருத்துவர் குணசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (கு-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம் நவ.2

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்ப்பாணச் சமர் உதைபந்தாட்டப் போட்டித் தொடர் இன்று சனிக்கிழமை உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**பிற்பகல் 3.45 மணி**

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் எதிர் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம்.

**மாலை 4.45 மணி**

ஊரெழுறோயல் விளையாட்டுக்கழகம் எதிர் இளவாலையாங் ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம். (கு-23)

## நட்சத்திர அணிகளின் உதைபந்தாட்டம் இன்று

மானிப்பாய் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிகள் மோதும் நட்சத்திரங்களின் உதைபந்தாட்டப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றிபெறும் அணிகளுக்கு நட்சத்திர அணிகளின் உதைபந்தாட்ட வெற்றிக்கிண்ணமும், இரண்டாம் மூன்றாம் இடங்களுக்கு வெற்றிக் கேடயங்களும் வழங்கப்படவுள்ளன. (கு-23)

## வென்றது யங்ஹென்றிஸ்

யாழ்ப்பாணம், நவ.2

மாலி சந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையே நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங் ஹென்றிஸ் அணி வெற்றிபெற்றுள்ளது. இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து பொலிகண்டிவின் மீன் அணி மோதியது. ஆட்டம் தொடங்கியதில் இருந்து ஆதிக்கம் செலுத்திய யங்கென்றிஸ் அணியின் வீரர் ஞானரூபன் 13 ஆவது நிமிடத்தில் தனக்குக் கிடைத்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக் கோலாக்கினார். இதனால் இடைவேளைக்கு முன்னர் 1:0 என்ற கோல்கணக்கில் அது முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னரும் ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய யங்ஹென்றிஸ் அணியின் வீரர் ஞானரூபன் 12 ஆவது நிமிடத்தில் மேலும் ஒரு கோலைப் போட இறுதியில் 2:0 என்ற கோல் கணக்கில் இளவாலை யங்ஹென்றிஸ் வெற்றி பெற்றது. (கு-422)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அணி அறிவிப்பு

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற் கொள்ளவுள்ள நியூசிலாந்து அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முதலிரண்டு போட்டிகளுக்குமான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அஞ்சலோ மத்தியூஸ் தலைமையிலான 16 பேர் கொண்ட அணியாக இது அறிவிக்கப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள அணியில் அண்மைக்காலத்தில் இலங்கை சார்பாகத் தொடர்ச்சியாக விளையாடி வந்த ஷமின்ட எரங்க சேர்க்கப்படவில்லை.

புதுமுக வீரரான அஷன் பிரியஞ்சன, இலங்கை டெஸ்ற் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் திமுத் கருணாரத்ன ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர். எதிர்வரும் 10ம் திகதி ஆரம்பிக்கவுள்ள இந்தத் தொடரின் முதலிரண்டு போட்டிகளும் ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

அறிவிக்கப்பட்டுள்ள அணி:

அஞ்சலோ மத்தியூஸ், டினேஷ் சந்திமால், லஹிரு திரிமன்ன, திலகரட்ண டில்ஷான், குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்தன, சச்சித்திர சேனநாயக்க, அஜந்த மெண்டிஸ், திஸர பெரேரா, நுவான் குலசேகர, சுரங்க லக்மால், குசால் ஜனித் பெரேரா, திமுத் கருணாரத்ன, விமுக்தி பெரேரா, ரங்கன ஹேரத், அஷன் பிரியஞ்சன


# காலிறுதியுடன் கலைந்த கனவு

உலக ஸ்குவாஷ் சம்பியன் கிண்ணப் போட்டிகளில் இங்கிலாந்தின் மான்செஸ்டரில் நடந்து வருகிறது. இதில் இந்திய வீரர் சவுரவ் கோஷல் பின்லாந்து வீரர் ஹென்ரிக் முஸ்டோனினை தோற்கடித்து கால்இறுதிக்கு முன்னேறி புதிய சாதனை படைத்தார். உலக சம்பியன் ஸ்திவாஷ் போட்டியில் காலிறுதிக்கு முன்னேறிய முதல் இந்தியர் வீரர் என்ற பெரு மையையும் பெற்றார். ஆனால் அவரது பதக்க கனவு காலிறுதியுடன் முடிந்தது.


கொல்கத்தாவை சேர்ந்தவரான 27 வயதான கோஷல் காலிறுதி ஆட்டத்தில் எகிப்தின் ரமி ஆஷோரை எதிர் கொண்டார். 48 நிமிடங்கள் மட்டுமே நீடித்த இப்போட்டியில் 9-11, 5-11, 9-11 என்ற செட்கணக்கில் கோஷல் தோல்வியடைந்தார். இதுவரை தான் பார்த்த வீரர்களில் ஆஷோர் மிகத் திறமையான ஸ்குவாஷ் வீரர் என்று கோஷல் குறிப்பிட்டார்.

ஆஷோர் தொடர்ந்து 4 முறை இப்போட்டியில் காலிறுதிக்கு முன்னேறியிருக்கிறார். அதில் கடந்த ஆண்டும், 2008ஆம் ஆண்டிலும் வெற்றி பெற்றிருக்கிறார். அவருடன் கடைசியாக விளையாடிய 4 போட்டிகளிலும் கோஷல் வெற்றி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கடும் தண்டனையா? நிராகரிக்கிறது ஐ.சி.சி



பந்தைச் சேதப்படுத்திய டு பிளசிஸுக்கு கடுமை யான தண்டனை வழங்க வேண் டும் என்ற கருத்தை சர்வ தேசக் கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) நிராகரித்தது. டுபாயில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் தென்னாபிரிக்க வீரர் டு பிளசிஸ் பந்தைச் சேதப்படுத்தினார். இந்த விடயத்தில் டு பிள சிஸுக்குப் போட்டிக் கட்டணத்தில் 50 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது. இதற்கு அதிருப்தி தெரிவித்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, 2010ஆம் ஆண்டில் பாகிஸ்தான் அணியின் அப்ரிடி, ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் பந்தைச் சேதப்படுத்தினார் எனக் கூறி இரண்டு 20/20 போட்டியில் பங்கேற்க தடை விதித்தனர். இதைப் போன்று டு பிளசிஸுக்கும் அதிக தண்டனை விதிக்க வேண்டும் எனத் தெரிவித்தது. இதற்கு, போட்டியின் நடுவர் சரியான முறைப் படிப் தான் நடவடிக்கை எடுத்துள்ளார் என்றும், இந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது என்றும் சர்வதேசக் கிரிக்கெட் சபை எழுதியுள்ள பதில் கடிதத்தில் தெரிவித்துள்ளது. (த)




# நியூசிலாந்தை தோற்கடித்தது பங்களாதேஷ்

பங்களாதேஷுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், பங்களாதேஷ் அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை பங்களாதேஷ் அணி கைப்பற்றியுள்ளது. நேற்று முன் தினம் நடந்த 2ஆவது போட்டியை வெற்றிகொண்டதன் மூலமே அந்த அணி இந்தத் தொடரைக் கைப்பற்றியது. ஷேரே பங்களா மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 49 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றது. முதலாவது இலக்காக 63 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, 3 இலக்குகளை இழந்து 169 ஓட்டங்களுடன் பலமாகக் காணப்பட்ட போதிலும், அதன் பின்னர் இலக்குகளைத் தொடர்ச்சியாக இழந்திருந்தது. துடுப்பாட்டத்தில் பங்களாதேஷ் அணி சார்பாக தமிம் இக்பால் 86 பந்துகளில் 58 ஓட்டங்களையும், மொமினுல் ஹக், முஷ்பிக்கூர் ரஹீம் இருவரும் தலா 31 ஓட்டங்களையும், சொஹக் கஸி 24 பந்துகளில் 26 ஓட்டங்களையும், ஷம்சுர் ரஹ்மான் 54 பந்துகளில் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக கொரே அன்டர்சன் 40 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், ஜேம்ஸ் நீஷம் 53 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், கைல் மில்ஸ், நேதன் மக்கலம் இருவரும் தலா ஒரு இலக்குகளையும் கைப்பற்றினர். 248 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 46.4 பந்துப்பரிமாற்றங்களில் 207 ஓட்டங்களைப் பெற்று 40 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

5 ஓட்டங்களுக்கே முதலாவது இலக்கை இழந்த அவ்வணி, அதன் பின்னர் இலக்குகளை சீரான இடைவெளியில் இழந்து கொண்டிருந்தது. அதன் காரணமாக வெற்றியை நோக்கிப் பயணிக்க முடிந்திருக்கவில்லை.

துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக றொஸ் ரெய்லர் 82 பந்துகளில் 45 ஓட்டங்களையும், கொரே அன்டர்சன் 40 பந்துகளில் 37 ஓட்டங்களையும், கைல் மில்ஸ் 33 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும், நேதன் மக்கலம் 23 பந்துகளில் 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக சொஹக் கஸி 34 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், மஷ்ரபி மோர்தஷா 43 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், மொமினுல் ஹக் 2 இலக்குகளையும், அப்துர் ரஸாக் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். இந்தப் போட்டியின் நாயகனாக சொஹக் கஸி தெரிவானார். (த)

இந்தியக் கிரிக்கெட் வீரர்களின் பணக்காரர்கள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இந்திய அணியை பொறுத்த வரையில் கிரிக்கெட் வீரர்களுக்கு விளையாட்டு மட்டுமின்றி, விளம்பரத்தில் நடிப்பதிலும் வருமானம் கொட்டுகிறது. நிறைய விளம்பரங்களில் நடித்துக் கோடி கோடியாக சம்பாதிக்கிறார்கள். இந்திய கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் டோனி விளம்பரம் மூலம் அதிகம் சம்பாதிக் கிறார். தற்போது அந்த வரிசையில் இளம் வீரர் விராட் கோஹ்லி இணைந்துள்ளார். ஆனால் இந்தப் பணக்கார கிரிக்கெட் வீரர்கள் பட்டியலில் டெண்டுல்கர் முதலிடத்தைப் பிடித்துள்ளார். அவரது சொத்து மதிப்பு ரூ. 2895 கோடி. அவருக்கு அடுத்து 2ஆவது இடத்தில் டோனி உள்ளார். அவரது சொத்து மதிப்பு சுமார் 1050 கோடி ரூபா. அதற்கு அடுத்த நிலையில் யுவராஜ்சிங்(570 கோடி), ராகுல் டிராவிட்(375 கோடி), விராட் கோஹ்லி(300 கோடி) உள்ளனர். (த)

# பணக்கார வீரர்கள் பட்டியலில் முதல் இடத்தில் டெண்டுல்கர்



# எதிர்பார்ப்பை நிறைவேற்றுவேன்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ரசிகர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்வேன் என சச்சின் டெண்டுல்கர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக 200ஆவது டெஸ்ட் போட்டியை விளையாடிவிட்டுச் சர்வதேசக் கிரிக்கெட்டிலிருந்து விடைபெறவுள்ள அவர் மேலும் கூறியது:-

மேற்கிந்தியத் தீவுகளுடனான டெஸ்ட் தொடர் சிறந்த தொடராகும். அந்த அணி சிறந்த வீரர்களைக் கொண் டுள்ளது. அந்த அணிக்கு எதிராக எனது கடைசி இரு டெஸ்ட் போட் டிகளை விளையாடுவதற்காக ஆர்வத் தோடு காத்திருக்கிறேன். இந்தத் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி எனது நலன் விரும்பிகள் மற்றும் ரசிகர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்வேன் என நம்புகிறேன் என்றார்.

ஹரியானா மாநிலம் ரோடக்கில் நடைபெற்ற ரஞ்சி கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி 4 இலக்கு வித்தியாசத்தில் ஹரியானாவைத் தோற்கடித்தது. இதில் சச்சின் ஆட்டமிழக்காமல் 79 ஓட்டங்கள் குவித்து மும்பையின் வெற்றியில் முக்கியப் பங்கு வகித்தார்.

அது தொடர்பாகப் பேசிய அவர், இந்த மைதானத்தில் ஓட்டங்கள் குவிப்பது சவால் நிறைந்தது. இது பந்துவீச்சாளர்களுக்குச் சாதகமான மைதானம். அதனால் இங்கு ஓட்டங்கள் குவிப்பது எளிதல்ல. இங்கு 240 ஓட்டங்கள் என்ற இலக்கு மிகக் கடினமானது. மைதானமும் மெதுவாக இருந்ததால், இங்கு 240 ஓட்டங்கள் என்ற இலக்கு 280 ஓட்டங்களுக்கு நிகரானது. நான் எதிர் பார்த்தது போன்று தான் இந்த மைதானம் இருந்தது. ஹரியானா அணி மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. அந்த அணியினர் நல்ல சவாலை அளித்த தோடு, இந்தப் போட்டியை மறக்க முடியாத ஒன்றாக மாற்றினர். இதற்கான பாராட்டும் பெருமையும் ஹரியானா அணியைச் சேரும் என்றார்.

தனது கடைசி உள்ளூர் போட்டியில் விளையாடிய சச்சினின் ஆட்டத்தைக் காண ஏராளமான ரசிகர்கள் மைதானத்திற்கு வந்திருந்தனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாபகார்த்த முத்திரை வெளியீடு



கிரிக்கெட் சகாப்தம் சச்சின் டெண்டுல்கர் தனது 200வது டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெறுகிறார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிராக மும்பையில் நடக்கும் டெஸ்ட் போட்டியில் விளையாடி அவர் விடை பெறுகிறார். இந்த போட்டி எதிர்வரும்17ஆம் திகதி தொடங்குகிறது.

ஓய்வு பெறும் டெண்டுல்கருக்கு பிரமாண்ட வழியனுப்பு விழா நடத்த மும்பை கிரிக்கெட் சபை ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. இந்த போட்டியில் தங்க நாணயத்தில் நாணயச் சுழற்சி மேற்கொள்ளவும், அந்த நாணயத்தில் சச்சின் டெண்டுல்கரின் படத்தை பொறிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் டெண்டுல்கர் படத்துடன் கூடிய விஷேட தபால்தலையும் வெளியிடப்படுகிறது. ரசிகர்களுக்கு டெண்டுல்கர் படம் பொறிக்கப்பட்ட தொப்பி, முகமூடி அளிக்கப்படுகிறது.

இதை இந்திய கிரிக்கெட் வாரியத்துடன் இணைந்து மும்பை கிரிக்கெட் சபை செய்து வருகிறது.

கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் டெண்டுல்கர் தனது 199வது டெஸ்ட் போட்டியில் விளையாடுகிறார். அவருக்கு பெங்கால் கிரிக்கெட் சபை சார்பில் ஒரு அடி உயரமுள்ள வெள்ளியிலான மரம் நினைவாக வங்கப்படவுள்ளது. (ங-400)

# சச்சினின் சாதனையை முறியடிப்பார் கோஹ்லி



இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரரும், துணைத் தலைவருமான விராட் கோஹ்லி, நாக்பூரில் நடந்த ஆஸி.க்கு எதிரான 6 ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் 66 பந்துகளில் 115 ஓட்டங்களை விளாசி, பிரமாதப்படுத்தினார்.

ஒரு நாள் போட்டியில் அவரது 17ஆவது சதம் இதுவாகும். இதன் மூலம் அதிவேகமாக 17 சதங்களை (112 இன்னிங்ஸ்) எடுத்தவர் என்ற சாதனையை அவர் படைத்தார்.

இதற்கு முன்பு முன்னாள் தலைவர் சவுரவ் கங்குலி (170ஆவது இன்னிங்சில் 17ஆவது சதம்) இந்த பெருமையை தக்க வைத்திருந்தார். மேலும் இலக்கை துரத்திப்பிடிப்பதற்கான ஆட்டத்தில் 2ஆவது துடுப்பாட்டத்தில் கோஹ்லியின் 11ஆவது சதமாக அமைந்தது.

இவை அனைத்தும் வெற்றியிலேயே முடிந்திருக்கிறது. இந்த வகையில் சச்சின் டெண்டுல்கர் (14 சதம்) மட்டுமே அவரை விட முன்னிலையில் இருக்கிறார்.

இந்த நிலையில் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கரின் சாதனையை 24 வயதான விராட் கோஹ்லியால் முறியடிக்க முடியும் என்று இந்திய முன்னாள் தலைவர் சுனில் கவாஸ்கர் ஆரூடம் கூறியுள்ளார்.

இதுவரை 118 ஒரு நாள் போட்டிகளில் விளையாடியுள்ள கோஹ்லி அதில் 112 இன்னிங்சில் களம் இறங்கி 17 சதங்களுடன் 4919 ஓட்டங்களை எடுத்துள்ளார். இதே எண்ணிக்கையிலான ஆட்டத்தில் டெண்டுல்கர் 8 சதத்துடன் 4001 ஓட்டங்களையே எடுத்திருந்தார்.

இது பற்றி கவாஸ்கர் கூறுகையில், சாதனைகள் என்பதே முறியடிக்கப்படக் கூடியது தான். ஆனால் டெண்டுல்கரின் சில சாதனைகளை அதாவது 200 டெஸ்டில் பங்கேற்றவர், 51 டெஸ்ட் சதம் ஆகியவற்றை யாராலும் முறியடிக்க முடியாது என்பதை நாம் அறிவோம்.

ஆனால் விராட் கோஹ்லி விளையாடி வரும் விதத்தை பார்க்கும் போது, ஒரு நாள் போட்டியில் டெண்டுல்கரின் அதிக சதங்கள் (49 சதம்) சாதனையை முறியடிக்க வாய்ப்புள்ளது - என்றார். (ங-400)


தீபாவளியை முன்னிட்டு சென்னைக்கு
18500/= +Tax
4Days 3Night
விமான பற்றுச்சீட்டு, போக்குவரத்து தங்குமிட வசதி அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளது
Nation Popular Travels & Tours
#128, Brown Road, Jaffna
0214 920 920

கணக்கீடு பிரிவு II
திரு.பாலகஜன் B.com(jaf),H.N.Dip-in-Acc
A/L 2014 sat,sun- 4-5p.m | A/L2015 2-3p.m
paper class sat, sun- 3-4p.m
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
ஆரம்பம்:-03/11/2013 ஞாயிறு 2p.m
NEC- மணிக்கூட்டுக் கோபுரவீதி
(பெருமாள் கோயில் அருகில்)

தேவை
PhotoShopஇல் அனுபவம் உள்ள Graphic Disigner தேவை.
ஞாயிறு காலை-10 நேரில் வரவும்
லக்சுமி டிஜிற்றல் கலர் லாப்,
பிரதான விதி, சங்கானை. ( HNBஅருகாமை)
(C/136514) (12,3,6)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpuliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
கிழமை நாட்கள், பிற்பகல் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புகளும் ஆரம்பிக்கப்படவுள்ளது அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், உங்களின் அனுமதிகளுக்கு முந்துங்கள்
Batch1:03.11.2013
Batch2:04.11.2013
Batch3:09.11.2013
Batch4:11.11.2013

வெளிநாட்டு உயர்கல்வி
பகுதி நேர வேலைவாய்ப்புடன்
ஹோட்டல் முகாமைத்துவம் சிங்கப்பூர் மலேசியா
ஆகக்கூடிய கல்வித் தகைமைகள் O/L
■ மாதாந்த பகுதிநேரக் கொடுப்பனவு 100,000/-
■ பாடநெறிக்கட்டணம் 350,000/- 1 வருடம்
கட்டணம் 100% வீசா வந்தபின் வீசா 14 நாட்களில்
Hotline: 077 3013060
மலேசியாவில் உடனடி வேலைவாய்ப்பு
Spoken English with Grammar Duration : 3 Months
புதிய பிரிவுகள் ஆரம்பம் 09.11.2013
iCS Study Overseas
இல. 77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம் (பெருமாள் கோவிலுக்கு அருகாமையில்)
021 7306000 , 077 3013060
107, B-1/1 காலி வீதி, கொழும்பு-06,
011 434 3322 . 077 3013060

கடை விற்பனைக்கு
திருநெல்வேலி சந்தியில் அமைந்துள்ள 13' நீளமும், 12' அகலமும் கொண்ட கடை உடன் விற்பனைக்குண்டு. (39674) (12,3,6)
தொடர்பு: 077 305 3170

German Institute
German Swiss மொழிகள், தமிழ் மொழிபெயர்ப்புடன் Germanyயில் படித்து வந்த ஆசிரியரால் Embassyயில் கேட்கப்படும் A1 Certificateஇக்கு ஏற்றவாறு நடைபெறுகிறது.
10 Palaly Road Jaffna.
ஆரியகுளத்திற்கு அண்மையில்.
தொடர்புகொண்டு நேரில் வரவும்.
(39682) (12,3,6)
தொடர்பு: 077 160 4823





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.